Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்




மலர் 12 சௌமிய சித்திரை 30 ஸர் 6 (13-5-70) புதன்கிழமை இதழ் 91

## பொதுத் தேர்தலன்று

# குழப்பக் காரர்களை அடக்க பொலிசார் சுடலாம்

## 5,700 வாக்கு சாவடிகளில்

### கடும் பாதுகாப்பு நடவடிக்கை

(நமது சிறப்பு நிருபர்)

**நாட்டின் 5700 வாக்குச் சாவடிகளிலும் ஆயுதந்தாங்கிய பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர். குழப்பம் செய்பவர்களை நோக்கி எந்தநேரத்திலும் துப்பாக்கிப்பிரயோகம்செய்து கலவரத்தை அடக்க அதிகாரமும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.**

இலங்கையின் ஏழாவது பொதுத்தேர்தல், முன் நடந்து முடிந்த தேர்தல்களைப் போலல்லாது மிகவும் முக்கியத்துவம் அடைந்துள்ளது.

இத்தேர்தல் மிகவும் பரபரப்பான சூழ்நிலைகளைத் தோற்றுவித்துபரபரப்பான நிலையிலேயே முடிவடையும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இந்தக்கருத்து, கூட்டு முன்னணியினர் கவர்னர் ஜெனரலைக்கண்டு தெரிவித்த புகாருக்குப்பிறகு மிகவும் வலுவடைந்துள்ளது.

பொதுத்தேர்தலன்று எவ்வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பது பற்றியும். குறிப்பாக வாக்குப்பெட்டிகளின் பாதுகாப்புக்கும் தேவையான நடவடிக்கைகளையும் பற்றி தேர்தல் அதிகாரிகளுக்கு இவ்வாரத்தில் ஆலோசனைகள் தெரிவிக்கப்படவுள்ளது.

145 தேர்தல்தொகுதிகளிலும் கடமையாற்றும் வாக்குப் பெட்டிகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளைக் கொண்ட ஒரு மகாநாட்டை தேர்தல் கமிஷனர் அடுத்த சனிக்கிழமை கூட்டுகிறார்.

வாக்குகள் எண்ணப்படும் இடங்களுக்கு வாக்குப் பெட்டிகள் குறித்த நேரத்தில் போய்ச்சேராத பட்சத்தில், பாதுகாப்பு நடவடிக்கைக்காக உபயோகிக்கப்படும் பொலிஸ் 'கார்கள்' ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

---

யாழ். சைவ பரிபாலன சபை சைவமகாநாடு

# 'சைவத்தைப் பரப்ப சிந்தனை செய்து செயலாற்றுவோம்"

## தருமையாதீன தமிழ்புலவர் தலைமையுரை

யாழ்ப்பாணம், புதன்

சைவமக்களிடையே பண்டைப் பழக்கவழக்கங்கள் மறைந்துபோக, வேறுபல புதிய பழக்க வழக்கங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. ஒவ்வொருவரும் தம்மளவில் தாம் நில்லாது, வேறுபட்ட பல மக்களுடனும் கலந்து பழகவேண்டிய நிலையுள்ளது. இந்நிலையைப் பிறசமயிகள் நன்கு பயன்படுத்திக்கொண்டு தங்கள் கருத்துக்களை யாவரிடத்தும் எளிதில் பரவச் செய்கின்றனர். இக்காலத்தில் நமது சமயத்தை எவ்வகையில் பரவச் செய்வதென நன்கு சிந்தனை செய்து, அம்முறையில் செயலாற்றுதல் வேண்டும்.

இவ்வாறு சைவபரிபாலன சபையின் அகில இலங்கைச் சைவமகாநாட்டுக்குத் தலைமை வகித்து பேருரையாற்றிய, தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான், முதுபெரும்புலவர் திரு சி. அருணைவடிவேல் முதலியார் குறிப்பிட்டார்.

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலிருந்து நாவலர் திருவுருவப்படம், மங்கள இசை ஒலிக்க, பஜனைக் கோஷ்டிகளுடன், ஆலயத்தை வலம்வந்து காங்கேசன்துறை வீதி வழியாக நாவலர் ஆச்சிரமமண்டபத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

தலைவர் தமது தலைமை உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

''ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்கு முன் இங்கு தோன்றிய ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் அக்காலத்தில் நமது சமயத்தின் வளர்ச்சிக்கு ஆவனவற்றைச் சிந்தித்துச் செயலாற்றினார்கள்.

'நாவலர் வந்திலரேல் சைவசமயம் எங்கே' என்று கேட்கவேண்டிய நிலை உள்ளது. அந்த அளவிற்கு அவரது அரும்பெருந் தொண்டு நடைபெற்றது. ஆயினும் அவைகளை இன்று நாம் சொல்லிக் காலங் கழிப்பதால் பயன் ஒன்றும் விளையாது. இன்று செய்யத்தக்கவற்றை நாம் சிந்தித்துச் செயற்படுத்தல் வேண்டும்.

# 'ஆபாசத் தலைப்புகளால் வாசகரைக் கவராதீர்!"

## இரண்டாம் நாள் சைவ மகாநாட்டில் செந்தமிழ்மணி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

''இன்றைய தமிழ் மக்கள் விரும்பி ஆபாசச் செய்திகளையே படிக்கிறார்கள். ஆபாசமான தலைப்புகளைக் கொடுத்து சாதாரணமான வாசகர்களைக் கவருவதற்கு பத்திரிகைகளும் கங்கணங்கட்டி நிற்கின்றன.''

இவ்வாறு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் அகில இலங்கை சைவமகாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் கலந்து 'முருக இலக்கியம்' என்னும் பொருள்பற்றிப் பேசிய செந்தமிழ்மணி பொன் கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

தருமையாதீனப் புலவர் சித்தாந்தக் கலைமணி திரு. சி. அருணைவடிவேல் முதலியார் இரண்டாம்நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார், செந்தமிழ்மணி பொன் கிருஷ்ணபிள்ளை தொடர்ந்து பேசியதாவது:

தற்போது நடைபெறும் தேர்தலையொட்டி வெளிவரும் துண்டுப்பிரசுரங்களில் வேட்பாளர்களின் சீவியத்தின் அந்தரங்க விடயங்களைக்கூட பார்க்கமுடிகிறது. இன்றைய மக்களின் ரசனை கீழ்நோக்கியே செல்கின்றதென்பதையே இவ்விடயங்கள் விளக்குகின்றன.

அடுத்துப் பேசிய பண்டிதர் செ. சிவப்பிரகாசம் குறிப்பிட்டதாவது:

பண்களை அந்தந்த இராகத்தில் படிக்கவேண்டிய காலாகாலங்களில் படிக்க வேண்டும். மருந்துக்கு குடிநீர் போன்று பண்ணுக்கு ராகம் அமையும் பண்ணினால் அண்மையில் ஒருவர் திருவாவடுதுறையில் மழையைப் பொழிவித்தார்.

---

களத்தாவைக் கொலை வழக்கு

# மூன்று எதிரிகளுக்கும் மரண தண்டனை

கொழும்பு, புதன்

இலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய களத்தாவை இரட்டைக் கொலை வழக்கின் தீர்ப்பு நேற்றிரவு வழங்கப்பட்டது.

கொலைக்குற்றஞ் சாட்டப்பட்ட மூன்று எதிரிகளான அல்பிரட் டி. சொய்சா களு அல்பேர்ட், வில்லிமாமா ஆகிய மூவருக்கும் நீதியரசர் பண்டித குணவர்த்தன ஜூரிகளின் ஏகோபித்த முடிவின்படி மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் பி. கே. டி. பெரேரா, சந்திரசாகரா ஆகியோரைக் கொலை செய்ததாக எதிரிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

---

## 'பிஸ்கற்' சைவ உணவல்ல

(நமது நிருபர்)

தூய்மையான சைவ உணவை விரும்புவோர்பிஸ்கட்டைச் சாப்பிடக்கூடாது. இதிலே பிராணிகளின் ஊனசத்துக்களும் கலந்துள்ளன.

இவ்வாறு தருமை ஆதீன மகாவித்துவான் சி. அருணை வடிவேல் முதலியார் சைவ மகாநாட்டில் தெரிவித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# இலங்கை ஜனநாயகத்துக்கு ஆபத்தா?

ஜனநாயகத்துக்கு ஆபத்து என்று கூட்டணியினர் கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவாவிடம் தெரிவித்திருந்தனர். பொதுத் தேர்தலில் ஆளும்கட்சிக்குத் தோல்வியேற்பட்டால், ஆயுதப் படைகளின் மூலம் அல்லது அவைகளின் ஒரு பகுதியின் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தங்களுக்குத் தகவல்கிடைத்திருப்பதாகக் கூட்டணித் தலைவர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால் இதற்கு அவர்கள் எந்தவிதமான ஆதாரமும் இருப்பதாகச் சொல்லவில்லை.

இந்தப்புகார்பற்றிப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கவர்னர் ஜெனரலுக்கு பதிலனுப்பியிருந்தார். ஆயுதப்படைகளும், பொலிஸ்படையினரும்நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் விசுவாசமாகவே நடந்து கொள்வதாகப் பிரதமர் தெரிவித்திருக்கிறார். கூட்டணினரின் அச்சம்அர்த்தமற்றதென்றும் அவர் கூறியிருக்கிறார்.

''1966-ம் ஆண்டிலிருந்து ஜனநாயக ஆட்சியை விரும்பாத சில தீவிரவாதிகள் சதி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக எமக்குத் தகவல் கிடைத்தபடியே இருந்தது. அன்றுதொடக்கம் பொலிசார் தீவிர விசாரணைகளை நடாத்தியதன்மூலம் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அண்மைக்காலத்தில் கைது செய்யப்பட்ட சிலர் றிமாண்டிலும் வைக்கப்பட்டுள்ளனர். இது பற்றிய தகவல்களையே கூட்டணித்தலைவர்கள் மகாதேசாதிபதியிடம் தெரிவித்தனரோ தெரியவில்லை'' என்று பிரதமர் தமது பதிலில் தெரிவித்திருக்கிறார்.

காலியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய பிரதமர் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் குணம்தம்மிடமில்லையென்று கூறியதுடன் 'இந்தக் குணம் கூட்டணியினரிடம்தானிருக்கிறதென்றும் 1964-ம் ஆண்டு டிசம்பரில் கூட்டரசு கவிழ்ந்தபோதும் பின்னர் 1965-ம் ஆண்டுமார்ச்மாதம் தேர்தலில்தோல்வியடைந்த போதும் பதவியிலிருந்து விலகக்காலம் கடத்தினர் என்றும் சுட்டிக்காட்டிப் பேசியிருந்தார்.

## தேர்தல்கால பூச்சாண்டி

தேர்தல் சமயங்களில் 'ஜனநாயகத்துக்கு ஆபத்து' என்று பூச்சாண்டி காட்டப்படுவது இங்கு புதிய விஷயமல்ல. 1956-ம் ஆண்டுப் பொதுத்தேர்தல் நடைபெற்ற சமயத்தில் தேர்தல் முடிந்தாலும் சேர். ஜோன் கொத்தலாவலை பதவியிலிருந்து விலகமாட்டார் என்று ஆருடம் கூறப்பட்டது இப்படி ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் 'ஜனநாயக ஆட்சிமுடிந்துவிடும்' என்று அச்சம் தெரிவிக்கப்படுவதுண்டு.

ஒரு தடவைதிரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயகா ஒரு வைபவத்தில் பேசுகையில் ''ஓரளவு எதேச்சாதிகாரம் தேவை'' என்று குறிப்பிட்டிருந்தார். அது பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டது.

இம்முறை பொதுத்தேர்தலில் ஆளும் கட்சிக்குத் தோல்விகிடைத்தால், பதவியிலிருந்து விலகாமல் தொடர்ந்தும் ஆட்சியிலிருக்கவே முனையுமென்பதும்இதற்காக அது ஆயுதப்படைகளைப் பயன்படுத்துமென்பதும்தான் கூட்டணித் தலைவர்களின் அச்சம் அதாவது இங்கு ஜனநாயகம் செத்துவிடும் என்பதுதான் அவர்களது கவலை.

ஜனநாயகத்தைக் காப்பாற்றவேண்டிய கடமையும் பொறுப்பும் அவர்களுக்கும் உண்டு. இந்தவகையில் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சிறு சந்தேகம் தோன்றினாலும் அதுபற்றி எச்சரிக்கை செய்யவேண்டியது நியாயமே. ஆனால் அவர்கள் அச்சம் தெரிவித்ததற்குக் காரணம் என்ன; ஆதாரம் எதுவும் உண்டா? பாரதூரமானதொரு விஷயத்தை ஆதாரமில்லாமல், பொறுப்பில்லாமல் பொறுப்புள்ள தலைவர்கள் கூறுவார்களா?

சே குவேரா என்றபுரட்சியில் நம்பிக்கையுள்ள சிலர் தொடங்கியிருப்பதாகக் கூறப்படும் இயக்கத்துக்கும் இவர்கள் கொண்டுள்ள அச்சத்துக்கும் தொடர்பிருக்கிறதா?

## 'ஓநாய்' கதையாகலாம்

''ஓநாய். ஓநாய்'' என்று விளையாட்டுக்காகச் சத்தமிட்ட சிறுவனின் கதை போல இங்கும் ஜனநாயகத்துக்கு ஆபத்து என்ற பூச்சாண்டி ஒரு நாள் உண்மையாகிவிடுமோவென்று அஞ்சவேண்டியிருக்கிறது.

## 'ஓநாய்' கதை ஒரு நாளைக்கு உண்மையாகி விடலாம்

ஆசியாவிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று பெருமைப்படும் நாடு இந்தியா. பெரும் போராட்டங்கள் நடத்தி அரும்பெரும் தியாகங்கள் செய்து விடுதலையடைந்த நாடு இந்தியா. உலகிற்கே அகிம்சையை உணர்த்திய நாடும் இந்தியா. இப்போது அங்கு வன்முறை தாண்டவமாடுகிறது. சர்வாதிகார ஆட்சி அங்கு அவசியம் என்று அங்கு சிலர் குரல் கொடுக்கவும் தலைப்பட்டுள்ளனர். நாட்டு நலனில் அக்கறையுடைய ஒரு சர்வாதிகாரி இந்தியாவுக்கு இப்போது அவசியம் என்று கூறுகிறார் சிவசேனை இயக்கத்தின் தலைவர்.

இந்தியாவின் படைத்தளபதியாகவிருந்து ஓய்வு பெற்ற ஜெனரல் கே. எம். காரியப்பா, இந்தியாவில் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு, அங்கு இப்போதுள்ள அரசியல் நிலைமை சீராவதற்கு ஒரு சில வருடங்களுக்காவது ஜனாதிபதியினதும் இராணுவத்தினதும் ஆட்சி தற்காலிகமாக ஏற்படவேண்டுமென்று வலியுறுத்துகிறார். இப்போது அங்கு வாக்கெடுப்பு நடத்தினால் ஜனாதிபதி இராணுவ ஆட்சியை ஆதரித்து 90 சதவீதமான இந்திய மக்கள் வாக்களிப்பார்களென்று ஜெனரல் காரியப்பா நம்பிக்கை தெரிவிக்கிறார்.

பர்மாவில் நிலைமையைச் சீர் செய்யும்பொருட்டு தற்காலிக ஆட்சிப் பொறுப்பை இராணுவத் தளபதி ஜெனரல் நீ வினிடம் ஒப்படைத்த அப்போதைய பிரதமர் ஊநூ மீண்டும் ஜெனரலிடமிருந்து ஆட்சிப்பொறுப்பை ஏற்று அதிக நாள் அந்தப் பொறுப்பை நிர்வகிக்க முடியாமல் ஜெனரலே அதை ஏற்றுக்கொண்டதும் ஊநூவைச் சிறையில் வைத்ததையும் ஜெனரல் காரியப்பா அறியாதவரா?

## ஜனநாயகத்தில் வெறுப்பு

ஆனாலும் கட்சி அரசியல் போட்டிகளும் இதன் விளைவாக மக்களுக்கேற்பட்டுள்ள தொல்லைகளும் துன்பங்களும் அங்கு ஜனநாயக ஆட்சி முறையில் வெறுப்பையும் நம்பிக்கையின்மையையும் பலரின் மனதிலும் ஏற்படுத்தியிருக்கிறது.

நமது நாட்டில் பட்டினிச் சாவு மிகமிகக்குறைவு; அது இல்லையென்றே கூடச்சொல்லலாம். இலவசமாக மக்களுக்கு அரிசி கொடுக்கும் நாடு உலகில் நமதுநாடு ஒன்றுதான்என்றுபெருமைப்படலாம். ஆனாலும் வெறும் அரிசியைமட்டும் என்ன செய்வது? வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது; விலைவாசிகள் உயர்ந்துகொண்டேபோகின்றன. உள்ளவனுக்கும் இல்லாதவனுக்குமுள்ள இடைவெளி விரைந்துகொண்டே போகிறது.

இவை ஒரு கட்சிப்பிரச்னையோ ஓர் அரசாங்கத்தின் பிரச்னையோ அல்ல. இவை தேசீயப் பிரச்னை. தேசீய ரீதியில் இவைகளுக்குத் தீர்வு கண்டிருக்க வேண்டும் அல்லது காணமுற்பட்டிருக்கவேண்டும். மொழிப் பிரச்னை, இனப் பிரச்னையென்று வேறுபல பிரச்னைகளையும் உருவாக்கி அவற்றின்மூலம் அரசியல் ஆதாயம்பெறுவதற்கு நமது நாட்டு அரசியல் வாதிகள் பலரும் குறுக்கு வழியில் ஜனநாயகத்தைப் பயன்படுத்த முனைவதுதான் இங்கு ஜனநாயகத்துக்கும் ஆபத்து என்ற அபாயச் சங்கு இடையிடையே ஒலிக்கக் காரணம் என்று சொல்லலாம்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் கூட்டணியினருக்கும் திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் மற்றும் அரசியல் கட்சிகளுக்கும் உண்மையிலேயே ஆர்வமும் அக்கறையுமிருக்குமானால், ஜனநாயக ஆட்சிமுறைமீது மக்கள் அதிருப்திகொள்வதற்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றைச் சீர்செய்யமுன்வர வேண்டியது அவசியம்.

வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச்செலவு உயர்வுப் பிரச்னை, இன, மொழிப்பிரச்னை ஆகியவைகளுக்குத் தீர்வு காணவும் சகல மக்களும் இந்த நாட்டின் சுதந்திரத்தை அனுபவிக்கவும் இந்த அரசியல் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் வழிகண்டால் இங்கு ஜனநாயகத்துக்கு ஆபத்து நேருமென அஞ்சவேண்டியதற்கு இடமேயிராது.

---

## 'மலையகத்திலும், கொழும்பிலும், அபேட்சகரை ஏன் நிறுத்தவில்லை?'

### தமிழரசாரை குமார் கேட்கிறார்

கோப்பாய், திங்கள்

'அனைத்திலங்கையிலும் வாழும் தமிழ் மக்களுக்கும் அவர்களின் உரிமைகளுக்கும் போராடுவதாக முதலைக்கண்ணீர் வடிக்கும் தமிழரசுக்கட்சியினர் எதிர் வரும் பொதுத்தேர்தலில் மலையகத்திலும் கொழும்பிலும் தங்கள் அபேட்சகர்களை போட்டியிட நிறுத்தாததற்கான காரணத்தை விளக்கிக் கூறுமாறு பகிரங்கமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கடந்த 14 ஆண்டு காலங்களாக தமிழரசுக் கட்சியினர் தமிழர்கள் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காக எந்தவித சாதனைகளையும் செய்யவில்லை உண்மை, சமாதானம் ஆகியவற்றை அடிப்படை கொள்கையுடையதாக விளங்கும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியை திட்டித் தீர்த்ததே அவர்களின் சேவைகளாகும்'.

இவ்வாறு நேற்றுமாலை புன்னாலைக்கட்டுவனில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் தேர்தற் பிரசாரக் கூட்டத்தில்பேசுகையில் திரு.குமார் பொன்னம்பலம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், தமிழ்மக்களின்போதனா மொழிப் பிரச்னை, அரசாங்க ஊழியர்களின் பென்ஷன் பிரச்னையாவும் அரசியல் தலைவர்கள் அனைவரும் சேர்ந்து தீர்த்தவைகளாகும். இதுபற்றி அவர்கள் தங்களின் சாதனைகள் என பிரச்சாரம் செய்து வருகின்றனர். அவர்களின் அடிப்படைக் கொள்கையான சமஷ்டி அமைப்புக்கென இதுவரை எதுவித போராட்டமும் நடாத்தவில்லை. இதனை அவர்களே சமீபத்தில் ஒத்துக் கொண்டுள்ளார்கள். எனவே அவர்கள் தமிழர்கள் உரிமைகளைப் பெற்றுத் தருவார்களென நம்பியிருப்பது தவறானதாகும் என்றார்.

கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. பரமானந்தராசா, எஸ் சிவதாசன், செல்வி கங்காதேவி உட்பட பலர் பேசினர்

திரு எஸ் அப்பாத்துரை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் புன்னாலைக் கட்டுவன், ஈவினை வாசிகளால் திரட்டிய தேர்தல்நிதி அபேட்சகர் திரு குணரத்தினத்திடம் கையளிக்கப்பட்டது.


றொலறம்ஸ் ஸ்தாபனத்தாரின் விற்பனை

★ லங்கா மணிப்புரி சேலை
★ லங்கா வொயில் சேலை
★ லங்கா கைத்தறி சேலை
★ நைலெக்ஸ் சேலை
★ சேட்டுகள்
★ கவுண்கள்
★ கால்சட்டைகள்
★ பிளவுஸ்கள்

இன்னும் அநேக தினுசுகள் மலிவாகக் கிடைக்கக்கூடிய இடம்.

றொலறம்ஸ்

போன் 7099
46, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வீரசைவத்தை விளங்க வேண்டுமானல் வீரசாமான்யத்தில் பிரவேசிக்க வேண்டும்"

வீரகுரு சிவ. ஐயம்பிள்ளைக்குருக்கள்

21-4-70-ல் வெளியான 'ஈழநாடு' வார இதழில் "வீரசைவர் யார்" என்ற தலைப்பிலே திரு. க. ஏரம்பமூர்த்தியவர்கள் எழுதிய கட்டுரையைக்கண்ணுற்றேன் மூர்த்தி அவர்கள் அனுதி சைவமாகிய வீரசைவத்தை யார், அடி, அங்குல அளவுகொண்டு அதன் கால நீளத்தை அளவுபடுத்திக் கூற முனைவது மிக வேதனைக்குரிய விடயமாகும். சந்திரஜ்ஞானுகமம் படலம் 10-ல் சொல்லப்பட்ட அனுதிசைவம் ஆதிசைவம் பூர்வசைவம் மிசிரசைவம் சுத்தசைவம் மார்க்கசைவம் சாமான்யசைவம் ஆகிய எழுவகைச் சைவங்களும் வீராகமத்தில் சொல்லப்பட்டபூர்வசைவம், சுத்தசைவம், மார்க்கசைவம், வீரசைவம் ஆகிய சைவங்களும் வாதுளாகமத்தின் 10-ம் படலத்தில் சொல்லப்பட்ட சாமான்ய சைவம் மிசிரசைவம் சுத்தசைவம் வீரசைவம் ஆகிய சைவங்களும் வீரசாமான்யம், வீரவிஷேடம், வீரநிராபாரம் ஆகிய சைவங்களும் சிவாகமங்களில் சொல்லப்பட்ட இலட்சணங்களின்படி நடைபெறுகின்றதா என்பதை மூர்த்தி அவர்கள் நன்குசிந்திக்கவேண்டும். வேதங்களில் சொல்லப்பட்ட பிரம சத்திரிய வைசிய சூத்திரர் அனைவரும் வேதங்களில் சொல்லப்பட்டபடி நடக்கின்ருர்களா? மேற்படி இலைமறைகாய்போல் வடுணுச்சிரமிகளும் மேற்கூறிய சைவர்களும் தங்கள் தங்கள் ஆசாரங்களினின்றும் வழுவாது வாழ்பவர்களும் இருக்கிறுர்கள். இவைகள் இப்படி இருக்க மூர்த்தி அவர்கள் வீரசைவத்தை மாத்திரம் யார் கொண்டு அளவையிட முனைவது முறையா? வேத சிவாகமங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் இவ்வேத சிவாகமங்களில்கூறப்படும்சைவங்களின் பெருமைகளையும் பழைமைகளையும் ஒருபொழுதும் மறுககமாட்டார்கள். வேத சிவாகமங்களை மறுப்பவர்கள் அதில் கூறப்படும் சைவங்களின் பழைமையை மறுப்பதையிட்டு நாம் கவலைப்படுவதில் அர்த்தமில்லை.

அனுதி பக்த ரூபேண பக
வான் பரமேசுபர
பஞ்சா சாரம்ச்ச சட்
ரூபாண் யட்டாவரனு
திச
லிங்காங்க சாமரஸ்யம்ச
முக்தி மஹ ஜகத்குரு
(யோகஜ ஆகமம்)

வேதாகமங்களில் சொல்லப்பட்ட சதாசார இலிங்காசார கணுசார சிவாசார பிரத்தியாசாரங்களும் பக்தன், மகேசன், பிரசாதி, பிராணலிங்கி, சரண, ஐக்கிய சட்தலங்களுடனும், குரு, லிங்க, சங்கம, தீர்த்தப், பிரசாத, விபூதி, உருத்திராக்க மந்திரங்களுடனும் கூடிய யக்த இலிங்காங்க சாமரஸ்ய உண்மை முத்தியைக் கொடுக்கும் பரம்பரைச் சைவமே வீரசைவம் எனப்படும். சூட்சும ஆகமம் 7-ம் படலம் பரமேசுபராகமம் 7 ம் படலம் அனுதிசைவம் வீரசைவம் எனக்கூறுவதும் காண்க. இந்த வீரசைவம் பஞ்சாசாரியராலும் சதுராசாரியர்களாலும் மாணிக்கவாசக சுவாமிகளாலும் பசவர், அல்லமாப்பிரபுதேவர், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் முதலியோராலும் வெகு சிறப்புடன் பரிபாலிக்கப்பட்டுக்குன்றின் மீது வைத்த தீபம்போலப் பிரகாசித்தது.

## பஞ்சாசாரியர்

பரசிவனது சத்தியோசாத முகத்தினின்று இரேவணுராத்திரியரும் வாமதேவ முகத்தினின்று மருளாராத்திரியரும் அகோர முகத்தினின்று பண்டிதாராத்திரியரும் தற்புருடமுகத்தினின்று ஏகோராம ராத்திரியரும் ஈசான முகத்தினின்று விஸ்வாராத்திரியரும்உற்பவித்து இருக்கு, யசுர், சாம, அதர்வண அஜப வேதங்களுக்கு முறையே அதிகாரிகளாகி இஷ்டலிங்கதாரணம் பெற்று வீரசைவ சிம்மாசனங்களை உலகத்தில் ஸ்தாபித்தார்கள். மைசூர் கடூர் ஜில்லாவில் ரம்பாபுரி என்னும் ஷேத்திரத்தில் இரேவணுராத்திரியரது வீரசிம்மாசனமும் கர்நூல் ஜில்லாவில் ஸ்ரீசைவம் என்னும் ஷேத்திரத்தில் பண்டிதாராத்திரியரது வீரசிம்மாசனமும் பல்லாரி ஜில்லாவில் உஜ்ஜனிபுரி என்னும் ஷேத்திரத்தில் மருளாராத்திரியரது வீரசிம்மாசனமும் இமயமலையில் பத்ரிகேதாரம் என்னும் ஷேத்திரத்தில் ஏகோராமராத்திரியரின்வீரசிம்மாசனமும் வாராணஸி என்னும் காசி ஷேத்திரத்தில் விஸ்வாராத்திரியரது வீரசிம்மாசனமும் உள்ளன. இரேவணுராத்திரியர் முதலிய பஞ்சாசாரியர்கள் ஒவ்வொரு யுகத்திலும் வெவ்வேறு பெயரால் அவதாரஞ் செய்து வீரசைவசமயத்தை உத்தாரணஞ் செய்தனர் என வசபபுராணத்திலும் சுப்பிர போதாகமத்திலும் சித்தாந்த சிகாமணியிலும் கூறப்படுகின்றது.

யதா வீரசைவ
மதோத்பத்தி
ததா ஜெகத் உத்பத்தி

என்ற பிரம வாக்கின்படி கல்தோன்றி மண் தோன்ருக் காலத்தே பாகுபாடற்ற எல்லோர்க்கும் உரிய உலக சமயமாக விளங்கியது வீரசைவம். வேத சிவாகமங்களில் மட்டுமல்லாது சங்க நூல்களிலும் வீரசைவம் பழைமையை நன்கு அறியலாம்.

### வசவர்

வசவதேவர் வீரசைவத்தைத் தோற்றுவித்த அனுதி மூலாசாரியர்களைத் துதிசெய்யும் செய்யுளை வசவ புராணத்திலிருந்து ஈண்டு குறிப்பிடுகின்றேன்.

அருளு மல்லம தேவரி
ரேவணர்
மருள சித்தர் மலர்த்தாள்
வணங்கியே
தெருளி ராமைய
தேவர்க்கி றைஞ்சியே
பொருவில் பண்டிதா
ராத்திரியர்ப்
போற்றுவாம்

இதிலிருந்து வசவருக்கு முன் வீரசைவம் இருந்ததென்பது புலனுகின்றது.

### இலங்கையில் வீரசைவம்

இலங்கையில் விபீஷணன் காலத்திலும் பிற்காலத்திலும் வீரசைவம் பரவியிருந்தது. இலங்கையில் வீரசைவம் பரவியிருந்ததற்குப் பல சான்றுகளை இன்றும் காணலாம். இராவணனது ஒன்பதுகோடி இலிங்கப் பிரதிட்டையிலே மூன்று கோடி இலிங்கப் பிரதிட்டை வீரசைவக் குருவாகிய இரேவணுராத்திரியரது முன்னிலையிலேயே நடைபெற்றது. இன்று இலங்கையில் புதைபொருள் ஆராய்ச்சியின் பொழுது தென்படும் இலிங்கங்கள் இராவணன் காலத்து இலிங்கங்களெனவே கருதப்படுகின்றன வண்ணுர்பண்ணை குருக்கள்மடம் வீரசைவக்குரு பீடமாகவே இருந்து இன்று மறைபீடமாகி விட்டது. வண்ணுர்பண்ணை சாந்தையர்மடம் (ஆறுமுகநாவலர் பள்ளிக்கூடத்துக்கருகாமையில்)வீரசைவக் குருவின் சமாதியாகும். இக்காலத்துப்பிள்ளைகள் பேரன் பெயரைக் கூறத் தெரியாதவர்கள் போல வீரசைவத்தின் பிற்கால வளர்ச்சியைக் கூறுகின்றுர்களேயொழிய முற்கால சமய வளர்ச்சியைப் பற்றிக் கூறுபவர்கள் மிகச் சிலரே. இலங்கையில் வீரசைவம் அனுதிகாலந் தொட்டு இருந்ததென்பதை சித்தாந்த சிகாமணி மூலம் வாசகர்கள் கற்றுணரலாம்.

### வீரபத்திரகுரு சுவாமியும் வீரசைவமும்

வீரபத்திர குரு சுவாமி பஞ்சாசாரியர்களின் முதல்வராகிய இரேவணுசாத்திரியரது கோத்திர புருடராவார். இதனுலேவீரசைவமக்கள் அவரைத் தங்கள் குலதெய்வமாகவும் குருவாகவும் வழிபடுகின்றனர். இங்கு மட்டுமல்ல, பரதகண்டத்திலும் இவ்வுண்மையை நேரில் காணலாம். கும்பகோணத்திலுள்ள வீரசைவ

(13-ம் பக்கம் பார்க்க)

# பேயாட்டமா? நரம்புநோயா?

இக்காலத்தில் மக்களுக்குப் பலவித நோய்கள் ஏற்படுகின்றன. அவற்றில் உள நோயுமுண்டு. உடல் நோயுமுண்டு; உடலுள நோயுமுண்டு ஆனல் இக்கால மக்களில் பெரும்பாலோர்மற்ற நோய்களைவிட நரம்புப் பதற்றநோய்களினுல் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனல் இதற்குரிய காரணத்தை இவர்கள் அறியாமையினுல் - தவருன எண்ணங்களினுல் இவ்விதநோய்கள் உருவாகலாம் என்பதை உணராமையால்- இவ்வித எண்ணங்களினுல் இவர்கள் தமக்கு நோய்களை ஏற்படுத்திக்கொண்டனர். இவ்வித எண்ணங்களை மனதில் வைத்திருப்பதனுல் தொடர்ந்து நோயாளியாகவே இருக்கின்றனர். ஐயம், பயம் அல்லது தங்களைவிட்டு நீக்கமுடியாத எண்ண அமுக்கங்கள் ஆகியவற்றுல் ஓய்வு நேரங்களில் அனுபவிக்கக்கூடியமகிழ்ச்சி, வேலைசெய்யும்சக்திபோன்றவற்றை இவர்கள் இழந்துவிடுகின்றனர்; பகலில்வேலை செய்யமுடிவதில்லை; இரவில் அமைதியாகத் தூங்கமுடிவதில்லை. தங்களுக்கு என்னவென்று தெரியாத நினைவுகளால் மனதை அலட்டிக்கொள்வர். இவர்களுடைய நோய் வரவர மோசமாகிக் கொண்டேபோகும்; ஒருவித முன்னேற்றமும் காணப்படுவதில்லை. அவர்கள்எவ்வளவு ஒழுக்கமுடையவர்களாய் இருந்தபொழுதிலும், அவர்களுடைய இவ்விதநோய்களுக்குக்காரணம் அவர்களுடைய கற்பனையே என்றுபல நண்பர்கள் சொல்லக்கூடும். இது த்வறு. நரம்பு நோயினுல் பாதிக்கப்பட்டிருக்கும் ஒருவனுக்கு உன்னை நீயே முன்னேற்றிக் கொள்ள வேண்டும்" என்று சொல்வது அவ்வளவு புத்திசாலித்தனமல்ல. ஆனல் பலர் இப்படியான முறையிலேயே சொல்லி வருகின்றனர்.

நரம்புப்பதற்றம் ஒரு கற்பனையல்ல அதிலிருந்து உருவாகும் மனவெழுச்சிக்குழப்பங்கள் அல்லது அதோடு பல தடவைகளில் சேர்ந்துவரும் உடல்கோளாறுகள் (Physical Disorders) ஏற்படுவதில் இயற்கைக்குமாருன தொன்றுமில்லை. ஆனல் அதே நேரத்தில், உடலிலும் உள்ளத்திலும் இவ்வித நோய்கள் பல்வேறு நிலைகளில் எப்படித்தோன்றுகின்றன என்பதற்கு உண்மையான காரணங்கள் உண்டு. இவ்விதம் பாதிக்கப்பட்ட ஒருவன், தான் என்ன செய்கிறேன் என்பதைத்தெரியும் பொழுதும் எதைச் செய்கிறேன் என்பதை உணரும்

—இலங்கார்தீபன்—

பொழுது அதனை அளந்து கொண்டால், காரணத்தைத் தெரிந்துகொண்டால் அவனை அந்நோயிலிருந்து மீட்கலாம். நரம்புப் பதற்றத்துக்குக் காரணம் அறியாமையே யாகும். எமது மக்கள் நரம்புப்பதற்றத்தால் ஏற்படும் சில நடுக்கங்களை பேய் ஆடுவதாகச்சொல்வதுண்டு.

ஓர் இடத்தில் எழுபது வயதும திக்கக்கூடிய ஒரு வயோதிபமாது இருந்தார். அவர் மிகவும் சமய நம்பிக்கை உடையவர். அவருக்கு ஒருநாள் இரவு திடீரெனக் கை, கால், தலை- ஏன் உடல்முழுவதுமே உதறத் தொடங்கியது. உடனே அங்கிருந்த அவர் கணவன் உட்படஎல்லோரும் அம்மனுக்கு ஏற்பட்ட குறை என்றனர். பாதுகாப்புக்குக்கட்டிய நூலின் தவணை தப்பிவிட்டதென்றனர். உடனே பக்கத்திலுள்ள மந்திரம்தெரிந்தவரென்று கருதப்படும் ஐயர் ஒருவரை அழைத்து வந்தனர். அவர் வந்ததும், வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சை இன்னும் பல்வகைப் பொருள்களை வாங்கி, வேப்பிலைகொண்டு, ஏதோ மந்திரம்உச்சரித்தார். அது நின்றபாடில்லை. ஐயருக்கு ஆவேசம் வந்துவிட்டது. அந்த நோயாளியின் தலையில் வேப்பிலையால் அடித்தார் அதற்கும் நிற்கவில்லை. அங்கு இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அந்த வயோதிப மாதின் பேரப்பிள்ளையும் மருமகனும் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல விரும்பினர். அங்கிருந்தவர்களெல்லாம், "கடவுளுக்குஏற்பட்ட குறை. இதை அங்குகொண்டு போய் என்ன செய்வது" என்று தடுக்க முயற்சிசெய்தனர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் கொடுமையை அம்மாதின் கணவனுல் பொறுக்கமுடியவில்லை. எப்படியோ அவர்களுடைய எதிர்ப்புக்களுக்கிடையே அம்மாது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நோய்ஆய்வுக்கு (Diagnosis) உட்படுத்தப்பட்டு, ஊசி போடப்பட்டார். இருமணி நேரத்துக்குள் நரம்புப்பதற்றம் நின்று அவர் அமைதியடைந்தார்.

மேற்கூறிய வரலாற்றிலிருந்து எமது மக்கள் இவ்விருபதாம் நூற்ருண்டிலும் எவ்வளவு அறியாமை உடையவர்களாய் இருக்கின்ருர்கள் என்பதைநாம்அறிய வேண்டும்.

[illegible] எமது சொந்த மனிதத்

[13ம் பக்கம் பார்க்க)

# பாலைவனத்தில் பருக நீர் வேண்டுமா?

நீங்கள் பாலைவனத்தில் நீண்ட பிரயாணம் செய்துகொண்டிருக்கிறீர்களா? நாவரண்டு தாகம் எடுக்கிறதா? கவலை வேண்டாம் உங்கள் தாகத்தைஉடனே தணித்துக் கொள்ளலாம். மணல் விரிந்த நீண்ட கொடிய பாலைவனத்தில் மீண்டும் பிரயாணத்தைத் தொடரலாம். கீழே காணும் முறையைக் கையாண்டால் போதும்

மணலில் முதலில் சிறிது ஆழமாகக் குழிபறித்து பாவனச் சப்பாத்தியையோ, கொடியையோ குழியின் நாற்புறமும் போடுங்கள் பின்னர் ஒரு பிளாஸ்டிக் வாளியை அதன் மத்தியில் பொருத்தி வையுங்கள். வாளியின் மேல்பக்கத்தில் ஒரு பிளாஸ்டிக் பலகையால் மூடிவிடுங்கள். மூடுகின்ற அந்தப் பிளாஸ்டிக் பலகை வாளியைத் தொடாமலிருக்க வேண்டும் பிளாஸ்டிக் பல்கையின் உட்புறத்தில் வியர்வைபோல் நீர் அரும்பி முத்துமுத்தாக வாளிக்குள் ஒழுகும். பின்னர் தண்ணீர் அவசரத் தேவைக்குப் போதுமான அளவுக்கு நிறைந்துவிடும்,

வாளியின் உள்ளே ஒரு பிளாஸ்டிக் மெல்லிய குழாயைப் பொருத்திவிட்டால் மேலே இருக்கும் மற்ருெரு நுனியில் தண்ணீரைப் பெறலாம். உடனே அருந்தித் தாகத்தைத் தணித்துக்கொள்ளலாம். இந்த அரிய கண்டுபிடிப்பை விஞ்ஞானிகள் புதிதாகக் கண்டுபிடித்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமத்துறை

— கங்காபுத்திரன் —

## போதிநிழலில் பூத்தது புத்தொளி:—

ஆபாசக் கட்டுகளை அறுத்தெறிந்து அகிலத்து மக்களுக்கு ஆன்ம விடுதலைபெற்றுத்தர முயன்றவர் கபிலவஸ்து நாட்டின் இளவரசர் சித்தார்த்தன்.

அன்பும் பண்பும் அழகும்மிக்க மனைவி, அறிவும் தேஜசும் சுடரும் குழந்தை, 'இன்பம் இங்கேதான் உண்டு' என்று அறுதியிட்டுக்கூறும் அரண்மனை வாழ்க்கை இவையெல்லாம் பொய்யாய்ப் - பழங்கதையாய் போய் ஒழிந்துவிடும் என்ற உண்மையை உணர்ந்து வெளியேறியவன் சித்தார்த்தன். போதி மரத்தின்கீழ் இருந்து ஞானப்பேரொளி என்ற அர்த்தமுடைய புத்த பிரானுனார்.

ஜீவகாருண்யத்தை நெறியாக்கி வாழவேண்டுமென்ற அவரது போதனையே பஞ்சசீலமாகும். இந்தப் பஞ்சசீலக் கொள்கை உடனிருந்து வாழுகின்ற மேலான நிலைக்கு வித்திடக்கூடியது. இனம், மதம், நிறம் என்ற பேதமற்ற பொதுமையான இலட்சியத்துக்கு செல்லத் தூண்டுவது புத்தபிரானின் கொள்கை. அந்த மகான் ஞானம்பெற்றநரள் அண்மித்துவிட்டது. அந்த நாள் வைகாசி விசாகம். எதிர்வரும் பௌர்ணமி அவரை நமக்கு நினைவூட்டுகிறது. அந்த பேர்ஞானப்பிழம்பை இறைஞ்சி ஈழமணிநாட்டில் எல்லோரும் இன்புற்றுவாழ எண்ணுவோம்.

காலம், இடம், எல்லைகடந்து நிற்கும் புத்தபிரானின் ஞானப்பேரொளி நம்முன்னே இலட்சிய தம்பமாகட்டும்.

★

## 'மன்னிப்பு' வெறுஞ்சொல்லல்ல

தவறுகள் செய்வது மனிதஇயற்கை. ஆனாலும் தவறுகள் இல்லாமல் வாழுகின்ற வாழ்க்கைதான் சாலச் சிறந்தது. உலகத்தில் இன்றைய நடைமுறை வாழ்க்கையில் இதனை எவ்வளவுக்கு நம்மால் கைக்கொள்ள முடியும்? என்ற கேள்விக்கு விடைகாண்பது குதிரைக் கொம்பைத்தேடும் முயற்சியாகும். எனவே, தவறுகளைத் தவிர்த்துக்கொள்ள முயல்வதுதான் நமது இன்றைய வாழ்க்கையில் சாத்தியமாகவேண்டும்.

ஆங்கிலத்தில்உள்ள'சொறி'(Sorry)என்றசொல்லைதவறிழைத்தவர் உடனே சொல்லிவிடுவார். அந்த வார்த்தையின் தாற்பரியத்தை உணர்ந்தவர் மன்னித்துவிடுவார். மனிதனால் மன்னிக்கக்கூடிய தவறுகளுக்கும் அளவுப்பிரமாணம் வேண்டும். ஒருமனிதனுக்கு இன்னொரு மனிதன் பாரதூரமான தவறிழைத்துவிட்டால் சட்டம் கைகட்டிக்கொண்டு சும்மாயிருக்கமாட்டாது.

எனவே, 'மன்னிக்கவும்' என்ற சொல்லைமாத்திரம்வைத்துக்கொண்டு தவறையாம் திருத்திவிட முடியாது. மன்னிப்பு என்பது இதயபூர்வமாக வெளிவரவேண்டும்.

''உனது வலது கன்னத்திலடித்தவனுக்கு இடது கன்னத்தையும் திருப்பிக்கொடு'' என்கிறார் பாரச் சிலுவையைச் சுமந்து பாவிகளுக்காகப்பாடுபட்ட ஏசுநாதர்.

மன்னிக்கின்ற குணம் நம்மிடையே பெருகுமானால் மண்ணில் நல்லவண்ணம் வாழமுடியும்.

★

## கொசுவைக் கலைக்காதே!

தலைப்பைக்கண்டவுடன் கொசுக்களுக்கு ஜீவகாருண்யம் காட்ட முற்பட்டுள்ளோம் என்று நீங்கள் கருதிவிடாதீர்கள்.

ஊரிலுள்ள வடிகால்கள் மூலம் வழிந்துசெல்லும் கழிவுநீர் எங்காவது குட்டையிற் தேங்கிவிடும். அந்த அழுக்கையெல்லாம் ஆனந்தமான படுக்கையாகக்கொண்டு கொசுக் கூட்டங்கள் பல்கிப்பெருகிப் பரந்து வாழ்வது இயற்கை. இந்தக் கொசுக்களையெல்லாம் ஒரு பைத்தியக்காரன் கையை ஆட்டியாட்டிக் கலைக்க முற்பட்டால் கொசுக்கள் அந்த இடத்தைவிட்டு மூட்டைமுடிச்சுகளுடன் புறப்பட்டுவிடக்கூடுமென்று எதிர்பார்க்கலாமா? இல்லை! இன்றைய உலகில் விஞ்ஞான ரீதியில் கொசுக்களைக் கொல்லக்கூடிய மருந்துகள் ஏராளம் உள்ளன. ஒரே செக்கனில் ஒரு சொட்டு மருந்தைக்கொண்டு கொசுக்களைத் தீர்த்துவிடலாம். ஆனால் தேங்கிக்கிடக்கும் அழுக்குகளை மனித உழைப்புச் சக்தியினால் அகற்றிவிடுவோமானால் அப்புறம் அந்த இடத்தில் கொசுக்கள் வாழ வழிபிறக்காது.

இன்றைய சமுதாயத்தில் ஊழல்கள் என்ற அழுக்கில் எத்தனையோ மனிதக் கொசுக்கள் பெருகி வாழ்கின்றன. அந்தக் கொசுக்களை அகற்ற மருந்தேகிடையாது ஆனால் சமுதாயத்தில் ஊழல்களைச் செய்கின்ற மனித இதயங்களை, மனிதர்களே செம்மைப்படுத்தினால் கொசுக்கள் போன்றவர்கள்வாழஇடமேயிருக்காதல்லவா. இதை வரவேற்பவர்கள் எண்ணிக்கை பெருகவேண்டும். அப்போதுதான் நல்லதோர் சமுதாயம் நாட்டில்மலர்ச்சி பெறும்.

# சர்வோதயம் என்பது நிர்மாணப்பணி அரசியலுக்கு அதில் இடமில்லை

— தியாகி கோ. இராஜகோபால் —

(தலைவர், காந்தி சேவாசங்கம்)

[இலங்கையிலிருந்து பாரத நாடு சென்று தேசிய இயக்கத்தில் கலந்து சிறைசென்றவர்களுள் ஒருவர் தியாகி கோ. இராஜகோபால். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் இவர் தியாகிகள் வரிசையில் வைத்துக் கௌரவிக்கப்பட்டவர்.]

காந்தி மாகாத்மா உள்ள காலத்திலிருந்தே இந்துஸ்தான் தாலிமி சங்கம் காந்தி சேவாசங்கம் சர்க்கா சங்கம் போன்ற சங்கங்களின் (தற்போது சர்வோதய இயக்கங்கள் என்று அழைக்கப்படுவது) நிர்மாண ஊழியர்கள் (ConstructiveWorkers வேலை செய்து வந்திருக்கிறார்கள். நிர்மாண ஊழிய சபையாருடன் 1947 ம் ஆண்டு மார்கழி மாதம் முதற்பகுதியில் காந்தி ஜி தொடர்ந்து பல தடவை பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இதிற் கலந்துகொண்டவர்களுட் பலர், காந்திஜி கடந்த முப்பது வருடங்களாக நடத்திய பல அஹிம்சைப் போர்களிலும் பங்குபற்றி அனுபவம் வாய்ந்த வீரர்கள். அவர்களிற் சிலர் காந்திஜீ இந்தியாவில் அரசியல் வாழ்க்கை தொடங்கியது முதல் அவருடன் இருந்தவர்கள். இவற்றை தம் கூட்டாளிகளுடன் அவர் நடத்திய விபரமான இறுதிப் பேச்சுக்கள் எனலாம். ஆகையால் அவ்வறிவுரைகளுக்கு மற்ற எதற்கும் இல்லாத தனிமதிப்புண்டு. அவை அவர் கற்பனைசெய்திருந்த சுதந்திர இந்தியாவின் நிர்மாண வேலைகள் எவ்வாறுநடைபெறவேண்டுமென்பதையும் அதற்கும் அரசியலுக்கும் இருக்க வேண்டிய தொடர்பைப் பற்றியும் அவருடைய மனதில் இருந்த கருத்துக்களையும் விளக்கி 'நிர்மாணத் திட்டத்தின் எதிர்காலம் பற்றிக் காந்திஜி' என்ற தலையங்கத்தில் 1949-ம் ஆண்டு வைகாசி மாதம் வெளியான 'ஹரிஜன்' பத்திரிகையிற் காந்திஜியின் காரியதரிசியான திரு. பியாரேரால் அவர்கள் எழுதியிருந்தார்கள். அதில் காந்தி சேவா சங்கங்கள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்று காந்திஜி விரும்பினார் என்றும் குறிப்பாகக் காட்டியிருந்தார்கள். சுருக்கம் வருமாறு:-

### காந்தி சேவா சங்கங்கள்

ஊழியர்கள் அனைவரும் ஒரே அடிமரத்திலிருந்து கிளைக்கும் பல கிளைகளைப் போல வேலைசெய்துவரலாமென்று ஓர் ஆலோசனை கூறப்பட்டு அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு காலத்திற் காந்தி சேவா சங்கம் பலசேவை முயற்சிகளுக்கு ஆதாரமாயிருந்தமை குறிப்பிடப்பட்டது. ஆனால் காந்திஜி அதில் ஆபத்தைக் கண்டார். நிர்மாண ஊழியர்களின் சங்கங்கள் அதிகார அரசியலிற் புதுந்து காங்கிரசுடனோ அரசாங்கத்துடனோ அரசியல் அதகாரப் போட்டியிற் கலந்து கொள்வதை அவர் விரும்பவில்லை. 'அந்த சங்கம் இப்பொழுது இருக்கவில்லை. அது நிர்மாண ஊழியர்கள் அனைவரையும் ஒரே சங்கத்தின் கீழ் ஒன்று சேர்க்கவும் முயன்றதில்லை. அது நாட்டின் அரசியலிற் புகுந்து அதைத் தூய்மைப் படுத்துவதற்குச் செய்த முயற்சி அற்ப ஆயுளுடன் தன் தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று' என்றார் காந்தி.

ஆதாரக் கல்வியின் காவலரும், இந்தியக் குடியரசு ஜனாதிபதியாக விருந்தவருமானடாக்டர் சாகிர் உசேன் தொடர்ந்து விவாதித்தார், 'பல்வேறு சங்கங்களும் குறிப்பிட்ட தனித் தனி வேலைகள் செய்வதற்காக அமைக்கப்பட்ட தற்காலிக சபை போன்றவை: அவை எல்லாவற்றையும் ஒன்றாக இணைப்போமானால் அதிகார அரசியல் அதை அணுகாகல் அகற்றுவது சாத்தியமாயிராது'.

காந்திஜி - 'நிர்மாணஊழியர்களின் ஐக்கிய சங்கங்கள் அதிகார அரசியலிற் புக முயலுமானால் அம்முயற்சியேஅதன் அழிவைவிளைவிக்கும். இப்பொழுதோ அரசியலிற் சூதும் வாதும் நிறைந்துவிட்டன. அதிற் புகுவோர் எவரும் அந்த நோயினின்று தப்புவதில்லை. நாம் அதிலிருந்து அறவே விலகியிருப்போம். அதன் மூலமாக நமது செல்வாக்கு வளரும். நமது உள்ளத் தூய்மை வளர வளர சுய முயற்சி எதுவுமில்லாமலேயேமக்களின்மீது நமது செல்வாக்குப் பெருகும்.'

இதற்கு எடுத்துக்காட்டாக பூமிதான முனிவர் விநோபாஜி இப்பொழுது நம்முன்னே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் சர்வோதயம் - கடையனுக்கும் கடைத்தேற்றம் என்ற இயக்கம் விநோபாஜியின் கருத்துப்படி அகில இந்தியாவிலும் எப்படி நடைபெற்றுக் கொண்டிருப்பதை இப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். 1965-ம் ஆண்டு தை மாதம் தென்னகத்தில் இந்தியை எதிர்த்துப் போரிட கல்லூரி மாணவர்கள் கல்லூரியை விட்டுக் கிளம்பினார்கள். முற்றிலும் அரசியற் கலப்புடைய அந்தி எதிர்ப்பு இயக்கத்தில் தீயசக்திகளும் சேர்ந்து பல இடங்களில் தீ வைத்தார்கள். பொதுக் கட்டிடங்களுக்குச் சேதம் விளைவித்தார்கள். அதில் தாக்கப்பட்ட ஒன்று திருத்தணியிலுள்ள பொது நூல் நிலையம். தனக்குச் சொந்தமான இடத்தை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அந்த நூல்நிலையத்தை அமைத்துக் கொடுத்தார்கள், உலகத் தத்துவஞானியும் இந்தியக் குடியரசு ஜனாதிபதியாகவுமிருந்த சர்வபள்ளி டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள். இப்படி அராஜக செயல்கள் நாட்டில் தலைதூக்கியிருப்பதைப் பார்த்து வேதனைப்பட்டார்கள் விநோபாஜி அவர்கள் விளககக்குறைவினால் தமிழ்நாட்டில் இந்த விபரீதம் நடக்கிறதே என்று மிகவும் நொந்தார்கள் பாவே அவர்கள், அந்தராத்மாவின் அழைப்பின் பேரில் பலாத்கார சம்பவங்களை எதிர்த்து விநோபாஜி காலவரையறையின்றிமாசிமாதம் 12ம்திகதி உண்ணாவிரதம் தொடங்கினார்கள். இது தேசத்தை துக்கத்தில் ஆழ்த்தியது. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் உட்பட தலைவர்கள் பலர் உண்ணாவிரதத்தை விடும்படி விநோபாஜியை வேண்டிக் கொண்டார்கள் தமிழ்நாட்டில் சற்று அமைதி நிலவ ஆரம்பித்த பிறகு நான்காம் நாள் உண்ணாவிரதத்தை விநோபாஜி நிறுத்தினார்கள். எல்லோருக்கும் ஆறுதல் அளித்தது. இவ்வளவு கொடுமைகள் நடந்தும் அரசியற் தலைவர்களின் வாலைப் பிடித்து நிற்காது தனித்துநின்று பரிசுத்தமான வீரத்தினால் எப்படி காரியத்தை விநோபாஜி சாதித்தார் என்பதை நாம் உணர்ந்திருக்கின்றோம்.

'நிர்மாணப்பணி - சர்வோதயம் என்பது ஓர் அரசியல் தந்திரமோ போரின் முறையோ வல்ல. அது ஒரு வாழ்க்கை முறையையே கூறியிருக்கிறது. அதைஏற்றவர்களாலேயே அறிவினால் உள்ளத்தினால் பூரணமாக அதை நிறைவேற்ற முடியும்' என்று காந்திஜி கூறியிருக்கின்றார்கள். ஒரு பெரிய ஞானியின் வாழ்க்கையையும் உபதேசங்களையும் சில சூத்திரங்களாக வகுக்க நாம் முனையும் போது அவை அந்த ஞானியே கருதாத சில விஷயங்களையும் அவற்றை அவர் கேட்டால் நடுங்கிப்போய் விடக்கூடியயனவாயும் மாறிப் போய்விடுவது இயற்கை. அவைகளை அறியாமலே அந்த ஞானியின் சிறந்த சீடர்கள் தமது குருவின் தத்துவங்களை மிக நகைப்பிற்கிடமான ஒன்றாக ஆக்கிவிட வேண்டாமென்று தாழ்பணிந்து கேட்டுக் கொள்ளுகின்றேன். சர்வோதய இயக்கத்துக்கு முன்னணியுமில்லை. பின்னணியுமில்லை. அரசியல் கலப்பில்லாத ஒரே அணியில் நின்று கடையனையும் கடைத்தேற்ற பணி செய்வோமாக!

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காஸ்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கோழிமுட்டைக் குறளி

"கடவுளே பிள்ளையாரே......கந்தசாமியாரே... இதென்ன மாயப்?... இதென்ன கூத்து!... இதென்ன புதினம்!...எனக்கொண்டுமாய் விளங்கேல்லை. இளையாச்சி இளையாச்சி......உண்ணுணை உந்தக் குடத்தைக் கிணத்தடியிலை வைச்சிட்டு இதிலையொருக்கா ஓடியா... ஓடியந்திட்டுப்போ...ஒரு அவசரம்..."

"என்னக்காள்"...

"இப்படியொருக்கா இதிலை இந்த மாலுக்குள் என்னேடைவா...வடிவாய்ப் பாரிந்தப் புதினத்தின்ரை மாதிரியை..."

..என்னக்காள்...... கோழிமுட்டையள்..."

"ஓ கோழிமுட்டையள் தான்...பின்னை வேறை ஏதோ முட்"

"இதென்ன வியாழக்காள் எனக்கிதின்ரை மாதிரியொண்டும் விளங்..."

'இந்தப் புதினத்தை என்னத்தைப்பேச இளையாச்சி... என்ரை கோழியளெல்லாம் எப்பவோ அடையிலைபோட்டுதுகள்...ஆக... பெரிய வருத்தம் வந்து தப்பி நிண்டதொரு கிரிக்கோழி...அதுதான்... முட்டை நாப்பது ஐம்பது சதம் வித்துக்கொண்டுவந்த அந்த அருந்தலான நேரத்திலும் இட்டுக்கொண்டுவந்த கோழி... இப்ப கொஞ்ச நாளாய் அதுகும் சும்மா வீண்கோழிதான்...பின்னை என்ரை வீட்டுக் கோழியள் முட்டையிட்டுத்தள்ளுற புதினமெல்லாம் இப்படியிருக்க...இப்ப இதென்னண்டு என்ரை வீட்டுக்குள் இவ்வளவு முட்டை சேர்ந்த புதுமை.-'

"அதுதானே. அதென்னண்டெண்டு எனக்கும் பெரிய அரிசியமாய்க்கிடக்குது!...இதாரோ மனிசர் தானே இப்படி"

"இதுபின்னை மனிசரில்லாமலுக்கு... ஆடு மாடு பேய் பிசாசு செய்யிறதா?"

"ஒரு கதையக்காள்... காலத்தாலை ஈசுவரி உங்கடை வீட்டுப்பக்கமாய்-"

"எப்...எப்ப வந்தவள்...'

"இண்டைக்கிக் காலத்தாலை..."

...' அப்பிடியவள் நானிருக்கிறபோது அங்கு வரேலை..."

"...........?"

..."நீயவளை... எந்நேரம் போலை கண்டனீ?"

"நானொரு...ஒம்பது ...ஒம்பதரை மணிபோலை கண்டனுன்...நானிப்பிடித்துலைக் கோவெண்டு கேக்க உங்கடை வீட்டைதான் ஒரலுவலாய்ப் போறனெண்டு சொன்னவள்...'

...".........?......"

"இப்ப வழக்குப், புறாவாச்சுது... என்னக்காள்... அந்த ஈசுவரியாகிற பப்பிடுசிங்கிதான்... உங்களுக்கிந்த விளையாட்டுச் செய்திருக்கிருள்... கோழிமுட்டையிலும் செய்கை செய்யலாமல்லே உவன் வண்ணரப்பண்டாரியின்ரை குடும்பத்துக்கும் ஆரோ சிங்களவங்கள் கோழிமுட்டையிலை செய்கை செய்துவிட்டல்லோ அவன்ரை குடும்பமும் இவ்வளவிலை பாடோரியாய்ச் சிரழிஞ்சு போனது...வாறன் இப்ப உதிலை எத்தினை முட்டை கிடக்கு... ஒண்டு... இரண்டு... மூண்டு... ஒருமிக்கப் பத்துக்கிடக்குது...இதை நீங்கள் கையாலை தொட்டுப் போடாதேங்கோ ..பேந்துங்கடையொரு கயிட்டகாலத்துக்கு... அவள் செய்த செய்கை உங்கள்மேல் தாவிஞலும் தாவி"

"கொஞ்சம் பொறு இளையாச்சி...எனக்கு சதிரமெல்லாம் நடுங்கிப் பதறிக் கொண்டுவருகுது"

"பாத்தியளோ... பாத்தியளோ- இப்பவே அதுங்களிலை தாவிவிட்டுது"

"ஐயோ என்ரை பிள்ளையாரே...கந்தசாமியாரே... வயிரவரே... அம்மாளாச்சி"

"அதொண்டுஞ் செய்யாது...அதொண்டுஞ் செய்யாது...நீங்கள் பயப்பட்டு உயிரைவிட்டிடாதேங்கோ"

'என்னடி இளையாச்சி... அவளுனக்கு ... இப்பிடித்தான் எங்கடை வீட்டைதான் ஓரலுவலாய்ப் போறனெண்டு நல்ல நம்பிக்கையாய்ச் சொன்னவளோ?"

"என்னக்காள் உங்கடை கதை—எனக்கவ்வளவிலை கண்குருடோ காது செவிடோ..."

# குறளி

தாயே மாரியாச்சி...!நாங்களினி எங்கைபோய்விழ... எங்கடை குடியுமினி வண்ணரப் பண்டாரி குடியைப் போல அழிஞ்சு துலைஞ்சு-"

"நான் வாறனக்காள் எனித்தான் தண்ணியள்ளிக் கொண்டு போய் உலவைச்சாலென்ன அல்லது என்ன செய்தாலென்ன..."

"காச்சி மூட்டிவைச்சு போட்டொருக்கால் இதிலை ஓடியாறியோ இளையாச்சி"

"அதுக்கென்ன நான் வாறன்... நீங்கள் சும்மா விசர்ப்பயம் பயப்பிடாதேங்கோ... நான் வாறன்."

"......இளையாச்சியையுமிப்ப இதிலை கடவுள்தானே கூட்டியந்துவிட்டவர்... இல்லாட்டி நானுமிப்ப எத்தனை பேரை நினைச்சு முடிக்க வேணும்... பிள்ளைகளின்ரை பாடுசேதம் முழுக்கப்பாத்து அதுகளையும் பள்ளிக்கனுப்பிப்போட்டு... தோட்டத்திலை அவருக்குமிந்தச்சாப்பாட்டைப்போட்டுக்கொண்டுபோய்க் குடுத்துப்போட்டு இந்த ஐஞ்சாறுபிடி கீரையையும் ஐஞ்சாறு தக்காளிப் பழத்தையும் உதிலை கொண்டோடிப்போய் ஒரு நாலு பணத்துக்கு வித்துப்போட்டு ஆவாவெண்டோடி வாறதுக்கிடேலைதானே இங்காலை காத்திருந்து வினைவைச்சிட்டுப்போயிருக்கிருளந்த ஆந்தை முழிச்சி... உவளை நாங்களும் இவ்வளவு காலமும் இதிலை இருந்தமெண்டு என்ன கேட்டனுங்கள்...... இல்லாட்டி உவளுக்கு நாங்களேதும் குடுக்குமதியோ... எங்கடை வீட்டுக்கு ஒரு நாளைக்குப் பத்துத்தரம் வாருள்... போருள்... எங்களோடேயும் பிள்ளையளோடேயும் நல்லாக் கதைச்சுச் சிரிச்சுப் பேசிப் பறையிருள். ஏதும் தண்ணிவென்னி குடுத்தால் வாங்கிக் குடிக்கிருள் ...போருள்... இவ்வளவு காலத்திலையும் நாங்கள் அவளிட்டை ஒரு சுண்ணும்புக் கட்டிக்குத்தன்னும் கடமைப்பட்டிருக்கமாட்டம் ... இன்னும் அவளுககுத்தான் எங்கடை வீட்டான் முழுகச் சுவறியிருககும்...இப்படியாய் எங்களோடை தேனும் பாலுமாய் நடந்தவளுககு இருந்ததுககிடேலை எங்களிடம் அவளுககு வந்த அழலென்ன... நாங்கள் பிள்ளை குட்டியளோடை கொஞ்சம் முழிப்பாயிருககிறதும் அந்த மலட்டுத்தாடகைககு என்னவோ... என்னவோ எல்லாம் செய்யும்தானே..."

சொல்லமுடியாத மனப்பயத்தோடு இப்படியெல்லாம் தன்பாட்டிற்கிருந்து அன்னம்பாறிய விசாலாட்சி மனம் பொறுககாதவளாய் பெரிய மன அங்கலாய்ப்புப் பிடித்த ஜீவனாக இதைப்பற்றிக் கதைப்பதற்காக எழுந்து இளையாச்சியின் வீடு தேடி ஓட்டமும் நடையுமாகப் போய்விடுகின்ருள்.

"...மெய்யே இளையாச்சி.. அவள் எங்கடை வீட்டைதான் போறனெண்டு சொன்னது உனக்கு நல்லவடிவாய்த் தெரியுமோ — என்னடியாத்தை சிரிக்கிருய்...?நானவளைச் சும்மா லேசிலே விடமாட்டேன்... நீங்களார் என்ன பறைஞ்சாலென்ன... என்னைப் பொல்லாதவளெண்டு சொன்னுலென்ன... நாலு ஆமான மனிசற்ரை முகதாவிலை நிறுத்தி அவளைக் கிழியக்கிழியக்கேட்டுப் போட்டுவிடாட்டிக்கி... என்னை ஒருமுறையான பிதாவுக்குப் பிறக்காதவளெண்டு எல்லாரும் நினையுங்கோ... நான் வாறன்"

என்றபடி பொல்லாத மனவிசர்பிடித்தவளாக வெளிக்கிட்டுப்போன விசாலாட்சி சாந்தி கிடைக்காமல்பெரும் வன்மம்கொண்ட ஆத்மாவாக ஆவியாக பசாசாகபாதி வழியில் திரும்பி மறுபடியும் இளையாச்சியின் வீட்டிற்குள் நுழைந்துவிடுகின்ருள்...

"எடியேய் இளையாய்ச்சீ... எடியே...ஒருக்கா... இப்பிடியே வாடீ... உன்ரை முன்னுலைவிட்டு அவளை எண்பி."

"ஆத்தே அக்காள்... அக்காள் உதுமெத்தச் சரியில்லாத வேலை... என்னையேன் வீணுய்...உதுக்கை கொழுவி விடுகிறியள்...உங்களுக்கிப்ப சொன்னதுதான் பெரிய பிசகாய்ப்போச்சு-"

"எல்லாரும் தாங்கள் தப்பினுல் காணுமெண்டு நினைக்கிற சனங்களாய்த் தானிருக்கு"-வாயினுல் ஒரு வெட்டுவெட்டியபடி மூஞ்சையை முப்பத்திரண்டு முழத்தில் நீட்டியவளாய் விசைத்தபடி இளையாச்சி வீட்டிலிருந்து வெளியேறிப் போன விசாலாட்சி பூமாதேவியின் பரந்த மார்பில் கோபங்கொண்ட அரக்கியாகஎடுத்துவைத்த காலடிகளை நிலத்தடியில் ஊன்றி உதைத்து மிதித்தவளாகத் தன்னுடைய வீட்டினுள் சென்று நுழைந்ததும் முதல்வேலையாக ஈசுவரிக்குச் செருப்படி கொடுத்ததுபோலச்சரியானதொரு பாடம் படிப்பிக்கநினைத்தாள் தான் வழமையாகக் கோழிமுட்டைகளை வைக்கும் இயத்திற்குள் ஈஸ்வரி கொண்டு வந்து வைத்துவிட்டுப்போன அந்தக் கோழிமுட்டைகளை அப்படியே அந்த இயத்தோடு ஈஸ்வரி வீட்டுமுற்றத்திற்குக் கொண்டுபோய் அவள் பார்க்கக்கூடியதாக தொக்கடியென நிலத்தில் போட்டுடைத்துவிட்டு வந்துவிடவேண்டுமென்று மனதில் முடிவுகட்டிக்கொண்டு அந்த முட்டைஇயத்தை அப்படியே தூக்கிஎடுத்துக்கொண்டு

(12-ம் பக்கம் பார்க்க)

— தையிட்டி அ. இராசதுரை

படிப்பினைக் கதை

# சின்னனும் கழுதையும்

கஜராஜபுரத்துக்கு பத்து கல் தூரத்தில், வன்னிக்குப் போகும் பாதையில், கொம்புமுறித்த குளம் என்னும் சிற்றூர் ஒன்றுண்டு. அங்கே சுமார் நாற்பது குடிகள் இருந்து விவசாயம் செய்து பிழைத்துவந்தன. இவர்களுக்கு சின்னன் என்ற வண்ணன் சலவைத்தொழில் செய்துவந்தான். அவனுக்கு மதியம்திரும்பிய வயதாகி விட்டபடியால், கூட வேலை செய்வதற்கு வேறு ஆட்பலம் இல்லாத காரணத்தினுல், ஒரு கழுதையைத் தனக்குத் துணையாக வைத்துக்கொண்டான். அதுவும் ஒரு கிழக்கழுதை அதன் பெயர் கர்த்தபநாதன்.

காலையில் எழுந்ததும் சின்னன் கொம்புமுறித்த குளத்திலுள்ள வீடுகள்தோறும் சென்று அழுக்குத் துணிகளைச் சேர்த்து பொதியாகக் கட்டி கர்த்தபநாதனின் முதுகில் சுமத்திக்கொண்டு குளக்கரைக்கு போவான். மறுபடியும் சாயுங்காலம் வெளுத்த துணிகளை எடுத்துக்கொண்டு இருவரும்வீடு திரும்புவார்கள்.

சின்னனுக்கு கர்த்தபநாதன்மீது அலாதியான பற்றுதல் இருந்தது. ஒவ்வொருநாளும் தவருமல் அதற்குப்புல்லும் கொள்ளும் பிண்ணுக்கும் வயிருர உண்ணக் கொடுப்பான். கழுதையும் அவனை மனமார நேசித்தது. கிழமையில் இரண்டு நாளைக்கு அதற்கு உடம்பு தேய்த்து குளத்தில் குளிப்பாட்டுவான். சில சமயம் வாசச்சவர்க்காரமும் தடவுவான்.

இப்படி இருந்துவரும் நாளில் ஒருநாள் துயரம் தரும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. பக்கத்துக் கிராமத்திலுள்ள வண்ணார்சிலர் சின்னனின் செல்வத்தையும் சந்துஷ்டியையும் கண்டு பொருமைப்பட்டு, கொம்புமுறித்த குளத்தில் அவன் செலுத்திவந்த புரோகிதத் தனியுரிமையைக்கவர எண்ணி, குளத்தடியில் அவனும் கழுதையும் தனித்திருக்கும் சமயம்பார்த்து அவன் மீதுபடையெடுத்துவந்தனர்.

இதையறிந்த சின்னன் கழுதையிடம் ஓடோடியும் வந்து சொல்வான்: 'ஓ, கர்த்தபநாதனே! நமக்கு ஆபத்து வந்துவிட்டது. பக்கத்தூரிலுள்ள எனது பகைவர் என்னை இவ்வூரிலிருந்து விரட்டிவிடும் நோக்கத்துடன் படையெடுத்து வருகிருர்கள். நானே தனிமனிதன். வேறு ஆள்துணை இல்லாதவன்; என்னுல் தனித்து நின்று அவர்களை சமாளிக்க முடியாது. ஆகையால் இவ்விடத்தைவிட்டு ஓடிவிடப் போகிறேன் இத்தனை வருடங்களாக எனக்கு உதவியாயிருந்து தொண்டுபுரிந்த உன்னைவிட்டுப்பிரிய எனக்கு மனம்கேட்குதில்லை. நீயில்லாமல் நான் அரைக்கணமும் உயிர்வாழமுடியாது. ஆகையால்நீயும் என்னுடன் கூட வா. நாங்கள் இருவரும் இன்னெரு ஊரில் தஞ்சம் புகுந்து அங்கே நமது தொழிலை நடாத்துவோம்?'

இந்த உருக்கமான வசனங்களைக்கேட்ட நீள்செவியன் நிதானமாகச் சிறிது நேரம் ஆலோசித்த பின்னர், ஒருகனைப்பு. கனைத்துவிட்டு கூறியதாவது: 'கேளாய். சின்னனே! நீர் சொன்னது யாவும் சரியே. ஆயினும் என்னைப் பொறுத்த வரையில் நான் உம்முடன் வருவதுமொன்றே, இங்கேயே தங்கி நிற்பதுவுமொன்றே. எங்கிருந்தாலும் பொதி சுமப்பதே என் தலையெழுத்து. உமது பகைவர் வந்தாலும் அவர்களுக்குப் பொதி சுமககவேண்டியது தான். உம்மோடு வந்தாலும் அதேகதிதான். எனக்கு 'இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன', இரண்டும் ஒன்றுதான். இந்தத் தள்ளாதவயதில் உம்மோடுசேர்ந்து ஓடிக்கொள்ளவும் உடம்பு இடம் கொடுக்காது. ஆகையால் என்னை மன்னித்துவிடும்.'

இதைக்கேட்ட சின்னன் மறுபேச்சின்றி கழுதையை விட்டுவிட்டு ஓடிப்போயினுன்.

படிப்பினை:

உள்ளதொழிய ஒருவர்க்
கொருவர் சுகம்
கொள்ளக் கிடையா
குவலயத்தில்.

[ வி. என். பி. ]

ரூபா 1000 தொடக்கம்
ரூபா 10000 வரை
நிரந்தர சேமிப்புக்கு
வருடம் 9 சதவீத வட்டி
கொடுக்கப்படும்
முழுவிபரங்கட்கு:-
தம்பி அன் கோ
வண்ணர்பண்ணை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உலகில் தொன்மையான உண்மைகள் இரண்டு: சத்தியம் ஒன்று; மற்றது அகிம்சை"

## — மகாத்மா காந்தி —

இன்று சாயந்தரம் நீங்கள் எனக்கு உவந்தளித்தளித்த உபசராப்பத்திரத்துக்கு எனது மனமார்ந்த வந்தனம் உரியதாக. இந்த அழகிய இலங்கைக்கு என்னை வரும்படி செய்த பெருமை உங்கட்கேயுண்டென்று நீங்கள் கூறியது முன்றும்உண்மையே. உங்கள் காரியதரிசி (திரு. எஸ். ஹண்டி பேரின்பநாயகம்) என்னை, பங்களூரில் சந்தித்தபோதுஎன்னை இலங்கைக்கு வரும்படி அழைத்தனர். அகில இந்திய கதர் இயக்கத்துக்கும் பணம் அங்கும் சேர்க்கலாமென்று அவர் கூறியதும் நான் இசைந்து இங்கு வந்துள்ளேன். இதுவிஷயமாகப் பெருமையுங்கட்கு ஆக்கிக்கொண்ட நீங்கள், எனது இலங்கை யாத்திரையில் ஏதாவது இடையூறு அல்லது விபத்து ஏற்படினும் அதன் பொறுப்பினையும் நீங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இன்று வாலிப மகாநாட்டினர்க்கு எவ்விதமான செய்தியை வழங்கலாமென்று யோசிக்கின்றேன். உங்கள் ஸ்தாபனத்தின் வரலாறு நன்ருக எனக்குத் தெரியாது. இங்கு இப்போது சமுகமளித்துள்ள நீங்கள் எக்கட்சியினர், எவ்வித கொள்கையுடையீரென்பதும் நான் அறியேன். இந்த வாலிப மகாநாட்டினரின் அடிப்படைக் கொள்கைகளை உங்கள் தலைவர் சிறிது கூறியுள்ளார். அவர் கூறிய விஷயங்களைக் குறித்துஎனது மனத்தில் தோற்றும் சில அம்சங்களை நான் உங்கட்கு கூறப்போகின்றேன்.

### கலாச்சாரப் புனருத்தாரணம்

உங்கள் மகாநாட்டின் பிரதம நோக்கம் புராதனகலாசாரத்தை புனருத்தாரணஞ் செய்வதே என்று நான் உணர்கின்றேன். ஆகவே பழைய கலாச்சாரங்கள் எவை எவை எவையென்பதை முதலாவதாக நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். அவைகளை எல்லா இளைஞர்களும், அவர்கள் எந்த மதச்சார்பை உடையவர்களாக இருந்தாலும் சரி, ஆர்வத்தோடு முன்வந்து நன்மனத்துடன் ஊக்கமாக உழைக்கக்கூடியவராக இருக்கவேண்டும். பழையகலாச்சாரமென்னும்போது முற்ருக இந்துக் கலாச்சாரமெனக் கருதிவிடக்கூடாது. இந்த வாலிபர்மகாநாட்டில் அங்கத்துவம்வகிக்க இந்துக்கள், பௌத்தர், கிறீஸ்தவர், மகமதியர் ஆகிய எல்லோருக்கும் உரிமையுண்டென்று எண்ணுகின்றேன். ஒருகால்' இப்போது பௌத்தர்கள்மகமதியர்கள்அங்கத்துவம் வகிக்காதிருக்கலாம். அதைப்பற்றி எவ்வி குறையுமில்லை. உங்களதுமுடிவான நோக்கம் இலங்கை பூரண சுயராஜ்யத்தைப் பெறத் தொண்டுபுரிவதே. அவ்வாறு பெறப்படும் சுயராஜ்யம் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இந்துக்கள், கிறீஸ்தவர்கள் என்போர்கட்கு மாத்திரமல்ல இலங்கையில் வாழும் எல்லாமக்கட்கும் மதத்தினருக்கும் உரியதே. யாழ்ப்பாணம் இலங்கையில் ஒருபாகமேயாகும். எனவே எல்லா இளைஞர்களும் ஒருங்குசேர்ந்து தொண்டாற்ற இந்த ஸ்தாபனம் இடமளிக்கவேண்டும்.

இப்போது பழைய கலாச்சாரங்களைப் புனருத்தாரணஞ் செய்வவே இம்மகாநாட்டின் நோக்கமென்றேம். அந்தக் கலாசாரந்தான் யாதோ? அதுவும்

எல்லா வகுப்பினராலும், வர்க்கத்தினராலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் இருக்கவேண்டும். எனவே நாம் கருதும் கலாச்சாரம் பெரும்பான்மையும் இந்துக்களது கலாச்சாரமாய் இருப்பினும் மற்றைய மதச்சார்பினருக்கும் அதில் பங்கில்லாமல்போகவில்லை. நான் இப்படியாகச் சொல்வதற்குக் காரணந்தான் யாதோ? இப்புனருத்தாரணத் துறையில் இப்போது தொண்டுபுரிபவர்கள் அனேகர் இந்துக்களே. எப்போதும் நீங்கள் பொதுவாக எல்லா விஷயங்கட்கும் உங்கள் தாய்நாடாகிய இந்தியாவையே பெருமையுடன் நினைக்கின்றீர்கள்.

### பழைய - புதிய கலாச்சாரம்

இந்துக்கலாச்சாரம் என்று கூறும்போது பௌத்தர்களின் கலாச்சாரமும் அத

பழைய காரசாரமென்றல் என்னவென்று கூற இயலுமா? பழைய கலாச்சாரம் எக்காலத்தில் தொழிற்படாது நின்றது. புதிய கலாச்சாரம் என்று ஆரம்பித்தது என்பதையும் சொல்ல இயலுமா? நல்லறிவுடைய புத்திமான்கள் பழைமையை உடையது என்ற காரணத்தால்அதைக் கட்டாயம் ஏற்கவேண்டுமென்று சொல்லமாட்டார்கள், நியாயத்துக்கும் நீதிக்கும் அனுபவததுக்கும் ஏற்றதா என்பதை ஆராய்ந்தறிந்து ஒருகலாச்சாரத்தை விருத்திசெய்ய முன்வருவர்.'

இந்தநாட்டின் நற்கதியை நாடித் தொண்டுபுரிய முன்வந்துள்ள வாலிபர்களாகிய உங்களுக்கு நான் இந்த எச்சரிக்கையைச் செய்யவேண்டியதாகின்றது. இங்கு மாத்திரமல்ல, வேறும் பலஇடங்களிலும் இவ்வாறான பிற்

டுகளைச் செயற்படுத்தி வருகின்றேன். பழைய இந்து சமயக் கலாசாரங்கள் புறமதத்தினரால் ஏற்கப்படாதனவாய்ப் புறக்கணிக்கப்படின், அக்கலாச்சாரங்களின்தொன்மையில்எனக்குச் சந்தேகம் ஏற்படுகின்றது. இவ்விதமாக நீடித்து முயன்று ஆராய்ந்ததின்பேருக ஒருபெரிய முடிபுக்கு வந்துள்ளேன். உலகில் மிகத் தொன்மைவாய்ந்த இரண்டு உண்மைகள் உண்டாயின் அவைகள் (a) சத்தியமும் (b) அஹிம்சையுமேயாகும். இவைகளை அடிப்படையாகக் கொண்டே நான்பணியாற்றி வருகின்றேன். எனது செயல்கள் ஏற்றனவா அல்லனவா என்பதற்கு இவையிரண்டுமே உரைகற்களாகும். மேலும் பழைய வழக்கங்கள் கொள்கைகள் என்பன நாம் நடாத்தும் தற்கால வாழ்க்கை முறைக்கு நேர்விரோதமா

---

**ஏறக்குறைய 42 ஆண்டுகளுக்கு முன்னர் மகாத்மா காந்தியடிகள் இலங்கைக்கு விஜயம் செய்தபோது இலங்கையில் அக்காலத்தில் முன்னணியில் நின்ற வாலிபகாங்கிரஸினர் அவரை யாழ்ப்பாணத்தில் வரவேற்றனர். அவ்வரவேற்புக் கூட்டத்தில் காந்தியடிகள் ஆற்றிய உரையே இது.**

( தமிழாக்கம் - சுன்னுகம் கு. அம்பலவாணர் )

---

னுள் அடங்கியுள்ளதென்று துணிந்து கூறுகின்றேன் அதற்குக் காரணம் உண்டு. புத்தபெருமான் ஓர் இந்தியர் மாத்திரமன்று, இந்துக்களுக்குள் சிறந்தவோர் இந்துவுமாவர். நான் ஆராய்ந்து அறிந்தளவில் அவர் என்ருவது இந்துசமயத்தைப் புறக்கணித்துப் புதியவோர் சமயத்தில் புகுந்தவரல்லர். கிறீஸ்துநாதர் ஆசியதேசத்தைச் சேர்ந்தவர். முகம்மது நபியும் ஆசியதேசத்தைச் சேர்ந்தவர். எனவே ஆசிய நாட்டின் கலாச்சாரம் யாதென்பதை நாம் ஆராய்ந்து அறியவேண்டும்.

இயல்பாக என்றுமுள்ள பழைய கலாச்சாரத்தைப் புனருத்தாரணம்செய்யுங்கால் உங்கள் முயற்சிகள் தொண்டுகள் மற்றையமதச்சார்பினரோடு முரணடையாதிருக் வேண்டும். எனவே எல்லாச் சமயவாதிகட்கும் பொதுவானவையாகும். கலாச்சாரங்களைப் புனருத்தாரணஞ்செய்யமேற்கொள்வதே முறையாகும். இந்த உயர்ந்த பணியை ஆற்ற முன்வருங்கால் எச்சமயத்தாராலும்ஏற்றுக்கொள்ளப் பட்டனவாகும். சத்தியம் அஹிம்சை ஆகிய இரண்டு பெரியஇலட்சியங்கட்கு முதலிடம் அளிக்கப்படவேண்டும். உங்களாலும் என்னுலும் மறந்து கைவிடப்பட்டுள்ள எத்தனையே பழைய கலாச்சாரங்கள் பழக்கங்கள் நீங்கள் புனருத்தாரணஞ் செய்ய விரும்புவீர்களென்று நான் கருதவில்லை. அவைகள் இந்துசமயத்துக்குஒருகாலத்தில் ஏற்றனவாயிருந்திருக்கலாம்ஆனுல்இன்றைய நிலைவேறு பழைய காலாச்சாரங்கள் புனருத்தாரணஞ் செய்வதுபற்றிச் சிறந்த ஆசார திருத்தக்காரராகும். பம்பாய் நீதிபதியாகவிருந்த மகாதேவகோவிந்தரானடேயென்பவர் கூட்டமொன்றில் கூறியதை உங்கட்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். ,இக்கூட்டத்தில் பங்குபற்றும் எவராவது

போக்கான கொள்கைகளையுடைய எதிர்க்கட்சிகள் உண்டு. எனதுஅனுபவத்தை இங்கெடுத்துக்கூறின் இந்தியாவிலும் பழைய கலாச்சாரத்துக்கு புத்துயிர் கொடுக்கத் தொண்டு புரிவோர் பலர், பழையனவென்ற காரணத்தைக்கூறி எத்தனையோ தவருன பழக்கவழக்கங்களை மூடநம்பிக்கையால் மறுமலர்ச்சி செய்யப் பின்நிற்கின்ருரில்லை.

### 'தீண்டாமை'

பழைய பாரம்பரியம், பழைய நூல்கள் என்பவற்றை ஆதாரமாக எடுத்துக்காட்டி வலிந்து நியாயங்கூறி மிகக்கொடிய வழக்கமாகுந் தீண்டாமை, ஆலயங்களில் தேவதாசிகள் நடனம் என்பவற்றை நிலைநாட்ட எத்தனிப்போர்க்குங் குறையில்லை. இதனை நீங்கள் நன்கறிவீர்கள். எனவே பழைய கலாச்சாரப் புனருத்தாரணஞ் செய்வதாக முன்வந்து தவருன விஷயங்களைச் செய்யாதிருப்பீராக. உங்களுக்கு இவ்வாறு எச்சரிக்கை செய்பவனுகும் நானும் பழைய கலாச்சாரங்களின் பெருமையை அறியாதவனல்லன். அவைகளின் புனருத்தாரணத்தில் ஆர்வமுடையவன் மாத்திரமல்லன். அவைகளை என்னுடைய ஆற்றலுக்கும் தகுதிக்கும் ஏற்ப வாழ்க்கை முறையில் நாளாந்திரத்தில் அனுட்டிப்பவரில் ஒருவன் நான் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். யாவராலும் மறந்து மறைந்துபோன அரிய பொக்கிஷங்களாகும். கலாச்சாரங்களைக் கண்டு தெளிந்து கொள்ள நான் முயன்று ஆராய்ந்தபோது, இந்துக்களின் நிலையான பெருமைவாய்ந்த கலாச்சாரங்கள் கிறீஸ்துநாதர், புத்தர்பெருமான், சொருஸ்றர், முகமத்நபி முதலிய மகான்களின்போதனைகளிலும் இடம் [illegible] இவைகளை [illegible] சக்கொண்டே எனது தொண்

யிருப்பின், அவைகளை உயிர் கொடுத்து உருவாக்குவது நல்லதல்லவென்றுங் கண்டேன். பழைய வழக்கங்கள் அக்காலங்களிற் சிறந்தனவாகவும் தேவைப்பட்டனவாகவும் இருந்திருக்கலாம். ஆனுல் இக்கால தேவைகளை நோக்குமிடத்து அவை உபயோகமில்லாதனவாகலாம். அவை ஒருகால் சத்தியம் அஹிம்சை என்பனவற்றிற்கு மாறுபடாதனவாயுமிருக்கலாம்.

விஷயம் இவ்வாருக நாங்கள் செல்லும் தெருவீதி எவ்வளவு பாதுகாப்புடையதாகின்றது. சிறிதும்யோசியாது உடனடியாகவே தீண்டாமையை நாம் ஒழித்துவிடலாம் அத்துடன் தாசிகள்நடனம், மதுபானம், மிருகபலி என்பனவற்றையும் நீக்கிவிடவேண்டும். மேலும் இவைகள் நமது சீரிய ஒழுக்க முறைகட்கும் மாருனவையாகும். இதுவரையும் தவருன விஷயங்கள்யாவை? அவைகளை அவசியந் தடுத்து நிற்பாட்டல் மிகவும் இன்றியமையாத காரியம் என்று எடுத்து விளக்கயுள்ளேன்.

### 'எளிமையான வாழ்க்கை'

நாம் அஹிம்சையை வாழ்க்கைமுறையில் கையாளும்போது அதன் பெறுபேருன முடிவுகளையும் ஏற்கத் தயாராகஇருக்கவேண்டும். தென்னிந்தியாவிலுள்ள செட்டிநாட்டிலுள்ள பண்பாடுடைய நிதானந்தவருத சீர்திருத்தவாதிகளாகும் தொண்டர்கள் கையாளும் முறையை உங்கள் சிந்தனைக்கு விடவிரும்புகிறேன். அறியவேண்டியது இதுவேயாகும். 'நாம் எவராயினும் உண்மையான அஹிம்சையை வாழ்க்கையில்கைக்கொள்வதாயிருந்தால் எங்களிலும் பன்மடங்குகீழ்நிலையில்(வறுமை) இருப்போர் பெறவியலாதிருக்கும் ஒன்றை நாம் பெற

வேண்டுமென விரும்பக் கூடாது. இது ஓர் உண்மையான பிரச்னையென்று கொண்டால், நாம் எமது புராதனமான படாடோபமற்ற எளிமையான வாழ்க்கையைக் கைவிட்டுப் பகட்டான போலிநாகரீகத்தைக் கைக்கொள்ளக் கூடாது. மக்கள் மிக்க அவசரப்பட்டு இந்தப்போலி நாகரீகவாழ்வை நாடி நிற்பதை நான் கடுமையாக எதிர்த்து கண்டித்து வருவதன் காரணத்தை இப்போது நீங்கள் நன்கறிவீர்கள். யாவரையும் மயக்கித் திகைப்பை உண்டாக்கி வசீகரிக்கும் வன்மைப்பாட்டினையுடைய மேலைத்தேச நாகரீகம் எம்மை வெற்றிகொண்டு முன்செல்வதாகின்றது எம்மை முற்றுக விழுங்கிவிடும்போலிருக்கின்றது. அபார சக்தியுடன் மேல்நாடுகளிலிருந்து நம்மை நோக்கிவந்துகொண்டிருக்கிறது.

### மேல்நாடுகளும் மலைப்பிரசங்கமும்

ஐரோப்பிய நவநாகரீக முறைகள், தேவைகளையதிகரித்தல், உடம்பு சுகத்தை நாடல் ஆகிய இவைகட்கும் கிறீஸ்துநாதரின் மலைப்பிரசங்கத்திற்குமிடையிலுள்ள பெரிய வித்தியாசங்களை நான் எனது பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் பன்முறை எடுத்துக்காட்டியுள்ளேன். ஆரம்பத்தில் நான் கூறிய பிரகாரம் கிறிஸ்துநாதர் ஓர் ஆசிய தேசவாசியே. முகமது நபியும் ஆசிய தேசத்தவரே. கிறீஸ்துநாதரின் போதனைகள் உபதேசங்கட்கும் இப்போது அமெரிக்கா இங்கிலாந்து முதலிய மேலைத்தேசத்தவரின் வாழ்க்கைமுறைகட்கும் இடையில் எவ்வளவு மாறுபாடுகள் உள்ளனவென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. தென்னுபிரிக்காவில் நான் வாழ்ந்து வந்த காலத்தில் அங்குள்ள ஆயிரக்கணக்கான கிறிஸ்த மக்களுடன் நான் சமாதானமாகவும் நண்பனுகவும் இருந்தேன். இப்போது உலகில் எனக்குள்ள நண்பர்கள் தொகை இன்னும் பன்மடங்காய் விட்டது.

எனவே இலங்கையில் வாழும் இந்துக்களும் புத்தர்களுமாகிய நீங்கள் கலாச்சாரத்தை உள்ளபடி விசுவாசத்துடன் நேசிப்பவர்களாயின், மேலைத்தேசப் போலிநாகரீகத்தின் மயக்கத்தில் அமிழ்ந்தாதிருப்பீர்களாக. கிறீஸ்த சமயத்தோரணையில் வந்தாலும் அதனை ஏற்காதிருப்பீர்களாக.

உங்கள் ஆற்றலில் உங்கட்கு அசைக்கவியலாத நம்பிக்கையுண்டாயின் சலிப்படையாது பொறுமையைப் பயின்றுவரின், உங்களிடமும் கிறிஸ்து நண்பர்கள் மேலைத்தேச படாடோபங்களோடு வந்தாலும் அவர்கள் உங்களைக் கண்டமாத்திரத்தில் போலி வேடங்களை உதறியெறிந்துவிட்டு சாதாரண எளிமையான வாழ்க்கையைத் தாமும் கைக்கொள்வர். இதுதான் உண்மையான அஹிம்சை வாழ்வின் பேறென்பதை அறிவீராக.

### நூல் நூற்றல்

நான் சொல்வதை நன்கு அவதானித்து நான் கூறிய நியாயங்களைத் தொடர்ந்து கிரகித்திருப்பீர்களாயின் நூல் நூற்கும் சைராட்டினத்தின் நிலையான பெரும் பயன் யாதென்பதை நீங்

(10-ம் பகம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# லட்சுமியிடம் கல்லூரி மாணவன் குறும்பு!

வாய்த்துடுக்காக பேசிய லட்சுமி கல்லூரி மாணவர்கள் சிலரிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

தோழிகளுடன் வந்தலட்சுமியை கல்லூரிமாணவர்கள் பலர்சுற்றிவளைத்துக்கொண்டார்கள்.

லட்சுமிக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் வாக்குவாதம் வலுத்தது. மாணவர்களின் தலைவர் லட்சுமியை துச்சமாக மதித்துப் பேசினார்.

அவருடையகிண்டல் மொழிகள் லட்சுமிக்கு ஆத்திரத்தை மூட்டின. ஆவேசம் கொண்ட லட்சுமி மாணவர் தலைவரின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்தார்.

அடித்துவிட்டு நேராகவீட்டுக்குப் போனார். மாணவர் ஒருவனை அடித்துவிட்டதால் ஏற்படப்போகும் விளைவுகள் பற்றிச்சிந்தித்தார். கவலை ஏற்பட்டது. மன நிம்மதி குலைந்தது.

''சாப்பிட வாயேன்!'' என்று லட்சுமியின் அம்மா அழைக்கவும், ''மனநிம்மதி இல்லாமல் தவிக்கிறேன், அம்மா!'' என்று கண்ணீர் மல்கக்கூறினார், லட்சுமி.

இந்தக்காட்சி பாரதி புரொடக்ஸன்சின் 'கொட்டு மேளம்' என்ற படத்துக்காக சாரதா படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது.

கல்லூரி மாணவர் தலைவராக ரவிச்சந்திரனும், லட்சுமியின் அம்மாவாக ருக்மணி (லட்சுமியின் அம்மா)யும் நடிக்கிறார்கள்.

நாகேஷ், சுந்தரராஜன் ஆகியோரும் நடிக்க, மல்லியம் ராஜகோபால் கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார்.



## பாலமுரளிக்குப் பிடித்த பாடல்

கர்நாடக சங்கித இசையால் சிறந்து விளங்கும் பாடகர் ஸ்ரீ பாலமுரளி கிருஷ்ணுவிற்கு மிகவும் பிடித்த பாடல் எது தெரியுமா?

'பொம்மலாட்டத்தில்' நடிகை மனோரமா பாடிய 'வா வாத்தியாரே வூட்டாண்ட......' என்ற பாடல் தான்.

(ஆதாரம்: 4-4-70 தேன் கிண்ணம்.)

## ஏ எல் நாராயணனுக்கு பாராட்டு

சினிமா கதை ஆசிரியர் ஏ. எல். நாராயணனுக்கு திருச்சியில் உள்ள சினிமா ரசிகர்கள் பாராட்டு விழா நடத்தினார்கள்.

திருச்சியில் நடந்த இந்த பாராட்டுவிழாவில் தி. மு. கழக பிரமுகர் ராபி ''புரட்சிக் கலைஞர்'' என்ற பட்டத்தை ரசிகர்கள் சார்பில் ஏ. எல். நாராயணனுக்கு வழங்கினார்.

# நிர்மலாவின் அழகுக்கு அடிமையான லட்சாதிபதி!

அழகிலோ நிர்மலா ஒரு ரதி. நடனத்திலோ ரம்பை கூட பிச்சை வாங்க வேண்டும்.

நடனக்காரி நிர்மலாமீது லட்சாதிபதி ஒருவரின் ''கழுகுப்பார்வை'' விழுந்தது. இவர் மலருக்குமலர் தாவும்வண்டு மனம்படைத்தவர். பணத்தை அள்ளி வீசி பல பெண்களின்கற்பை சூறையாடிய இந்தப்பாவி நிர்மலாவையும்மயக்கினான்.

பணத்துக்கு அடிமையானாள் நிர்மலா. அவளுடைய அழகுக்கு அடிமையானான் அவன்.

''பழகப்பழகப்பாலும்புளிக்கும்.'' வர வர நிர்மலாமீது கொண்ட மோகம் அவனுக்கு தணிந்தது. நிர்மலாவை விட்டுவிட்டு ஓடிவிட்டான்.

நிர்மலாவின் அண்ணன் தங்கையை ஏமாற்றிமோசம் செய்தவனை பழிக்குப்பழி வாங்கத்திட்டமிட்டான்.

ஓடஓட லட்சாதிபதியை அடித்து ரத்தம்சொட்ட வைத்தான். லட்சாதிபதியாக முத்துராமனும், நிர்மலாவின் அண்ணனாக ''தேங்காய்'' சீனிவாசனும் நடிக்கும் இந்தக் காட்சியை காமாட்சி ஏஜன்சியின் படத்தில் காணலாம்.

இந்தப் படத்தின் கதாநாயகி கே. ஆர். விஜயா,

கிராமத்துக்கோவிலில்குடிகொண்ட அம்மன் சாமியே பெண்ணாக லீலைகள் பல புரிகிறாள். இந்த வேடம் ஏற்று நடிக்கிறார் கே. ஆர். விஜயா.

இந்தப் படத்தில் நடிக்கும் டி. எஸ். பாலையா மந்திரவாதியாகவும், நாகேஷ் பூசாரியாகவும் நடிக்கிறார்கள். ஜி. சகுந்தலா, வீரப்பன், சுந்தரிபாய் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

கதையை மா லட்சுமணன் எழுத கே. சுந்தரம் வசனம் எழுதுகிறார். பட அதிபர் வேலுமணிடைரக்ட் செய்கிறார். இசை குன்னக்குடி வைத்தியநாதன். ஏ. வி. எம். படப்பிடிப்பு நிலையத்தில் இப்படம் வேகமாக வளர்ந்துவருகிறது.

# எம்.ஜி.ஆர்.மீது வஞ்சகவலை

## அவரின் சொத்துக்களைச் சுருட்டச் சூழ்ச்சி!!

அடுத்தவர் சொத்துக்களை சூழ்ச்சிசெய்து சுருட்டுவதில் அசோகன் மன்னன்தான்.

அசோகனின் வஞ்சக வலை எம். ஜி. ஆர். மீதும் வீசப்பட்டது. அவருடைய சொத்துக்களை தந்திரமாக சுருட்ட தில்லுமுல்லு வேலைகளில் இறங்கினார்.

எம் ஜி ஆருக்கு சொந்தமான பெரிய பங்களாமீதே அசோகனின் கழுகுப் பார்வை முதலில் விழுந்தது. சொத்துக்களை சுருட்டும் முன்பு எம். ஜி. ஆர். மீது அபாண்டமானபழிகளை சுமத்தினார்.

எம். ஜி. ஆரின் தந்தை கொலைசெய்யப்பட்டார். அந்தக் கொலையையும் எம். ஜி. ஆரே செய்துவிட்டதாக பழிசுமத்தினார். அடுத்து அசோகனின் இதயத்தில் ஊறிக்கிடந்த நயவஞ்சகத் திட்டம் தீவிரமாக வேலை செய்யத்தொடங்கியது. கள்ள உயில் தயார்செய்து எம். ஜி. ஆருக்கு சொந்தமானபங்களாவையும்பறிக்க வழிவகுத்துக்கொண்டார் இந்தவஞ்சக'வலை'யை அறுத்தெறிய துணிந்தார் எம் ஜி. ஆர். நண்பன் போலவே பழகி அசோகனின் பாதக எண்ணத்தை நிறைவேறாமல் தடுக்க வேலைசெய்தார். மாறுவேடம் அணிந்து நண்பன் போலவே அசோகனுடன் பழகினார்.

இந்தக் காட்சி வள்ளி பிலிம்சின் ''சங்கே முழங்கு'' என்ற வர்ணப் படத்துக்காக சத்யா படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது.

லட்சுமி கதாநாயகியாக நடிக்கிறார். சோ, டி. கே. பகவதி, வி. கே. ராமசாமி, வி. எஸ். ராகவன். கள்ளப்பார்ட் நடராஜன், ஜி. சகுந்தலா, குமாரி கவுசல்யா, ஹெலன் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

கே. எஸ் கோபாலகிருஷ்ணன் வசனம் எழுத. ப. நீலகண்டன் டைரக்ட் செய்கிறார். இசை எம். எஸ். விஸ்வநாதன்.

## 'ஜெய்' நடிக்கும் 'நீதிதேவன்'

புதிய படக் கம்பனியினரான கண்ணன் பிலிம்சார் ஜெய்சங்கர் நடிக்கும் படம் ஒன்றை உருவாக்கமுடிவு செய்துள்ளார்கள்.

இந்தப்படத்தின் பெயர் ''நீதிதேவன்.'' படப்பிடிப்பு தொடக்கவிழா இந்தமாதம் நடக்கிறது.

முத்துராமன், சுந்தரராஜன், நாகேஷ் ஆகியோரும் நடிக்கிறார்கள். கதாநாயகி தேர்வு நடக்கிறது. கதை வசனத்தை பாலமுருகன் எழுத, கே. வி. மகாதேவன் இசையமைக்கிறார். ஆர். சம்பத் ஒளிப்பதிவு செய்ய, ஆர். தேவராஜன் டைரக்ட் செய்கிறார்.

# சினிமா உலகில்

சிவாஜிகணேசன் வீட்டில் பெரிய வேங்கைப் புலி ஒன்று இருக்கிறது. இது உயிருடன்உள்ள புலியல்ல! சிவாஜிகணேசன் வேட்டையாடி வீழ்த்திய புலி.

இதைப் பக்குவப்படுத்திக் காட்சிப் பொருளாக வீட்டில் வைத்து இருக்கிறார், சிவாஜிகணேசன். கம்பீரமாக நிற்கும் இந்தப்புலியைக் கண்டு சிவாஜிகணேசன் வீட்டுக்குப் போகிறவர்கள் பலர் சில நிமிடநேரம்திகைத்து நிற்பதும் உண்டு.

### 'ஐஸ்' பாரதி

கோடை வெயிலின் கொடுமை தாங்காமல் நடிகைகள் பலர் தவிக்கிறார்கள். நடிகை பாரதி ''ஷூட்டிங்''குக்கு வரும் போது ''ஐஸ்'' கட்டிகளை எடுத்துவருகிறார், அதை எப்போதும் முகத்திலும், கால், கைகளிலும் தேய்த்துக் கொண்டே இருக்கிறார். ''ஐஸ்மட்டும்இல்லாவிட்டால் கொஞ்சநேரம் கூட வெயிலின் கொடுமையை தாங்கமுடியாது'' என்கிறார் பாரதி.

### 'ஜேம்ஸ்பொண்ட்' ஜெய்

தமிழ்ப்பட உலகின் ''ஜேம்ஸ் பொண்ட்'' என்று புகழப்படும் நடிகர், ஜெய்சங்கர். இவர் குறுகிய காலத்திற்குள் 50 படங்களில் நடித்து முடித்துவிட்டார். அனைத்திலும் கதாநாயகனாகவே நடித்தார். இதில் ''வல்லவன் ஒருவன்'', ''நான் யார் தெரியுமா'', ''நில் கவனி காதலி'' ஆகிய படங்கள் ''ஜேம்ஸ் பொண்ட்'' பாணி படங்களே. இன்று திரைக்கு வரும் ''சி.ஐ.டி. சங்கர்'' ஒரு 'ஜேம்ஸ் பொண்ட்' படம்.

''நான் நடிக்கும் 'ஜேம்ஸ் பொண்ட்' படபட்டியல் நீண்டுகொண்டு போவதைவிரும்புகிறேன். ரசிகர்கள் திடுக்கிடும்காட்சிகள் நிறைந்த 'ஜேம்ஸ் பொண்ட்' பாணி படங்களுக்கு ஆதரவு அளிப்பதை பார்த்தால் தொடர்ந்து இப்படி நடிக்க உற்சாகம் ஏற்படுகிறது!'' என்கிறார், ஜெய்சங்கர்.

# விஞ்ஞான உலகின் தந்தையர்

### இர்விங் லாங்மூர்

(1881—1957)

இர்விங்லாங்மூர் அமெரிக்காவில் பிறந்தார். பாரிசில் கல்விபெற்றார். கொலம்பியாவில் பட்டம் பெற்றார். ஜெர்மனியில் ஆராய்ச்சித் துறையில் Ph D பட்டம் பெற்றார். அவருக்கு உலகத்திலுள்ள 9 பல்கலைக்கழகங்கள் போட்டி போட்டுக் கொண்டு கௌரவப்பட்டங்கள் வழங்கினவெனில் அவரது திறமையை அறிந்து கொள்ளலாம். பொறியியல், பௌதீக, இரசாயன சம்பந்தமாக இவரது ஆராய்ச்சி வெளியீடுகள் மிகப்புகழ் பெற்றவை. செயற்கைமழையைக்கொண்டுவரும்வழியை (அதாவது இரசாயனப் பொருளை) முதன்முதலாகக் கண்டுபிடித்தவர் இவர் தான். இதற்காக இவருக்கு 1932-ல் இரசாயனத்துக்கான நோபல்பரிசைப் பெற்றார்.

### திருமதி மேரிகியூரி அம்மையார்

(1867—1934)

முதன்முதலாக 1898-ம் ஆண்டு ரேடியம் கண்டுபிடிக்கப்பட்டபோது, விஞ்ஞான நிபுணர்கள் ஒருபுதிய உலகத்தையே கண்டனர் என்று கூறுவது மிகையாகாது. நோய்களை எதிர்த்துநடக்கும் அதிபயங்கரப்போரில் ரேடியத்தைக் காட்டிலும் சக்தி வாய்ந்த ஆயுதம்வேறு எதுவுமில்லை என்ற உண்மையை அவர்கள் கண்டதும் அதை மானிடவர்க்கத்துக்குக் கிடைத்த ஒரு மாபெரும் வரப்பிரசாதமென்றே கருதினர். அத்தகைய அற்புதமான ரேடியத்தை கண்டுபிடித்தவர் தான் மேரிகியூரிஎன்றபெண்மணி. போலந்து நாட்டில் ஓர் ஏழை ஆசிரியருக்கு பெண்ணாகப்பிறந்த மேரிகியூரியின் அறிவுவளர்ச்சிக்கும் ஆராய்ச்சித்திறனுக்கும் வறுமை தடையாக இருக்கவில்லை. அதற்குமாறாக அவர் ஆயுள் முழுவதும் ஆடம்பரமற்ற எளியவாழ்க்கை நடத்துவதற்கு அது உதவியாக இருந்தது. முதலில் அவர் ஏழை ஆசிரியராகவே வாழ்க்கையை ஆரம்பித்தார். கையில் சிறிது தொகை சேர்த்துக்கொண்டு பின் மேல்படிப்புக்காக பாரிஸ் சென்றார். பௌதீக இயலிலும் இரசாயன இயலிலும் நோபல் பரிசு பெற்ற கியூரி அம்மையார் 1934-ம் ஆண்டில் இறைவனடிசேர்ந்தார்.

### மைக்கல் பரடே

(1791—1867)

வறுமை காரணமாகவும் படிப்பு இல்லாததாலும் ஓர் அச்சுக்கூடத்தில் புத்தகங்களுக்கு அட்டைபோடும் வேலையில்ஈடுபட்ட மைக்கல் பரடே புத்தகங்களின் மேல் அட்டைகளைப் பார்ப்பதுடன் நில்லாமல் புத்தகங்களுக்கு உள்ளே என்னஇருக்கிறது என்பதையும் இடைவிடாது கவனிக்கத்தொடங்கினார். அந்த விடாமுயற்சி அவரைக்கடைசியில் உலக சரித்திரத்தில் அழியாத இடம்பெறும் விஞ்ஞான நிபுணராகச் செய்துவிட்டது. இன்று உலகமக்கள் பெற்றுள்ள பல நவீனவசதிகளுக்கும் அத்திபாரம் அமைத்தவர் மைக்கல் பரடேதான். வாகனப் போக்குவரத்து விளக்கு, வெப்பம், சக்திமுதலியசகல சாதனங்களும் மைக்கல் பரடேயின் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டே அபிவிருத்தியடைந்தன.

தொகுப்பு: கி. அல்பேட் பங்கிராஜ்

# பலதும் பத்தும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்திரிக் குறளி

‘எங்கள் முதுகில் குத்திய பெருமை ஐக்கிய தேசியக்கட்சிக்கே உரியது’

—தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் ஓர் எம்.பி

ஆனல் புறமுதுகு காட்டாமல் மார்பிலே வேலேந்தி வீரமரணம் எய்தி புகழ்பெற்று தீரபரம்பரையின் வழிவந்தவர்கள் அன்றோ நமது தமிழினம்!

■ மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலைத் தனிமனிதனாக நின்று காப்பாற்றியவர் திரு. சுந்தரலிங்கம்

-தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் ஒரு பேச்சாளர்.

அதனால்தான் கோட்பாதர் சுந்தரலிங்கம் என்கிறார்களோ!

— மற்றொரு தேர்தல் கூட்டத்தில் இன்னொருவர்

■ குழந்தைகளுக்குப் பாலூட்ட மறுத்தால்...

— ஒருடாக்டரின் எச்சரிக்கை

—செய்தித்தலைப்பு

எச்சரிக்கையாருக்கு? தாய்மாருக்கா?பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரானாக டாக்டர்கள் எப்போதுமுதல் ஆகிவிட்டார்கள் என்று ஆச்சரியப்படுகிறார் ஒரு தந்தை.

■ ஏராளமான பிணங்கள் ஆற்றில் மிதக்கின்றன.

— கம்போடியா செய்தி

நம்மூரிலே தேர்தல்காலம் வந்துவிட்டால் யார் யாரையோ எல்லாம் உயிரோடே தூக்கிச் சுமக்கிறார்களே.

■ எதிர்பாராதவிதமாக ‘குறுக்கிட்ட’ சில இடையூறுகள் காரணமாக முன்னர் அறிவித்தபடி நாவல்போட்டி முடிவுகளை வெளியிட முடியவில்லை அதற்காக மன்னிப்புக் கோருகிறோம்

—பத்திரிகை ஆசிரியர் அறிவிப்பு

‘காலத்தால் சாகாத இலக்கியம் படைத்தவர்கள் கவலைப்படமாட்டார்கள், ஆனல் சுடச்சுட வாழ்க்கைச் சித்திரம் தீட்டியவர்கள் நாம் எழுதியதெல்லாம் காலம் கடந்த பழைய பண்டமாகிவிடுமே என்று மனம் சோர்ந்து விடப்போகிறார்களே, சார்?

■ திமிரி நாகசுரம் பற்றி மதுரை சகோதரர்கள்

— செய்தித் தலைப்பு

என்ன சொல்லியிருப்பார்களோ? இந்த ஊரிலே புதுசாக திமிரி நாகசுரம் வாசிக்கத் தொடங்கியிருப்பவர்களுக்கெல்லாம் திமிர் பிடிச்சிருக்கிறாப் போல தோணுது என்று யாழ்ப்பாணத்து தவில் வித்வான்களுக்கு ஒத்து ஊதினாற்போல மருது சகோதரர்கள் அபிப்பிராயம் கூறியிருப்பார்களோ?

■ எங்கள் வாலிப முன்னணியின் கொடி ஊர்வலம் ஊர் ஊராக கிராமம் கிராமமாக ஒழுங்கைகள் குறுக்குத் தெருக்களினூடாகப் புகுந்து சங்கநாதம் செய்துகொண்டுவந்தபோது வீட்டு வாசல்களிலும் தெருப்படலைகளிலும் பெண்களும் ஆண்களும் யவனரும் வயோதிபரும் கனனியரும் காளையரும் குழந்தைகளும் குஞ்சுகளும் நின்று உமக்கு ஆசி கூறி ஆதரவு தெரிவித்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நாம் மெய்சிலிர்த்தோம். அன்னவரின் அன்புக்கு தலை தாழ்த்தினோம். அவர்களது வரவேற்பை அன்னைமொழியாம் தமிழ்மொழியை வாழ்விக்கக் கொலுவேற்ற அன்னார் மனம் மெய் வாக்காக நமக்களித்த பேராதரவுஎன்றே ஏற்றுப் பெருமிதப்பட்டோம்.

—தேர்தல்கூட்டத்தில் ஒரு பேச்சாளர்.

அடுத்த பேச்சாளர் சீதாபதி வருணனையை விட்ட இடத்திலிருந்து தொடர்வார் இதுவரை பேசியவர் மூச்சு விடுவதற்காக சிறிதே இளைப்பாறுவார் என்று தலைவர் குறிப்புரை கூறுவது உமக்குக் கேட்கிறது.

■ கவிதையின் வெற்றி எதில் தங்கியிருக்கிறது?

—இலக்கிய விழாவில் ஒரு நிருபர்

தருணத்துக்கேற்ற அசல்கேள்வி. நமக்கு வேண்டாத அரசியல்கட்சியின் கூட்டத்தைக் கலைப்பதற்கு இந்தக் கவி(தை) அரங்குபோல வெற்றியளிக்கக்கூடிய பிறிதொன்றில்லை என்கிறான், ஒரு தேர்தல் மாணவன்.

■ ஜூன் 7ல் ஆட்சிமன்றத்தில் இருப்பாராம் சுந்தரர்.

—செய்தி

தேர்தல் ஆரூடம் எங்களுக்கும் சொல்வாரா என்று அங்கலாய்க்கிறார் புதிதாகக் களத்தில் குதித்த ஒரு சுயேச்சை.

■ சந்திரப் பயணத்தைக் கைவிட்டு வீரர்கள் பூமிக்குத் திரும்புகின்றனர்.

— செய்தி

சீ, அங்கே என்ன இருக்கிறது. ஒரு கப் சிலோன் டீகூடக் கிடையாது என்று சலிப்புத் தட்டியிருக்குமோ?

■ உரிமை பெறத் தவறினால் இரண்டு வருடத்தில் வெளியேறுவோம்.

—முற்றவெளித் தேர்தல் பேச்சாளர்.

அப்போது இதே முற்றவெளியில் மீண்டும் சந்திப்பீர்களா? அல்லது இங்கிருந்தும் வெளியேறி விடுவீர்களா?

—கூட்டத்தில் ஒருவர்

■ வரோதய சிங்கை ஆரியன் காலத்தில் கண்டைமல்யுத்த வீரர்கள் சிலர் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்.

—வீரசைவர் யார் என்ற ஆராய்ச்சிக்கட்டுரையிலிருந்து

■ மக்கள் என்னை மேசன்வேலைக்கு அனுப்பவில்லை.

—என். எம்.

அப்படியானல் ‘ஆட்சிமன்றத்தில் சாதித்தது என்ன? - பேட்டி வரிசையில் ஒரு ஸ்தானம் கிடைப்பது சந்தேகம்தான்.

---

தேமதுரத் தமிழோசை — 4

# ‘தமிழ் உரைநடையின் தந்தை’ இத்தாலிய அறிஞருக்குப் புகழ்மாலை

மத்தியதரைக் கடலால் 3 பக்கமும் சூழப்பட்டு இயற்கை வனப்போடு விளங்கும் ஓர் ஐரோப்பியநாடு இத்தாலி. கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப் பீடமும் கலை, கலாச்சாரம் முதலியவற்றால் பண்டு தொட்டு இன்றுவரை சிறந்து விளங்குவதுமான ரோமாபுரியைத் தலைநகராகக்கொண்ட இக்குடாநாடாகிய இத்தாலியில் தமிழ்க் கல்விபற்றியும் தமிழ்நாடு பற்றியும் இன்றுநேற்று அறியப்படவில்லை. மிகப்பழைய காலத்திலேயே இத்தாலியர் இவைபற்றி அறிந்திருந்தனர் எனினும் அவர்களது தமிழ்க்கல்விக்கு அத்திபாரம் மார்கோபோலோ, ஜோன் ஒப் மொண்டிகோவினோ, நிக்கலோ கொன்டி, லுடோவிகோ-டி-வர்தேமா ஆகிய புகழ்பெற்ற கடற்பிரயாணிகள் காலத்திலேயே இடப்பட்டுவிட்டது என்று கூறவேண்டும்.

இவர்கள்வாயிலாகத்தமிழ் நாடுபற்றியும் தமிழ்மொழி பற்றியும் இத்தாலிய அறிஞர்கள் அறிந்திருந்தனர். தங்கள் மதமான கத்தோலிக்க மதத்தைப்பரப்ப இத்தாலிய அறிஞர்கள் பலர் 17-ம் நூற்றாண்டில் இந்தியா வந்து சேர்ந்தனர். இவர்களில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள் இருவர், றொபேட்டோ டி நொபிலி (Roberto de Nobili), ஜோசெப் கொன்ஸ்ரான்ரைன் பெஸ்கி (Joseph Constantine Baschi) ஆகிய இத்தாலிய மிஷனரிமார்

## ரோமாபுரியில்வீரமாமுனிவர் தமிழ்ச்சங்கம் தமிழுக்காற்றிவரும் நற்பணி

களே தமிழ்நாட்டில் பல காலம் தங்கித் தமிழுக்குப் பெருந் தொண்டாற்றிப் பெரும் புகழீட்டியவர்கள் ஆவர்.

### தத்துவபோதக சுவாமிகள்

கத்தோலிக்க குருவானவரும் சிறந்த அறிஞருமான றொபேட்டி நொபிலி இத்தாலியிலிருந்து தமிழ் நாட்டிற்கு 1606-ம் ஆண்டில் வந்து மதுரையில் பல ஆண்டுகள் தங்கியிருந்து தம் மதப்பிரசாரம் செய்தார். இவ்வாறு தங்கியிருந்து மதப் பிரசாரம் செய்யும் காலத்தில் இந்துமதம், தமிழ் மொழி ஆகிய இரண்டாலும் இவர் பெரிதும் கவரப்பட்டார். கவரப்பட்டஇவ்வறிஞர் தம்மதத்தைப் பரப்ப மற்றைய ஐரோப்பிய மிஷனரிமார்போன்றேதமிழ் மொழியைக் கற்றார், ஆகையால் அவருக்குஅம்மொழியிலுள்ள இந்துமத நூல்களைக்கற்கும் வாய்ப்பும் கிடைத்தது. அந்நூல்களைக் கற்றதன் பயனாகவும் சைவ சமயிகளோடு நெருங்கிப் பழகி அவர்தம் கலாசாரங்களையும் உணவு வகைகளையும் கண்கூடாக அவதானித்தாராகையால் அவற்றில் நாட்டம்கொண்டார். இதன்பயனாக இந்துமத சந்நியாசிகளினது வேடத்தைத் தரித்தார். மாமிச உணவை நீக்கினர். சைவமக்களது [illegible] இன்றைய யனுசரித்தார். தன்னை ஒரு ஐரோப்பிய பிராமணர் என்று கூறி வாழ்ந்தார் தனது பெயரையும் தத்துவ போதகசுவாமிகள் என மாற்றிக்கொண்டார், இத்தமிழார்வம் மிக்க இத்தாலிய அறிஞர்.

தமிழ்மொழியை நன்கு கற்றுக் கத்தோலிக்க மதப் பிரசாரம் செய்ததுமட்டுமன்றி இந்துமத இதிகாச, தத்துவ நூல்களையும் புராணங்களையும் நன்கு கற்றார், இவற்றையடிப்படையாக வைத்துக்கொண்டு சுவாமிகள் பாலர்தொடங்கிப் பண்டிதர்வரை விளங்கிக்கொள்ளத்தக்கவகையில் மிகஎளிய

— குணம் —

நடையிலே தத்தம் மதம் பற்றிய எண்ணற்ற நூல்களைத் தமிழ்மொழியில் எழுதி வெளியிட்டார். கடவுள் நிர்ணயம் யேசுநாதர் சரித்திரம், ஆத்தும நிர்ணயம், தத்துவக் கண்ணாடி, ஞானோபதேச காண்டம், சத்தியவேதலக்ஷணம், ஞானதீபிகை, புனர்ஜென்ம ஆட்சேபம், நித்தியஜீவன் சல்லாபம், பிரபஞ்ச விரோத வித்தியாசம், அநித்திய நித்திய வித்தியாசம் முதலிய பல நூல்களை எழுதி வெளியிட்டார். சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்று 50 ஆண்டுகள் தமிழ்நாட்டில் தங்கியிருந்து தம்சமயத்துக்கு இவ்வறிஞர் தொண்டாற்றினாரெனவும் மறைமுகமாக அதுதமிழுக்குச் செய்த தொண்டு என்பதை நாம் நமது இலக்கிய வரலாற்றினை நோக்குவோமெனில் தெளிவாகும். அதாவது இதுகாலவரையும் தமிழில் இல்லாத புதியதொரு உரைநடைவகையை ஆரம்பித்து வைத்த பெருமை தத்துவ போதக சுவாமிகளுக்கே உரியதாகும். இவரது காலத்துக்கு முன்னர் தமிழ் உரைநடை கடினமானது. இலக்கண, இலக்கிய அறிவு உள்ளவர்களுக்கே அது விளங்கும். ஆனல் இவரது உரைநடை தமிழ் உரைநடை வரலாற்றில் ஒருபுதிய திருப்பத்தை உண்டுபண்ணியது எனலாம், மக்களிடையே வழக்கில் உள்ள சொற்களையும், சொற்றொடர்களையும் கையாண்டு தெளிவான இலகுவான உரைநடையில் எழுதினார். இவரைப் பின்பற்றிப் பின்னர் தமிழ் உரைநடையிலும் மாற்றம் ஏற்பட்டது இத்தகைய சிறந்த அறிஞரின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிட்ட வின்சென்ற குரோனின் (Vincent Cronin) என்னும் இத்தாலிய அறிஞர் இவரது சேவையையும் இந்திய கலாச்சாரத்தில் இவருக்கு இருந்த ஈடுபாட்டையும் பாராட்டி அந்நூலில் இவரை ‘இந்தியாவின் முத்து’ ((Pearl of India) எனக் குறிப்பிட்டுள்ளார்.

### வீரமாமுனிவர்

அடுத்து தமிழ் மொழியில் மிகுந்த பற்றுக்கொண்டு பொதுவாகத் தமிழ்மொழிக்கும் சிறப்பாகத் தமிழுரை நடைக்கும் அருந் தொண்டாற்றிய இத்தாலிய அறிஞர் ஜோசெப் கொன்ஸ்ரான்ரைன் பெஸ்கி (JosePh Constantine Beschi) ஆவர். வீரமாமுனிவர் என்றழைக்கப்படும் இவரும் தத்துவ போதகசுவாமிகள்போன்றே சமயத்தொண்டின் பொருட்டு இத்தாலியில் இருந்து தமிழ்நாடு வந்துசேர்ந்தார். 50 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் வாழ்ந்த இவ்வறிஞர் தமிழ்மொழியை நன்கு கற்று எழுதவும் வாசிக்கவும் நன்கு பயிற்சிபெற்றார். தத்துவபோதக சுவாமிகள் போன்று இந்துமத இதிகாச, புராண, தத்துவ நூல்களில் கூடியகவனம் செலுத்தியதோடு நில்லாது பிரபந்தம், காப்பியம், கோவை தேவாரம்போன்ற பல தமிழ்இலக்கிய வகைகளையும் மிக ஆர்வத்தோடு கற்றார். தமிழ் இலக்கண நூல்களையும் தமிழ் எழுத்துக்கள்பற்றியும் விரிவாக ஆராய்ந்தறிந்தார். தமிழைத் தம்மக்களும், தமிழ்மக்களும் இலகுவாகக் கற்கவழி இலகுவான இலக்கண அகராதிநூல்களே என வுணர்ந்த இவ்வறிஞர் தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கணநூலை எழுதி வெளியிட்டார். உலகவழக்கிலும் செய்யுள் வழக்கிலும் உள்ளகடும் சொற்களுக்குப் பொருள்கூறும் அகராதிஒன்றையும் பெருமுயற்சிசெய்து வெளியிட்டார். சதுரகராதி என்று பெயர்பெறும் இவ்வகராதி தமிழ்மக்களுக்கு மட்டுமன்றி தமிழைக் கற்கும் ஐரோப்பியர்களுக்கும் பெரிதும் பயன்படுவதாக வமைந்துள்ளது. பிற்காலத்திய பேரகராதிகளுக்கு இது ஒரு வழிகாட்டி. தமிழ் நெடுங்கணக்கிலும் சில நல்ல திருத்தங்களைச் செய்துள்ளார். இலக்கண, அகராதி நூல்களை வெளியிட்டது மட்டுமன்றி தமிழ் காவியங்களைக்கற்றதின் பலனாக அவற்றைப் பின்பற்றி தேம்பாவணி என்னும் காவியத்தை இயற்றினார் தமிழ் பிரபந்தவகையைப் பிழையறக் கற்றதின்விளைவாகத் திருக்காவலூர்க் கலம்பகம் என்னும் பிரபந்தத்தையும் இயற்றினார். மேலும் இவர் வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானம் உணர்தல், பேதகமறுத்தல், வாமன்கதை. திருச்சபைக் கணிதம் பரமார்த்தகுரு கதை ஆகிய உரைநடை நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

### புதியதொரு உரைநடையை ஆரம்பித்தார்

இவரது தமிழ் உரைநடை தனித்துவம் வாய்ந்தது. தமிழுக்கே புதியதொருநடை. பேச்சு வழக்கில் உள்ள தமிழ்சொற்களையும் சொற்றொடர்களையும் ஆதாரமாகக்கொண்டும், நச்சினார்க்கினியர் பே[...] யர் போன்ற உரையா[...] களது நடையைப் பின்[...] யும் இவரது உரை[...] அமைந்திருந்தது. உ[...] சிரியர் நடையைத்[...] சந்திவிகாரங்களோடு[...] தும், உவமையுருவக[...] பாட்டிற்குரிய ஓசைப்[...] ஆகியவற்றோடுகூடிய[...] நடையையும்இவரது[...] னால் விளக்கத்திற்[...] கூடியதாகவுள்ளது. [...] தகையதொரு உரை[...] முன்பொருபொழுதும்[...] ழில் இருந்ததில்லை. [...] இப்புதிய நடையை[...] பித்து வைத்தாரா[...] அவரைத் ‘தமிழுரை[...] யின் தந்தை’ எனக் கூ[...] அறிஞர்.

இலக்கண, இலக்கிய, [...] நடை நூல்களை யாத்[...] மட்டுமன்றி இவ்வ[...] மொழிபெயர்ப்பு [...] லும் சிறந்து விளங்[...] தமிழின் சிறப்பை [...] ஐரோப்பியருக்கு எ[...] காட்ட தமிழ்நூல்க[...] வற்றை ஐரோப்பிய[...] களில் மொழிபெயர்த்[...] னார். வையத்துள் [...] வாங்கு வாழ வழிவ[...] திருக்குறளை இல[...] மொழியில் பெயர்த்[...] ழின் பெருமை[...] தொன்மையையும், சி[...] யும் செழிப்பையும் த[...] டார் அறியும்வண்[...] செய்தார்.

இவ்விரு அறிஞர்க[...] விட வேறு பல இத்[...] அறிஞர்களும் [...] கல்வியைக்கற்று [...] வேலைகள் பல செய[...] ளனர். ஆனல் இவ[...] வேலைகளும்வரலாறும்[...] கூறியவர்களது பே[...] தெளிவாகவும் விளக்[...] வும் கிடைக்கப்பெறு[...] அவர்கள் தமிழ்தெ[...] பற்றி விரிவான வி[...] தரவியலாதிருக்கி[...] 1576-1659-ம் ஆண்[...] வாழ்ந்தஇக்நேஷஸ்பு[...] (Ignatius Bruno) எ[...] அகராதி ஆக்கத்தில் [...] டத்தைப் பெறுவர். க[...] லிக்கக் குருவான வ[...] இவ்வறிஞர் 17-ம் நூ[...] டில் யாழ்ப்பாணம், [...] கா, சான்தோம்(San [...] ஆகிய இடங்களில் [...] மத்தியில் வாழ்ந்[...] டிறொஸி (De Rossi)எ[...] தோலிக்க குருவான[...] இவரது காலத்தில் வ[...] தமிழ் எழுத்தாளர் ஆ[...]

### தமிழ் அச்செழுத்துக்கள்

தமிழ்மொழிக்கு [...] 17-ம் நூற்றாண்டுசளி[...] நல்லதொரு இடம் இ[...] யில் இருந்ததென்பத[...] நூற்றாண்டுகளில் [...] காணப்பட்ட தமிழ்[...] துக்களின் அச்சுகளே [...] சான்றாகும். எட்ட[...] போப் ஏர்பன் காலமு[...] நூற்றாண்டேயாகும்.

தமிழில் பல்வேறு [...] களில்ஆராய்ச்சிசெய்வ[...] வேண்டிய பலதஸ்தா[...] களும் குறிப்புகளும், [...] களும் இத்தாலியில் [...] வத்திக்கான் நூல்நிலை[...] லும் மற்றும் நூல்நி[...] களிலும் இன்றும் உ[...] இவற்றின்மூலம் தமி[...] சுப்பதிப்பின் வர[...] தமிழ் அகராதி ஆ[...] பற்றி எழுதவும் அ[...] உதவியாகவிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கோஸ்லவாக்கிய நாட்டில் பிறந்து வளர்ந்த திரு. ஜோன் பிலிப்ஸ்கி தமிழின்மீது கொண்ட அளவுகடந்த காதல் 'பித்'தினால் தமிழர் வாழும் இடமெல்லாம் சென்று ஆராய்ச்சி செய்கிறார். 'தமிழ் நெஞ்சம்' கொண்ட இவர் கடந்த வாரம் இரண்டாவது தடவையாக ஈழம் வந்திருந்தார். யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து, பல பகுதிகளுக்கும் சென்றார். அவர்பற்றிய சுவையான கட்டுரை இது.

# செக். மண்ணில் பிறந்த இவருக்கு தமிழ் மீது அளவு கடந்த பித்து!

செக்கோஸ்லாவாக்கிய நாட்டுத் தமிழ் மாணவர் திரு. ஜோன்பிலிப்ஸ்கி, இலங்கைக்கு கடந்தவாரம் வந்தார். சிவந்தமேனியும் சிந்திக்கும் நோக்கும் உடைய இத்தமிழ் மாணவரின்இரண்டாவது இலங்கை விஜயம் இது. 1968-ம் ஆண்டில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் தமிழகம் வந்திருந்த அவர், அப்பொழுது இலங்கைக்கும்வந்திருந்தார், மீண்டும் இப்பொழுது வந்திருக்கிறார்.

## புலமை

1943-ம் ஆண்டில் பிறந்த இவருக்குத் தெரிந்த மொழிகள் செக், ஆங்கிலம், தமிழ் வடமொழி. மலையாளம், சிங்களம் என்பன. இவற்றுள் இவருக்கு மிகவும் பிடித்தமொழி, அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழியே, தமிழை விரும்பிப் படிப்பார். அதனால் மொழிப் புலமையும் ஆற்றலும் பெற்றுள்ளார்.

செக் நாட்டின் தலைநகர் பிராக். அங்கு கீழைத்தேய மொழிகளுக்கான கல்விக்கூடம் ஒன்று உண்டு. அங்கு இவர் ஒரு மாணவர். கலாநிதி கமில் சுவெலபில் இவரது பேராசிரியர். உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தலைமைச் செயலாளர்களுள்ஒருவர் கமில் சுவெலபில். கமில் சுவெலபில் அவர்களின் தலை மாணாக்கர்களுள் பிலிப்ஸ்கி ஒருவர்.

## தமிழ் நெஞ்சம்

தமிழை நன்றாகப் பேசுகின்றார். வேகமாக எழுதுகின்றார். தெளிவாகச் சொற்பொழிவாற்றுகின்றார். உரிய மனநிலையில் எழுச்சியான கவிதைகளும் எழுதுகின்றார். தமிழ் நாட்டிலும் தமிழ்மக்களிலும் அதிக அக்கறை உடையவராக இருப்பதால் அடிக்கடி அங்கு வந்து செல்கிறார்.

தமிழில் தெளிவாகச் சொற்பொழிவு ஆற்றும் திறமையைக் கோயம்புத்தூரில் கண்டேன். தமிழ் மாநாடு முடிவுற்றபின் பேராளர்கள் சென்ற தென்னிந்தியச் சுற்றுலாவின்பொழுது, கோயம்புத்தூர் மக்களின் அன்புக் கோரிக்கைக்குச் செவிசாய்க்கும்முகமாக, எடுத்த எடுப்பில் கவிதை நடையில் தமிழில் சொற்பொழிவாற்றி அனைவரின் பாராட்டையும் பெற்றார் எ வித ஆயத்தமுமின்றிப் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது. கட்டபொம்மனின் வரலாறுபற்றி ஆய்வுகள் நடத்திக்கொண்டு இருக்கிறார். கட்டப்பொம்மன் பற்றிய சினிமாப்படத்தைப் பார்க்க விழையும் இவருக்கு இதுநாள்வரை அவ்வாய்ப்புக்கிட்டவில்லை

செக்மொழியில் சிலப்பதிகாரம்மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவரின் பேராசிரியர் கமில் சுவலபில் அவர்கள்தான்இம்மொழிபெயர்ப்பைச் செய்துள்ளார். திருக்குறள் இன்னமும் மொழிபெயர்க்கப்படவில்லை எனக் கூறும் இவர், திருக்குறளையும் மொழிபெயர்க்கவேண்டும் என ஆர்வத்துடன் கூறினார்.

## இலங்கை நினைவுகள்

கடந்தமுறை இலங்கை வந்திருந்தபொழுது இலங்கைமக்கள் காட்டிய அன்பைப் பெரிதும் போற்றுகிறார். சிவனொளிபாதமலை அடிவாரத்தில், இவர் பெற்ற அனுபவம் பெரிது. மலைக்குச் சென்றவர் தனியாக மீண்டுகொண்டிருக்கையில் வழியைத் தவறவிட்டுவிட்டார். தேயிலைத்தோட்டம் ஒன்றினை அடைந்த அவரை அத்தோட்ட உரிமையாளர் வரவேற்று உபசரித்து உணவு கொடுத்து, ஆறுதல்கூறிக் களைப்பையும் கவலையையும் நீக்கினார். பின் தனது மோண்டார் வண்டியிலேயே இரத்தினபுரிவரை கொணர்ந்துவிட்டதை நன்றிப்பெருக்குடன் நினைவு கூருகிறார்.

அனுரதபுரியில் கண்ட பழமைச் சின்னங்கள் இவர் உள்ளத்தை ஈர்த்தன. புத்த டகோபாக்கள் வானளவுக்கு உயர்ந்து நின்றன என்றுகூறி வியந்தார்.

மீண்டும் இலங்கைக்கு வந்துள்ள அவர், இலங்கைபற்றிய நூலொன்றைத் தொகுக்க எண்ணியுள்ளார். இதற்கான விபரங்களைச் சேகரிக்கின்றார் யாழ்ப்பாணம், பொலனறுவை, திருக்கோணமலை மலைநாடு ஆகிய இடங்கட்குச் செல்லவிருக்கும் இவர் இம்மாத நடுப்பகுதியில் நாடு திரும்புகிறார்.

-மறவன்புலோ சச்சிதானந்தன்

கீழைத்தேச கல்வியில் மிக ஆர்வம் கொண்டவரான பிலிப்வெஸ்டின் என்னும் அறிஞரின் வேலைகளிலிருந்து தமிழ்நாட்டின் அரசியல் பொருளாதார சமூக நிலைகள்பற்றி ஐரோப்பியர் அறியக்கூடியதாகவிருந்தது. இவர் 'சொலிஜ் டி- புறபகண்டாஃபயிட்டின் பேராசிரியராகவும் கடமையாற்றினார். இவர் தனது பிரயாணம் பற்றி எழுதிய நூலில் மாமல்லபுரத்தைதப்பற்றி அழகாக எடுத்துக்கூறியுள்ள இந்நூல் ஆங்கிலம், ஜேர்மன் ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தாலியில் தமிழ்மொழிபற்றிய அறிவும், தமிழ்நாடுபற்றிய வரலாறும் கத்தோலிக்க மிஷனரிமார்களின் பரஸ்பர கடிதத் தொடர்புகள்மூலமும் பெறப்பட்டன.

## ரோமில் தமிழ்சங்கம்

இத்தாலியில் 16, 17, 18, 19-ம் நூற்றுண்டுகளில் மேற்கூறியவாறு அறியப்பட்டும் கற்கப்பட்டும் வந்த தமிழ் 20 ம் நூற்றுண்டாகிய இக்காலப் பகுதியில் சங்கம் வைத்து கற்கத்தக்க அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. 1934-ம் ஆண்டிலிருந்து ரோமிலுள்ள எர்பானேடி புறபகண்டாஃபயிட் (Collegegio urbend propaganda fide) என்ற கல்லூரியில் வீரமா முனிவர் தமிழ் சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கம் தமிழ் கல்வி வளர்ச்சிக்கு உழைத்துவருகிறது. ரோமிலுள்ள பல்கலைக்கழகங்களின் உயர் பட்டப்படிப்பு பட்டதாரிகளும், தமிழ்பேசும் பல்கலைக்சழக மாணவர்களும் இச்சங்கத்தின் மூலம் தம் தமிழ் சல்வியை வளர்த்துக் கொள்கிறார்கள். ரோமாபுரி பல்கலைக் கழகங்களில் கலாநிதிப் பட்டப் பரீட்சைக்கு மாணவர்கள் ஆய்வுக் கட்டுரைகள் எழுதவும் இச்சங்கம் உதவியளிக்கிறது. பக்தி இலக்கியங்கள், தத்துவம், சைவசமயம் ஆகியனபற்றி இப்பல்கலைக்கழகங்களில் போதிக்கப்படுகின்றது இத்தாலியின் மற்றுமொரு பிரதான நகரமான நேபிள்ஸிலுள்ள கீழைத்தேச கல்வி நிறுவனமும் இத்தாலிய மாணவர்களின் தமிழ் கல்விக்கு உதவிபுரிகிறது. இந்நிறுவனம் வருங்காலத்தில் தமிழ் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியத்தக்க வகையிலுள்ளது. இந்நிறுவனத்தின் பேராசிரியர்களான நுளோமினிசி, ஏ. பௌசனி ஆகியோர் தமிழ் கல்வியை இங்கு கற்பித்து வருகிறார்கள். இவர்களும் மற்றும் இத்தாலிய பல்கலைக் கழகங்களும் தமிழ் கல்வியில் காட்டும் ஆர்வத்தை நோக்குமிடத்து இத்தாலியில் தமிழ் கல்வி வளர்ச்சிக்கு நல்லதோர் எதிர்காலம் உண்டு எனத் துணிந்து கூறலாம்.

(தொடரும்)

## திருவாசகத்தேன்

# "இவனார் என்று என்னை இகழாரோ?"

விளக்கம் செய்பவர்

க. வை. ஆ சர்மா

உடையாள் உன்தன் நடு
விருக்கும், உடையாள்
நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இரு
வீரும் இருப்பதானால்
அடியேன் உன்
அடியார் நடுவுளிருக்கும்
அருளைப் புரியாய்
பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்
கருத்து முடியும் வண்
ணம் முன்னின்றே

அகில பிரபஞ்சத்தையும் தமது உடைமையாகக் கொண்டிருப்பவர் உமாதேவியாகிய சிவசக்தி. அதனால் அவர் ஒருவரே உடையாள் எனக் குறிக்கப்படுகிறார். பொன்னம்பலம் எனப்படும் கனகசபையிலே முடிவும் முதலும் இடையீடும் இல்லாத ஆனந்தக் கூத்தினை அருளும் பிரானே! அந்தச் சிவசக்தி உன்னிடத்திலே பிரித்தறியவொட்டாதுகலந்திருக்கிறார். நீயோ அவளிடத்தே வேறுபாடின்றி விளங்குகிறாய். அவ்வாறு ஒன்றுபட்ட பெருமாட்டியும் பெருமானுமாகிய நீவிர் இருவீரும் தமியேனது நெஞ்சத்துள் வீற்றிருப்பது மெய்யேயானால்; அடியேன் கொண்ட மனக்கருத்தோ பிறவித்துன்பத்தை தவிட்டு நீங்கி விடுதலைபெற்று உன் திருவடி நீழலில் பேரின்ப வாழ்வுபெறுவது; அதன் பொருட்டுத் தமியேனை உனது அடியார்களின் மத்தியில் இருத்தும்திருவருளைப் புரிவாயாக, (1)

### இவனார் என்றாரோ?

முன்னின் றாண்டாய் எனை
முன்னம்யானும்
அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்
கின்றேன் பிற்பட்
டொழிந்தேன்
பெம்மானே
என்னின் றருளி வரநின்று
போந்தி(டு) என்னா
விடில் அடியார்
உன்னின்(று) இவனார்
என்னாரோ? பொன்னம்
பலக்கூத் துகந்தானே.

உலக வாழ்விலே மயங்கி மந்திரியாகக் கட[illegible] நின்ற என்னைத் [illegible] துறையிலே குருமூர்த்தியாக வலிய வந்து ஆட்கொண்டு அருளிய பெருமானே! அது முதலாக யானும் முயன்று தேவரீர் இட்ட கட்டளைப் படியாகப் பணியாற்றி நிற்கின்றேன். அப்படியிருந்தும்தமியேனுடன் உணர்ந்து சிவப்பணிபூண்ட அடியார் என்னைவிட்டுப்பிரிந்து போய் விட யான்மாத்திரம் எஞ்சி நின்று வருந்துகின்றேன். பெருமானே! தமியேனையும் மேலெழுந்து வருக எனத் தேவரீர் திருவருள் புரிந்து விட்டால் பொன்னம்பலத்திலே விரும்பிநின்று திருக் கூத்து அருளும் நடராச வள்ளலே! உன் பாங்கரில் உள்ள அடியார் இவனார் என்று என்னை இகழமாட்டார்களோ. (2)

### தக்கவாறு அன்று என்னாரோ?

உகந்தானே அன்புடை
அடிமைக்(கு) உருகா
வுள்ளத்துணர்விலியேன்
சகந்தா னறிய முறை
யிட்டால் தக்கவா
றன்(று) என்னாரோ
மகந்தான் செய்து வழிவந்
தார் வாழவாழ்ந்தாய்
அடியேற்குன்
முகந்தான் தாரா விடின்
முடியேன் பொன்னம்
பலத்தெம்
முழுமுதலே.

[illegible]

ஏற்றுக்கொண்ட பெருமானே! உன்னைப் பற்றிய உணர்வுகொண்டு உருகாத உள்ளத்தினையுடைய எளியேன் உலகம் அறியும்படி ஓலங்கொண்டு முறையிடுவேனாயின், நீ அருளாதொழிவது தகுதியற்றது என்று உன்னடியார்கள் சொல்ல மாட்டார்களா? உன்பொருட்டு முறையான வேள்வி செய்து அருள்வழி நின்றவர் அதாவது வழிபாடு செய்தவர் இன்பவாழ்வு பெறும்படி அருள்செய்தாய் பொன்னம்பலத்தில் அருள் விளங்கும் முழுமுதற் பொருளே! உன் திருமுகத்தைத்தானும் காட்டாவிட்டால் இறப்பேன் இது உறுதி

### மூவர்க்கும் என்தனக்கும் வழிமுதல்

முழுமுதலேஐம்
புலனுக்கும் மூவர்க்கும்
என் தனக்கும்
வழிமுத லேநின் பழவடி
யார்திரள் வான்கெழுமிக்
கெழுமுத லேயருள்
தந்திருக்க இரங்குங்
கொல்லோ என்
றழுமது வேயன்றி மற்றெண்
செய்கேன்
பொன்னம்பலத்தரசே

இறைவன் ஒருவனே ஒரு குறைவும் இல்லாத பரிபூரணன். மற்றைய யாவரும் யாவும் நிறையப் பெற வேண்டியகுறைவுடையவர். அதனால் முழுமுதலானவன் இறைவன். ஐம்புலன்களை அடக்கிஅவற்றை நல்லநெறி படுத்துவதற்கும், பிரமா, விஷ்ணு உருத்திரன் ஆம் மும்மூர்த்திகள் தம் செயல்களைத் தவறாது செய்வதற்கும், நாயினுங்கடைப்பட்ட தமியேனுக்கும் நல்லவழியாக இருக்கிறான் இறைவன். இறைவா! உனது வழிவழியக அடிமைத்திறம் பூண்ட பழைய அடியார்கள்கூட்டம்தேவர் கூட்டத்திலும் மேம்பட்டு எழும்படி அருள் செய்யும் முதல்வனே! தமியேனுக்கு உனது அருள்வர இரங்குவாயா என்று அழுவதேயல்லாமல் பொன்னம்பலத்தில் ஆடும் அரசனே வேறுயான் செய்யத்தக்கதுதான் யாதோ?

### ஏசற்றிருந்தே வேசற்றேன்

அரைசே பொன்னம்பலத்
தாடும் அமுதே என்றுன்
அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத்
திரவுபகல் ஏசற்றிருந்தே
வேசற்றேன்
கரைசேர் அடியார் களி
சிறப்பக் காட்சி கொடுத்
துன்னடியேன்பால்
பிரைசேர் பாலில்நெய்
போலப் பேசாதிருந்தால்
ஏசாரோ,

நீர்க்கரையிலே தனக்கு ஏற்ற உணவு கிடைக்குவவரையும் கொக்குப் பறவையானது மிக வாடிப்போய் இருக்கும். அதுபோல உலகுக்கெல்லாம் ஒரே அரசனாகி பொன்னம்பலத்திலே கூத்தப்பெருமானாகி விளங்கும்

[12ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானகத்துத் தேவதை [11]

— க. கனகலிங்கம் —

மேடையின்கீழ் ஒளிந்திருந்த கண்ணன் அவ்ராட்சதன் என்ன செய்யப்போகின்றானென எண்ணியவனாய் மறைந்திருந்தான். மேடைக்குவந்த ராட்சதன் மேடையின் மேற்பரப்பில் காணப்பட்ட கதவுபோன்ற பொருளை மேலும் கீழும் அசைத்தான். அது திறந்துகொள்ளவே ''கட கட'' வென்று கீழேயிறங்கலானான் அப்பொழுதுதான் தான்நின்றஇடம்மேடையல்லவென்றும் அது ஒரு சுரங்க அறையின் மேற்பரப்பென்றும் கண்ணன் அறிந்துகொண்டான். சிறிது நேரத்தில் அவ்ராட்சதன் சுரங்க அறையினின்றும் வெளியேறிச்செல்லவே ஒளிந்திருந்த கண்ணன் மேடையின் மேலேறி அவ்ராட்சதன் செய்ததுபோல் கதவு போன்ற பொருளை மேலும் கீழும் அசைக்கவே அக்கதவு திறந்துகொண்டது. முன்பின் யோசியாதவனாய் சுரங்கப் படிகள் வழியே கீழிறங்கலானான். அங்கு அவன் கண்ட காட்சி பட்டினியால் உடலெல்லாம் மெலிந்து குற்றுயிராய் துவண்டு கிடக்கும் பெரிய மனிதர்கள் ஒருபுறமும். மறுபுறம் பச்சிளம் சிறார்களும் சங்கிலியில் பிணைக்கப்பட்டு பெரிய கற்தூண்களோடு கட்டப்பட்டிருந்தனர். அவர்களில் சிலர் இறந்தும் காணப்பட்டனர்.

எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கும் அவர்களைக் கண்டதும் கண்ணன் தன்னையறியாமலே அழுதுவிட்டான். அவனைக் கண்ட மனிதவுருவங்களெல்லாம் ஏதோ சொல்வதற்கு வாயையசைத்தன. ஆனால் அவர்கள் பேசுவதற்குச் சக்தியிருந்தால்தானே? மற்றப்பகுதிகளில் என்ன இருக்கின்றதென்று அறிய விரும்பியவனாய் அவ்விடத்தைவிட்டு நீங்கிச் செல்லலானான். ஓரிடத்தில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் ஓர் பெண் தேவதையின் சிலையொன்றைக் கண்டான். அச்சிலையைப்பார்க்கவே அவனுக்குப் பயமாகவிருந்தது. அவ்வளவு பயங்கர ரூபத்தில் அச்சிலை அமைக்கப்பட்டிருந்தது. அச்சிலைக்கு முன்னால் பலிபீடம் போன்று ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. அம்மேடையைச் சுற்றிக் குருதிகாய்ந்திருந்தது- கண்ணனுக்கு எல்லாம் புரிந்துவிட்டது.

திடீரென்று பயங்கரச் சத்தம் கேட்கவே பயந்தவனாய் ஓடோடிச் சென்று சங்கிலியில் பிணைக்கப்பட்டவர்களில் ஒருவனாய் அவர்களுடன் படுத்துக்கொண்டு என்ன நடக்கவிருக்கின்றதென்பதை அவதானித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு சிறுவனையும், ஒரு வயதுவந்த ஒருவனையும் பிடித்து இழுத்துவந்து பலிபீட மேடையில் நிறுத்தினார்கள் இரு ராட்சதர்கள். அவ்ராட்சதர்களைத் தொடர்ந்து ராட்சதத் தலைவன் முன்னோக்கிவர அவனைத் தொடர்ந்து மற்றும் ராட்சதர்கள் வந்துகொண்டிருந்தனர். கம்பீரமாக நிற்கும் சிலைக்குப் பூசை ஆரம்பமாகியது. ராட்சதர்கள் பக்திப் பரவசத்தோடு ஆடினர், பாடினர். சிலைக்கு முன்னால் பெரிய வாளொன்று பளிச்பளிச்சென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில்ராட்சதத்தலைவன் பலிபீடத்திற்குமுன் வர ராட்சதனொருவன் வாளைத் தூக்கி ஓங்கியவண்ணம் வந்தான். வாளைக் கண்டதும் சிறுவன் ''ஐயோ அம்மா'' வென்று கத்தினான். வயதுவந்தவனோ பயத்தினால் திமிறினான். கண்மூடித் திறப்பதற்குள் இருவர்களது தலையும் வாளுக்கு இரையாகித் தரையில் உருண்டன, குருதி பாய்ந்து மேடையைச் செம்மையாக்கியது. ராட்சதர்கள் சிலைக்குப் படைத்த உணவுப் பொருட்களைக் கொண்டுவந்து சங்கிலியில் பிணைக்கப்பட்டிருந்தவர்களுக்கு முன்னால் போட்டுவிட்டு அவ்விடத்தைவிட்டு நீங்கிச் சென்றனர். நல்ல காலம் கண்ணனை அவர்கள் காணவேயில்லை.

(தொடரும்)

## உலகில்...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

கள் உடனடியாக விளங்கிக் கொள்ளவியலும். கைராட்டினத்தில் கடவுளின் அருள் தொழிற்படுவதை நான் காண்கிறேன், ஏனெனில் கைராட்டினம் மிக்க தாழ்ந்த, நிலையிலுள்ள ஏழைமக்கட்குப் பூரணமான மனநிறைவை உண்டாக்கவல்லது. காலம் வாய்க்கும்போதெல்லாம் கைராட்டினத்தையே தியானிக்கிறேன். அதிலேயே வேலை செய்கிறேன். அதையே பிரார்த்திக்கிறேன். அதைப் பற்றியே பேசுகிறேன். இந்தியா ஒருபுறமாக உலகில் உண்ணப் போதிய உணவின்றி வறுமையில் ஆழ்ந்து தவிக்கும் மக்களுக்கு மிக அண்மையாக உங்களை வரச் செய்ய வல்லதும் அவர் நிலையில் உங்களைச்சமமாக்க வல்லதுமாக வேறொன்றை நீங்கள் எனக்குக் காட்டுவீர்களாயின் நான் கைராட்டினத்தைப் புறத்தேவிட்டுவிட்டு அப்புதியதை மனமுவந்து ஏற்பேன்.

பிட்சாபாத்திரத்தை ஏந்திக்கொண்டு நாணமின்றி வீடுவீடாகச்சென்று மனவிருப்பத்துடன் ஏதாவது கொடுக்கும்படி நான் கேட்டுத் திரிவதன் நோக்கத்தை இப்போது விளங்கிக் கொள்வீர்கள் என்று எண்ணுகிறேன்.

நான் குறிக்கப்பட்ட நேரத்தை கடந்து அதிகம் பேசிவிட்டேன். உங்கள் பொறுமைக்கும் எல்லையுண்டு. மாணவ உலகத்துக்கு நான் சொல்லவேண்டிய செய்திகள் பல. அவர்கட்குஎன்மீது அதிகம் நம்பிக்கையுண்டு. நீங்கள் மனமுவந்து எனக்களித்த உபசாரத்துக்கு மனப்பூர்வமான நன்றி கூறுகிறேன். நான் கொழும்பு நகரில் நிற்கும்போது உங்கள் மகாநாட்டின் நோக்கங்களை பற்றிய வரலாறுகள் எழுதப்பட்ட பத்திரமொன்று உங்களிடமிருந்து கிடைத்தது. அதனை நோக்குமிடத்து உங்கள் தொண்டுகள் பாராட்டப்படவேண்டியனவாகும்.


# மாணவரின் வாழ்வு நலம்பெற மாண்புமிகு நான்கு வழிகள்

— டாக்டர் ஸாகிர் ஹுசேன் —



நான் பலமுறை கூறி வந்திருக்கிறேன்; வாலிபர்களுடைய, குறிப்பாகமாணவர்களுடைய வாழ்வின் வளர்ச்சிக்கு நான்கு அடிப்படை நலன்களைப் புரிந்துகொண்டு அவற்றை ஆரம்பமுதற்கொண்டே பழக்கத்தில் கொண்டுவரவேண்டும். இவற்றைச் சாதாரணமாணவன்கூட எளிதாக மேற்கொள்ளலாம், இவை ஆரோக்கியம், வலிமை, அழகு, தூய்மை.

இவைநான்கும் நல்வாழ்வின் அடிப்படைச் சாதனங்கள் என்பதைப் புரிந்துகொள்வதில் என்ன சிரமம் இருக்கப்போகிறது? வியாதியை எதிர்க்க ஆரோக்கியத்தையும், பலவீனத்தையும் அகற்றவலிமையையும், குரூபத்தை ஒதுக்க அழகையும், அசுத்தத்தை ஒழிக்கத் தூய்மையையும் மிகச்சாதாரணவாலிபன்கூட வளர்த்துக்கொள்ளமுடியும். இதற்குத் திறமையோ, வசதியோ தனியாகவேண்டியதில்லையே!




இந்த நான்கு நலன்களையும் மேற்கொள்ள முயற்சி தொடங்கினால், தொடர்ந்து மேலும் சில தொடர்புள்ள நலன்களை மேற்கொள்ளும் முனைப்புத் தானாகவே ஏற்பட்டுவிடும். அவை:

1 ஆரோக்கியமானஉடல். உள்ளம், ஆரோக்கியமான நடத்தை.

2 வலிமையுள்ள உடல், உள்ளம், ஒழுக்கம்.

3 அழகான உடல், உள்ளம், நடத்தை.

4 தூய்மையான வாழ்க்கை, உள்ளம், நடத்தை.

இந்த லட்சியங்களை வாலிபர்கள் மேற்கொள்வார்களானால், அவர்கள் என்னதான் ஏழையாக இருக்கட்டுமே; பெரும் மதிப்புக்கு ஆளாவார்கள்; போற்றப் பெறுவார்கள். இந்தத்தன்மைகள் வளரவளர, பிரதேசப்பித்து நாட்டுப் பெருமை. இனவெறி, குடிமைச்செருக்கு எல்லாம் மறைந்து, மனிதநேயம் வளரும், உலகப் பொதுமகன் என்கிற தன்னிறைவும்பெருமிதமும் ஏற்படும். அப்போது உங்களுடைய பிறந்த பொன்னாட்டையும், தொன்மையான பண்பாட்டுத் தொடர்பையும்உலகம் போற்றும்; அதில் நீங்கள் பெருமை காண்பது தான் ஏற்றமாவதோடு, ஏற்புடையதுமாகும்.

இதற்கெல்லாம் இளைஞர்கள் தருணம், வாய்ப்பு என்று பார்த்துக்கொண்டிருக்கவேண்டியதில்லை. சமூகம் நல்லநிலைக்கு வந்த பிறகு, நாம் நல்ல தன்மைகளை மேற்கொள்ளலாம் என்று சும்மா இருப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும் பிறர் திருந்தட்டும் அல்லது எல்லோரும் திருந்தவேண்டும் என்று எண்ணிக்கொண்டு. நம்மைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பதும் மேன்மைக்குத் தடைதான்.

சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு ஏற்பத்தான் வாலிபர்களின் கல்விப் பயிற்சி அமைகிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் எத்தகைய சூழ்நிலையிலும் உயர்தரமான கல்வியறிவையும், நெறியுணர்வையும், பெறமுடியுமென்பதையும் நாம் மறக்கலாகாது.

எங்கேயோ படித்த ஞாபகம்; கல்விக் கோட்பாடுகளை வென்றவர்கள் தம் காலத்துக் கட்டுப்பாடுகளுக்கு அடிமையாவதில்லை மரபுகளுக்குத் தாஸர்களாவதும் இல்லை. அவர்கள் நல்லதைத் தம் நல்லியல்பு கொண்டே கணிக்கிறார்கள். வோட்டுப் பெருக்கம் பெற்று வெற்றி கண்டதற்காக இன்னா இயல்புகளை மறந்து இனிய இயல்புகளை ஏறிட்டுக் காண்பதில்லை.

எனவே வருங்கால வழிகாட்டிகளாக விளங்கவேண்டிய வாலிபர்கள் முதலில் தம்மைக் கவனித்துக் கொள்ளவேண்டும். நலன்கள் நிரம்பிய செப்பமான வாழ்வை மேற்கொள்ள வேண்டும். பொது இயக்கம், கொண்டாட்டம், கூச்சல், குழப்பம் ஆகியவற்றின் கவர்ச்சியில் தம்பொறுப்புக்களை குறிப்பாகத் தம்மைக் கவனித்துக் கொள்வதை மறந்துவிடலாகாது: சுயதன்மை திறமைகளை அழக்காமல் பாதுகாத்து வரவேண்டும். பலாபலன்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பொறுப்புணர்வைத் தம் ஒவ்வொருசெயலிலும் மேற்கொள்ள வேண்டும்,

குற்றம் காணவேண்டும், எதிர்ப்புஉணர்வைக் காட்ட வேண்டும் என்று துடிப்பு ஏற்படுகிறபோது, அதை உங்கள்பக்கமே திருப்புங்கள். நாம் எல்லோருமே நம்மை நாமே திருத்திக் கொள்ளவேண்டிய பல தவறுகளையும் குறைகளையும் கொண்டவர்கள்தாம்.

நலனைப் பிறரிடமும் தம்மிடமும் ஆராய்வது தான் வளர்ச்சிக்கு ஆக்கமளிக்கும் பலகுறைகளிலிருந்து நம்மை நாமே விடுவித்துக் கொள்ள இந்த மதிப்பீடு உதவும். வாழ்வு நல்லபாதையில் முன்னேற வழிகாட்டும்.

நான் மேற்கொண்டுள்ள கோட்பாடு இதுதான். பிறருக்குத் தொண்டு புரியும் வாய்ப்பு ஏற்படும்போது மனமுவந்து முன்வந்து தொண்டாற்றுவது நாம் உள்ளமறிந்து புன்மை தீமை ஏதும் செய்யவில்லை என்கிற திருப்தியுடன் வாழ்தல். இந்த இரண்டும்தான் பண்புள்ள மனித வாழ்வுக்கு இன்றியமையாதவை.

மாணவர்களுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்:- அவர்கள் எந்தத் துறையில் இருந்தாலும் சரி, கடுமையாக உழைக்க வேண்டும். ஆர்வத்துடன் பணி புரிய வேண்டும். நாட்டின் வளத்துக்குத் தம்பணி உறுதுணை என்பதை நம்பிச் செயலாற்றவேண்டும்.

## உன்னை உலகம் போற்ற...

வி. இன்னாசிமுத்து

உன்னை உலகம் போற்ற
உண்மை வழியே நடப்பாய்
நன்மை செய்தே நாளும்
நல்லாரோடு சேர்வாய்

தந்தை தாயே தெய்வம்
தலை வணங்கி நிற்பாய்
நிந்தை செய்வோர் தன்னை
நேசித் தென்றும் வாழ்வாய்

அன்புக் கென்றும் அழிவு
அவனி தன்னில் இல்லை
இன்டம் எங்கும் நிறைய
இறையை என்றும் தொழுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்கு அவசியமானது அன்பா? அழகா?

திருமதி
— எம். எஸ் இலியஸ் —

வாழ்க்கைக்கு அவசியமானது அன்பா அல்லது அழகா? இது பெரும் வாதத்திற்குரிய தொன்றாகும். நன்றாக ஆராய்ந்து தெளிய வேண்டிய விஷயம் அல்லவா தாமரை அழகாகத்தான் இருக்கிறது, எனினும் அதனை எவரும் அணிய விரும்புவதில்லையல்லவா? ஏன்? அதனிடம் அவசியம் அமையவேண்டிய மணம் இன்மையேயாகலாம் ஆனால் மருக்கொழுந்து நிறம், அழகு, கவர்ச்சியற்ற ஒருவகைத்தழை. அதை மக்கள் மதிக்கிறார்கள். அம் மருக்கொழுந்து மங்கையர் கூந்தலை அலங்கரிக்கிறது. வாலிபரின் காதுகளில் வீற்றிருந்து ஊர்வலம் வருகிறது. மாந்தர் மார்பில் மாலையாகத் திகழ்கின்றது. இத்தனைக்கும் காரணம் என்ன? அதனிடம் பொருந்தி அமைந்துள்ள இதயம் கவரும் மணம் என்பது கூறாமல் விளங்குமன்றோ. மலர்களிடம் இவ்வாறான வேறுபாடுகள் காணப்படுகின்றன. சீவபிராணிகளிடத்தும் இதேபோன்ற வேற்றுமையை நாம் காணலாம். மயில் ஓர் அழகான பட்சி. அதுதன் அழகைக்காட்டி மக்களின் மனதை மயக்குகிறது. ஆனால் மக்களுக்கு எவ்வளவு தூரம் நலன் கிட்டுகிறது, நன்மை ஏற்படுகிறது என்றால் மிகக் குறைவென்றே கூறிவிடலாம். ஆனால் அழகும், கவர்ச்சியும் உள்ள மயிலைப்போலல்லாத ஆடு, மாடு முதலிய மிருகங்கள் மக்களின் உயிர்ப் பிரச்னைகளைத் தீர்க்கும் சமுதாயத்தொண்டர்களாக இருக்கின்றன. அவர்களின் வருபடியால் எத்தனையோ பேர் வாழ்கின்றனர். நாகபாம்பு அழகாகத்தான் இருக்கிறது. அது படமெடுத்தாடும் காட்சி பார்க்கப் பரவசமூட்டுகிறது. ஆனால் உயிருக்கே ஆபத்து விளைக்கும் நச்சுப்பாம்பு. எனவே வெளியழகில் மாத்திரம் பயனில்லை என்பது தெள்ளிதில் புலனாகின்றது.

**கண்டோரால் விரும்பப்படும் தன்மையேயழகு**

ஆறறிவு படைத்த மனிதனை நோக்குவோம். அவனைப்பொறுத்தமட்டில் அழகு என்பதற்குத் தனி இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. அதாவது கண்டோரால் விரும்பப்படும் தன்மைதான் அழகு என்பதே அவ்விலக்கணம் அது அநேகமாகத் திரு, கவின், அழகு என்ற சொற்களால் குறிக்கப்படும். இந்த இலக்கணப்படி ஆய்ந்து நோக்கின் உண்மையழகு நன்கு புலப்படும். ஆனால் மனிதன் அழகு என்னும் சொல்லை வெறும் வெளி அழகு என எண்ணித் தப்பான கோணத்தில் நின்று நோக்குகிறான். வெளியழகின் பெயரால் வீண் பெருள் விரயத்திற்கும், இன்னல்களுக்கும் ஆளாகி வருந்தி மனமுடைகிறான். அழகே நாகரிகம் என்ற முனைப்பில் எத்தனையோ நாசவேலைக்கும், அழிவுத் தொழிலுக்கும் ஆளாகிவிடுகின்றான்.

இயற்கையழகைப் பெறாதவன், செயற்கை அழகில் ஈடுபடுகின்றான் எவ்வளவோ பணத்தை இதற்காக வீணில் செலவழிக்கின்றான். இவ்வளவிற்கும் காரணம்தான் என்ன? அவன் மனம் உண்மையழகை உணராமையாகும். அறிஞர்கள் வகுத்த இலக்கணப்படி பார்த்தால் அழகு நாகரிகத்தின் அடிமையல்ல. முழுக்காற்சட்டையோ, மூக்குக் கண்ணாடியோ, கழுத்துப் பட்டையோ கவின் தரமுடியாது.

உதட்டுச் சாயமோ, கண் மையோ, இதமளிக்க முடியாது. கழுத்துச் சங்கிலி அணிவதில் - காதில் வைரத் தோடுகள் மின்னுவதில்- தங்க வளையத்தில் மாட்டிய கைக்கடிகாரத்தில், உண்மையாக எழில் கிட்டுவதாக சொல்ல முடியாது விதம் விதமான போடர்ச் சாரிகளோ, பளபளப்பூட்டும் சோளிச் சட்டைகளோ கவின் தரமுடியாது. மேனாட்டுக் கண்மூடி நாகரிகங்களுக்கு இவ்வழகை அளிக்கும் சக்திதான் உண்டா? இல்லை! இல்லை!! அதற்குப் பதிலாக உண்மையழகை நற்பண்பான அன்புக்குணம் அழைத்துவருகிறது. பொருளாலோ, பணத்தாலோ வாங்கிவிடமுடியாத உயிர்ப் பொருள் அன்பினாலாகும். அன்பே அழகாம். இந்த அழகு உண்மை அறிஞர்கள் கண்டறிந்ததாகும். இதனை வலியுறுத்தும் நோக்கமாகவே,

''குஞ்சியழகும் கொடுந்
தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல-
நெஞ்சத்து
நல்லம் யாம் எனும்
நடுவு நிலைமையாற்
கல்வியழகே அழகு''

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நெஞ்சில் நல்லவனாய் மனத்துக்கண் மாசிலனாய் நடுநிலை தவறாத நற்பண்பினனாய் இருத்தலேயழகாம். இவ்விதப் பண்புகளே ஒருவனை அழகுபடுத்த முடியும். இதனை உணர்த்தவே தெய்வப் புலமைத் திருவள்ளுவரும்,

''சமன்செய்து சீர்தூக்கும்
கோல் போலமைந்து
ஒரு பால் கோடாமை
சான்றோர்க்கணி',

எனக் கூறிச் சென்றார்

இந்த நல்லம் யாம் எனும் நடுவு நிலைத் தன்மை எவரிடம் இயற்கையாக அமைந்துள்ளதோ அவரிடம் குணங்களுக்கெல்லாம் அடிப்படை அன்பாகிய அழகு அமைகிறது. இத்தகைய சான்றோர்க்கெல்லாம் அமையும் அன்பு மனமே அவர்களின் கீர்த்திக்கும், உயர்ச்சிக்கும் காரணமாக இருக்கின்றது. இத்தகைய சான்றோர்களிடம் அமையும் அன்பு மனம் காரணமாக மக்களால் கவரப்படுகிறார்கள். எனவே இவர்களிடம் ''கண்டோரால் விரும்பப்படும் தன்மை'' என்ற இலக்கண நியதி இயல்பில் அமைகிறது. இவர்கள் உருவில் எப்படித் தோன்றினாலும் உண்மை அழகு மிளிரத்தான் செய்கிறது. இந்த அன்பு உள்ளத்தில் உதிக்கும் ஒருவகை நெகிழ்வுணர்ச்சியேயாம். இது இரத்தத்தில் ஊறி வளரும் ஒருவகைக் குழைவுத் தன்மை, நற்குண நலன் பிறப்பதற்குத் தாயகமாக விளங்கும் ஒருவித ஆர்வ உணர்ச்சி எனவே தான் அன்பின் அடிப்படையில் அழகு அமைகிறது என்கிறோம். அன்பு உள்ளத்தே தோன்றுவது. அழகு புறத்தே நின்று அகத்தை மகிழ்விப்பது. அன்பில்லாத இடத்து அழகு அமைகிறது. எனவே அன்பைக்கொண்டே அழகை மட்டிட முயல்வதேயன்றி அழகைக்கொண்டு அன்பைக் கணிக்கமுடியாது.

**அன்பின் அடிப்படையில் வாழ்வு**

பண்டைத் தமிழ்மக்களின் வாழ்வு அன்பின் அடிப்படையில் அமைந்திருந்தது. இதற்கு இலக்கியங்களில் அதிக சான்றுகள் உள. உதாரணமாக அன்பில் விளைந்த நட்பினை எடுத்துக் கொள்வோம். சீரிய நட்புக்கு உதாரணம் சொல்லவேண்டுமானால் கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையர் என்ற இருவரிடையே நிலவிய தாரணி விளங்கும் நட்பைக் கூறலாம். பயன் கருதாது உள்ளன்பால் ஒருபுலவனும் ஒரு புரவலனும் பிணைந்திருந்தார்கள். காவலனும் பாவலனும் ஒருவரையொருவர் கண்டதும் கிடையாது அரசன் சோழநாட்டினன். புலவன் பாண்டிய நாட்டினன். ஆயினும் இருவரிடமும் தோன்றி வளர்ந்த அன்பு நாகரீக உலகமே வியக்கின்ற அளவுக்குச் சிறப்புற்றிருந்தது.

'புணர்ச்சி பழகுதல்
வேண்டாம் உணர்ச்சி
தான்
நட்பாங்கிழமைதரும்'.

என்ற வள்ளுவநாயனார் வாய்மொழிக்கு இலக்காக அவர்களின் நட்பு அமைந்திருந்தது.

சிறந்த காதலுக்கு எண்ணிறந்த எடுத்துக்காட்டுகள் கூறலாம். வண்ணமலர்கள் விரிய, தென்றல் சுதி மீட்ட, புள்ளினங்கள் இசை பாட, மலர்க்கொடிகள் நடனமாடும் அழகியகாட்சிகள் நிறைந்த சோலையில் அன்னமன்ன மங்கையொருத்தி மலர்பறித்து நிற்கிறாள். அங்கே ஏறெனும் தலைவனொருவன் வருகிறான், இருவரும் முன்பின் ஒருவரையொருவர் அறிந்தவரல்லர். ஆனால் இருவர் கண்களும் உறவாடி நயன பாஷைகள் பேசின. இருவரதும் மனமும் கருத்தும் ஒன்றுபட்டன, அவர்களின் அன்பு கங்குகரையற்றதாகக் காணப்பட்டது. அவர்களிடையே வாய்ச்சொல் பயனிலவாயிற்று இருவரும் கூடி மகிழ்ந்தனர். பின்னர் பிரிவிற்கு ஏதுவாயிற்று. பிரிவின் துன்பம் இருவரையும் மிகவருத்தியது. வருத்தம் அளவிலா வாட்டத்தை அளித்தது, தன் காதலி வருத்தமுறுவதைக் கண்ட தலைவன் மனம் வெதும்பிற்று. அவன் இரங்கி, 'அன்பின் மலரே வாட்டமுறேல். சிவந்த மண் நீ. அந்த மண்ணில் ஊறிய நீர் யான்; நீர் மண்ணைவிட்டுப் பிரிந்தாலும் மண்ணோடு சேர்ந்த குடத்தை விட்டுப் பிரியாது. அந்நிறத்தைத் தன்னோடு உடன்கொண்டு செல்லும். அதையொப்பவே நீராகிய யான் உன்னை விட்டுப் பிரிவேனோ. இடத்தால் பிரிந்தாலும் மனத்தால் ஒருகணமும் பிரிய மாட்டோமல்லவா', என ஆறுதல் கூறினான்.

'யாயும், ஞாயும்
யாராகியரோ
எந்தையும் நுந்தையும்
எம்முறைகேளிர்
யானும் நீயும்
எவ்வகையறிதும்
செம்புலப் பெயல்நீர்
போல
அன்புடை நெஞ்சம்தாங்
கலந்தனவே''

எனத்தன் அன்பைப் புலப்படுத்தினான் என்றால் அவ்வன்பின் பெருமைதான் என்னே!

'அன்பின் வழியது
உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த
உடம்பு'

எனும் வள்ளுவ வாக்கு, உணர்தற்குரியது. அன்பே உயிர். அன்பிலா வாழ்வும் வாழ்வாகுமா அன்பிலா வாழ்வை அடியற்ற மரம் எனின் மிகப்பொருந்துமன்றோ.

## மாங்காய் சாதம்

இப்பொழுது மாங்காய் சீசன் அல்லவா? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். மாங்காய் மிக மலிவாகவும் வசதியாகவும் கிடைக்கும் இக்காலத்தில் சுவையான மாங்காய் சாதத்தைச் செய்துபாருங்கள்

**தேவையான பொருட்கள்:**

மாங்காய் - ஒன்று
கால்சுண்டு அரிசி சமைத்த சாதம்.
கடுகு - சிறிதளவு
பெருங்காயம், பச்சை மிளகாய் சிறிதளவு
நெய் - 8 மேசைக்கரண்டி.
நல்லெண்ணெய் ஒரு மேசைக்கரண்டி

**செய்யும் முறை**

மாங்காயைத் தோல் சீவித் துருவிக் கொள்ளவும். வாணலியில் நெய்யையும் எண்ணெயையும்விட்டுக்கடுகு பெருங்காயத்தைத் தாளித்துக் கொண்டு பச்சை மிளகாயையும் மாங்காய்த் துருவலையும் போட்டு நீர் வற்றப் பொரித்தெடுத்துக் கொள்ளவும் நன்றாக ஆறியதும் தேவையான உப்புப் பொடி சாதத்துடன் சேர்த்துச் சிறிது நேரம் வைத்துவிட்டு எடுத்துப் பரிமாறவும்.

-சரோ சங்கர்


## மினிக்குத் தண்டனை

தான்ஜானியா நாட்டில் பெண்கள் 'மினி' ஆடையை அணிந்து கொண்டாலும், ஆண்கள் இறுக்கமான (டைட்ஸ்) ஆடைகளை அணிந்து கொண்டாலும் மூன்றுமாத கடும் உழைப்புத் தண்டனை அளிக்கப்படுகின்றதாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(5ம் பக்கத் தொடர்ச்சி)

விறுக்கடியாகி வெளியேறி நடந்தாள். விசாலாட்சி தன்னை அந்தமறுமழிகேட்டு விட்டு மனத் துருதுருப்பில் விசாலாட்சியைப் பிடித்து நாலுகூடானமறுமழிசேட்டு விட்டு மனம் ஆறும் நோக்கத்தோடு இவ்வேளை அரையில் வெறுங்குடத்தோடு திடுதிடுப்பென்று வீட்டிற்குள் நுழைந்த இளையாச்சி') பெண்ணாள் ஒரே தண்டவாளத்தில் எதிர் எதிராக வந்த கடுகதிரயில் வண்டிகள்பயங்கரமாக மோதிக்கொள்வது போல அவளுடன் மோதிக்கொண்டதும் விசாலாட்சியின் கையிலிருந்தமுட்டைப் பாத்திரம் நினைக்க முழிக்க அப்படியே கைதவறி நிலத்தில் தொக்கட்டியெனவிழுந்துருண்டு கோழிமுட்டைகளெல்லாம் நொருங்கி உடைந்துவிடுகின்றன.

''...நீயிப்ப உதுக்கோ... நரகாலிக் கணக்காகக் குறுக்கை வந்தனீ?''

''... நாங்களெல்லாம்...... நாங்கள் தப்பினால் மட்டும் காணுமெண்டு நினைக்கிற சனக்''

''ஆருக்கடி ... நீயுப்ப போடுகை போட்டுப்பாக்கிறாய்?''

''நீங்களாருக்குப் போடுகை போட்டுப் பார்த்தனிங்கள்?''

''ஆர் செத்தாலும் கெட்டாலும் நாங்கள் மட்டும் நல்லாயிருந்தாக் காணுமெண்டுநினைக்கிற சனங்...''

''என்னண்டு... என்னன்டு... என்ன உள்ளபடிக்குத் தானோ..?''

''என்னண்டோ... என்னண்டோ...எல்லாம் உள்ளபடியாகத்தான்.''

''என்ன நெளிக்கிறியோ பொம்பிளை... உனக்கவள் செய்தது பத்தாது...பத்...''

' நீதானடி அவளை ஏவிவிட்...ஐயோ ... ஐய் ... ஓ... என்ரமண்டை போச்சுது... என்ரை மண்டை கலங்கிப் போச்சுது... பத்தியெரிவாள் குடத்தாலையோடீ என்ரைர் மண்டேலை அடிச்சனீ... சண்டிச்சி...''

''விடடி என்ரை தலைமயிரை...விடடி... ஆத்தே... விடடீ...கடிப்பன் ... கட்டாயம் கடிப்பன்'.''

''ஆ...ஐ...ஓ ... என்ரை கை...கைஆத்தே... கடித்... கடிச்சுப்புடுங்கிறாள்..புடுங்கிறாள்... ஆ...ஊ... கடவுளே பிள்ளையாரே இஞ்சை விடடீ உனக்கு...'' கடியின் வேதனை பொறுக்கமாட்டாத விசாலாட்சி அதிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும், தவிப்பில் இளையாச்சியின் சேலையை உரியத்தொடங்கியதும் தன்னுடைய உடல் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வேகத்தினளாய் விசாலாட்சியுடனே இழுபறிப்பட்ட இளையாச்சி...விசாலாட்சிபுத்தியாகக்கைவிட்ட வீச்சில் அப்படியே திடீரென்று பின்காட்டிப்போய் வீழ்ந்தாள். உடைந்த முட்டைகளைச்சுவைத்துக்கொண்டிருந்த விசாலாட்சியின் நாயின் மேல் போய் அவள் வீழ்ந்ததினால் ஆவேசம் கொண்ட தாய் இளையாச்சியை கீயோமாயோவென்று கதறக்கதற உருட்டி உருட்டிக்கடித்துக்குதறலாயிற்று'' என்னப்பா ...... வியாழாச்சி உன்ரை நாய்போட்டவளைக் கடிச்சுப்புடுங்க ... நீ ... வேடிக்கை பார்த்துக் கொண்டுநிக்கிறாய்.. நாயைப் பிடியன்...நாயைப்பிடியன்.. அடியடி அடீக்'' விசாலாட்சியை ஏசிக் சத்தியபடி வீட்டிற்குள் ஆத்துப்பறந்தோடி வந்த ஈஸ்வரி முற்றத்தில் கிடந்த ஒருவாளி நிறைந்த தண்ணீரையும் அப்படியே தூக்கி நாயின் மேல் சளாரென்று ஊற்றி நாயை அப்பால்விரட்டினாள்'' ''ஐயோ ...கடவுளே ... பாத்தியளோ நடந்த கூத்தை ...நீங்கள் தனக்கு முட்டேலை செய்கை செய்துகொண்டு வந்து வைக்க ... அதுக்குத்தன்னோடை சேந்து என்னையும் உங்களை அடிக்கவரேலையெண்டுதானே ... இப்ப... இவள் இப்படியெல்லாம்...'' இளையாச்சி நாய் கடித்தஇந்தக் காயங்களோடு நாயாகக் கத்திவிட்டு அறிவு சோர்ந்து விழுந்துவிடும் நிலையாக எழுந்து அவுக்கடீரென வெளியேநடந்ததும் ஈஸ்வரியின் மனம்நிலத்தில்விழுந்து நொருங்கி உடைந்துபோன கோழிமுட்டையாகி விடுகின்றது. ''...நீ... சரியான ஆள் தானப்பா ... இண்டைக்குத் தான் உன்ரைமாதிரியெல்லாம் எனக்குநல்லவடிவாய் விளங்குது'' பொல்லாத மனச்சுள்ளாப்புடன் சொல்லிக்கொண்ட ஈஸ்வரி ... ''அந்தா பார் வியாழாச்சீ... அங்கை உன் கிரிக்கோழி என் வீட்டுப் பக்கமிருந்து கொக்கரிச்சுக் கொண்டு வருகுது ... வடிவாய்ப்பாத்தியோ. உன்ர இந்தக்கோழி எங்கடை வீட்டு வைக்கோல் பட்டடைக்குள் பதிவைச்சு முட்டையிட்டுக்கொண்டு வந்த களவை நானும்இண்டைக்குத்தான் தற்சேலாய்க் கண்டுபிடிச்சன் ,..வியாழாச்சீ நான் நினைச்சிருந்தால்...உன்ரையிந்தக்கோழி இட்ட பத்துமுட்டையளையும் எடுத்து வைச்சிருந்தால் ...ஆர்காணுறது...? இந்தா ... இப்ப...... இட்ட முட்டை... எனியொரு ஆமான சாவலாய் வாங்கிவிடு... உன்ரை பெட்டைக்கோழியள் என் வீட்டுக்கு வரவும்... பெந்தங்கை முட்டைசளை இடவும்... அந்த முட்டைகளை நான் கொண்டாந்து உன்ரை வீட்டிலை நீயில்லாத நேரங்களிலை வைக்கவும்... பிறகு அதுபற்றி நீயொண்டை வித்தியாசமாய்ச் சொல்லவும்... இதாலை இடையிலை மடையிலை உள்ள பாவங்களை உன் வீட்டு நாயைக் கொண்டு நீ சடிப்பிக்கவும்... கடவுளே... கடவுளே ... எனக்கேனிந்த வீண் வில்லங்சமும் பாவமும்'' என்று விசாலாட்சியைப் பெரியசூள்கொளுத்தி சூளினால் சுட்ட சணக்காக நாவினால் சுடாமல் சுட்டுவிட்டு அவளோடு அடுத்த கதைக்குச்கூட இடம்வைக்காமல் விறுவிறென்று இளையாச்சியின் வீட்டுப்பக்கமாக ஈசுவரி நடையைக்கட்டினாள்...

விசாலாட்சியின் மனம் அப்போது பெரியபனையளவு உயரத்திலிருந்து சீமேந்துத் தரையில் ஊன்றிவீசப்பட்ட கோழிமுட்டையாகிப்போய் விடவே ... இளையாச்சியிடமும் ஈஸ்வரியிடமும் வீடு தேடிப்போய் இப்பவே தான் செய்தது முழுப்பிழையென்று காலில் விழுந்து அழுது குளறி மன்னிப்புக் கேட்கும் முழு எண்ணத்தோடும் விசாலாட்சி ஈஸ்வரியைப் பின்தொடரலானாள்.

(யாவும் கற்பனை)

## விலங்குநிலை

ஒருவனுடைய அறிவை அபகரித்து விட்டால் அவனைச் சிசு நிலையில் வைப்பதாகாது. விலங்கு நிலையில் அதுவும் விலங்குகளில் எல்லாம் அதிகத் துஷ்டத்தனமான விலங்கின் நிலையில் [illegible]

# இவனார் என்று என்னை இகழாரோ?

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

அமுதமயமானபெருமானே! என்றுதான் உன் திருவருள் கைகூடுமோ என இரவு பகலாகக் கவலைப்பட்டிருந்து இளைப்படைந்தேன். என்னோடு கூடஇருந்த தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பது அடியவர்களும் உனது திருவடிநீழலாகிய முத்திக்கரையை அணுகும்படி தேவரீர் காட்சி கொடுத்து உன்னடிமையாகிய தமியேன் பொருட்டுப் பாலிலே நெய்யானது வெளிப்படாது இருப்பதுபோல மறைந்து இருந்தால் பார்க்கிறவர் தேவரீரை ஏசமாட்டாரோ? (5)

திருவோலக்கம் சேவிக்க இரங்காய்

ஏசாநிற்பர் என்னை உனக்
கடியானென்று
பிறரெல்லாம்
பேசாநிற்பர் யான்தானும்
பேணுநிற்பேன்
நின்னருளே
தேசாநேசர் சூழ்ந்திருக்குந்
திருவோலக்கம் சேவிக்க
ஈசா பொன்னம்பலத்தாடும்
எந்தாய் இனித்தான்
இரங்காயே.

ஒளியுருவான பரம்பொருளே! உன்னடியவர் இவன் உண்மை அன்பு இல்லாதவன் என்று என்னை ஏசுவர் பிறரெல்லாம் என்னை உனக்கு அடியவன் என்று பேசுவார்கள். யானோ உனதருளையே விரும்புகிறேன். மெய்யடியார் சூடி அமைந்திருக்கும் தேவரீரது திருச்சபையை வணங்குவதற்கு இறைவனே! பொன்னம்பலத்தில் திருத்தாண்டவம் புரிந்தருளும் எம் பரமபிதாவே! இனிமேலாவது இரங்குவாயாக. (தொடரும்)


## நீங்கள் வீடு கட்டும் பொழுது
# ஒட்டுப் பலகை
# கதவுகளை பாவித்து

விலையை 40% குறைக்கவும்
விலை ரூபா 60/- தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.



☐ ஒட்டுப் பலகை கதவுகள் பாரம் குறைந்தவை, நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை. எழில் மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. பலரக மரங்களில் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்யப்பட்டவை. இரிகம்பலிகை, கூலன்கிக், சற்றின் ஆகிய ஆடம்பர ரகங்களிலும் சாதாரண ரகங்களிலும் கிடைக்கும்.

☐ கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும்:

உயரம் : 6' 9''
அகலம் : 2' 3'', 2' 9'', 3' 6''
கனம் : 1¼''

☐ வீட்டத்திற்கு உபயோகிக்கப்படுகிற மரம் நீண்டகால உழைப்பிற்காக சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை ஈரத் தன்மையை எதிர்க்கும் வன்மையுடையது.

இக்கதவுகள் பாவனையாளருக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்.

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
நிர்: 18, பலாலி வீதிச் சந்தி,
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 508.

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி : 95846, 92903

HUNDEPT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தத்தை சிவன்பால் வைத்தவர்கள்

# நாயன்மார்கள்

நாயன்மார் என்னும் பதம் நாயகன்மார்என்னும் பதத்தின் மரூஉ என்பர் ஆறுமுகநாவலர். நாயன்மார் சைவசமயப்பத்தி மார்க்கத்தை ஓம்பிச் சிவாலயத்தில் சிவத்தொண்டு செய்வதில் சிறந்த தலைவராவர். சிவனடியாரையும் போற்றியசைவசமய நாயன்மாரைத் திருத்தொண்டர் எனச் சுந்தரமூர்த்திநாயனார் அழைத்தனர். திருத்தொண்டருடைய பெயரை சுந்தரர் திருத்தொண்டர் பதிகத்தில் குறித்துள்ளார். சுந்தரர் ஒன்பது தொகையடியார்களையும் அறுபது தனியடியார்களையும்சிவனடியார்கள் என வணங்கினர். திருவாரூரிலே தேவாசிரியன் மண்டபத்திலேகூடி இருந்த சிவனடியாரை வன்தொண்டர் வணங்காமல் ஒதுங்கிச் சென்றனராக; அதுகண்ட விறன்மிண்டர், ''அடியார்களை வணங்காமற் சென்ற வன்தொண்டன் அவ்வடியார்களுக்குப் புறகு'' அவனை வலிய ஆட்கொண்ட பரமசிவனும் புறகு என அன்பாகச் சொன்னார், இதைக் கேட்ட சுந்தரர் அத்தருணத்தில் திருத்தொண்டர் பதிகத்தைப் பாடினார் என்பர்.

தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமையில்லாத புலவர் பத்தராய்ப்பணிவோர், பரமனையே பாடுவோர், சித்தத்தைச் சிவன்பால் வைத்தோர், திருவாரூர்ப் பிறந்தோர், முப்போதும் திருமேனி தீண்டுவோர், முழுநீறுபூசியமுனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார், என்போர் தொகையடியார் ஒன்பதின்மர் ஆயினர். தில்லைவாழ் அந்தணர்மூவாயிரவர் வேதாகமங்களை ஓதிஉணர்ந்தவர், நல்லொழுக்கமுடையவர், தில்லையிலுள்ள சிவலிங்கத்தைப் பூசைசெய்யும் பிராமணர் ஆவர். இத்திருக்கூட்டத்தினர்பெரும்பாலும் இல்லறத்தினர்; பொய்யடிமையில்லாத புலவர் மதுரையிலிருந்த தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினராகிய நாற்பத்தொன்பதின்மர் என்பர். நம்பியாண்டார் நம்பி. சிவனை வழிபட்டு அவர் மீது திருநீற்றைத் தம்மேனியில் பூசிச்சிவனை வழிபடுவோர் முழுநீறு பூசியமுனிவராவர். திருநீறு பூசுவோர் திருவைந்தெழுத்துக் குறிக்கும் சைவசமயவுண்மையில் நம்பிக்கையுடையோர். தமிழ்நாட்டுக்கு அப்பால் இருந்து வாழ்ந்த தொண்டரும் சுந்தரர் காலத்து முன்பும் பின்பும் இருந்த தொண்டரும்

— த. இராமநாதபிள்ளை பி. ஏ. —

செய்யுள் இயற்றிய புலவர் யாவரும் பொய்யடிமையில்லாத புலவர் ஆவார் என்பது சேக்கிழார் கருத்து. சிவனையும் சிவனடியாரையும் அன்பு நெறியால் அர்சசிப்போர் பத்தராய்பணிவோர் ஆவர். பரமசிவனையே முழுமுதற்கடவுள் என எண்ணி அவருடைய பாடல்களைப் பாடுவோர் பரமனையே பாடுவோர் ஆவர். அட்டாங்கமுறையாக யோகம் செய்து ஆறுதாரங்களிலும் சிவனை வைத்துத் தியானிப்போர் சித்தத்தைச் சிவன்பால் வைத்தோர் ஆவர். திருவாரூரில் சைவசமய மரபினராய்ப்பிறந்தோர் எச்சாதியினராயினும் சிவகணநாதர் ஆவர்.

அப்பாலும் அடிச்சார்ந்தோர் ஆயினர்.

இத்தகைய தொகையடியார் ஒன்பதின்மரையும் தனியடியார் அறுபதின்மரையும் சைவசமயத் தொண்டர் எனப்போற்றினர் நம்பியாரூரர். உமாபதிசிவாசாரியார் தொகையடியார்ஒன்பதின்மர் எனவும் தனியடியார் அறுபதின்மர் எனவும் தாம்இயம்பியதிருத்தொண்டர் புராணவரலாற்றில் கூறுதலைக்காண்க.

# மன்பதையின் நன்மைக்காக கடவுளை இரந்தவர்கள் இவர்கள்

அறுபதுபேர்
தனித்திருப்பேர்
திருக்கூட்டம் ஒன்பதாக அறு பத்தொன்ப
தரனடியார் கதையை
மறுவில்திரு நாவலூர்ச்
சிவமறையோர் குலத்து
வருசடைய னார்மனைவி
இசைஞானி வயிற்றில்
உறுதிபெற அவதரித்த
ஆரூரர் முன்னாள்
உரைசெய்த திருத்
தொண்டத் தொகைப்
பதிகத் தடைவே
நறைமலிபூம்
பொழில்புடைசூழ்
திருநாரை யூரில்

நம்பியாண்டார்திருவந்
தாதி கடைப்பிடித்து

இனிநம்பியாண்டார்நம்பி தாம்இயற்றியதிருத்தொண்டர் திருவந்தாதியில் தொகையடியார் ஒன்பதின்மரையும் தனியடியார் அறுபத்துமூவரையும் சிறப்பித்துப் பாராட்டியுள்ளார் நம்பியாண்டார் சுந்தரர் இயம்பிய திருத்தொண்டர் பதிகத்தையே ஆதாரமாகக் கொண்டவர் சுந்தரர் அறுபதின்மர் எனத்தொழுத தனியடியாரோடு சுந்தரரையும் அவருடைய தந்தை தாயரையும் சேர்த்துத் தனியடியார் அறுபத்துமூவர் என நம்பியார் மொழிந்தனர். ஈண்டு நம்பியாரூரர் தம்மையும் தமது தந்தை தாயரையும் அடியார் என இசைத்தனரோ என்பது ஆராய்தற்குரியது. திருத்தொண்டர் பதிகத்தில் பதினோராம் பாடல் வருமாறு:

மன்னியசீர் மறைநாவ
னின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கு
நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட
செங்கணாற் கடியேன்
திருநீல கண்டத்துப்
பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே
அடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன்
திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன்
அடிமைகேட் டுவப்போர்
ஆரூரில் அம்மானுக்
கன்பரா வாரே.

ஆரூரன் அடிமைகேட்டுவப்போர் ஆரூரில் அம்மானுக்கு அன்பராவர் என நம்பியாரூரர் கூறியமையால் நம்பியாரூரர் தம்மைச் சிவனடியார் என எண்ணினர் என்பது மலையிலக்கே. இங்ஙனம் தனியடியார் அறுபத்தொருவர் எனத் துணியப்படும். இனி நம்பியாரூரர் தம் தந்தையையும் தாயையும் அடியாரெனக் கூறி வணங்கினாரோ என்பது ஆராயற்பாலது. தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் எனத் தொடங்கி அறுபதின்மார் பெயரைக் கூறி அவர்க்குத் தான் அடியேன் எனச் சுந்தரர் உரைத்தனர். சுந்தரர் தன் தந்தையாகிய சடையனார்க்கு அடியேன் எனவும், தாயாகிய இசைஞானியாருக்கு அடியேன் எனவும் கூறிவணங்கவில்லை. அரனடியே அடைந்த சடையன் இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன் அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டு உவப்போர். ஆரூரில் அம்மானுக்கு அன்பராவரே என்னும் தொடரின் கருத்தை ஆராய்தல் அவசியமாயிற்று. திருவடி நீழல் அடைந்த சடையனார் இசைஞானியார் என்போரின் காதலுக்குரிய திருநாவலூர்க்கோன் என்னும் நம்பியாரூரருடைய அடிமைத் திறத்தைக் கேட்டு உவப்போர் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் சிவனுக்கு அன்பராவர் என்பதே மேற்கூறிய தொடருக்கு கருத்து. இனிச் சடையனாருடைய அடிமைத்திறம் இசைஞானியாருடைய அடிமைத்திறம் நம்பியாரூரருடை அடிமைத் திறம்என்பவற்றைப்பாராட்டுவோர் எனக்கருத்துக்கொண்டால் தனியடியார் அறுபத்துமூவராவர். சடையனார் இசைஞானியார் என்போரின் அடிமைத்திறம் யாதென விளங்கவில்லை. சடையனார் இசைஞானியார் என்போரின் தொண்டின் மகிமை ஒருவராலும் கூறப்படவில்லை. இவர்களின் தொண்டைக் கூறிய புராணங்கள் மறைந்திருக்கலாம் ஆனால் சுந்தரரைப்பெற்றதே இவருடைய தொண்டெனின், திருஞானசம்பந்தர் முதலியோருடையபெற்றோரை ஏன் திருத்தொண்டர் எனக் கூறவில்லை என வினா எழும். சுந்தரர்செய்தவை எல்லாம் மேன்மையானவையாக இருக்கவேண்டியதில்லை. ஏயர்கோன் கலிக்காமர் சுந்தரர் சிவனைத் தூதாகச்செல்லும்படி ஏவியது தவறென எண்ணினர் அல்லவா? தொண்டர் ஒருவர் தன்தேவைகளை நிரப்புமாறு எப்பொழுதும் வேண்டுதல் சிறப்பன்று. மன்பதையின் பொது நன்மைக்காகக் கடவுளை இரத்தல் சிறப்பு.

நாயன்மார் அறுபத்துமூவர் என நம்பியாண்டார் கூறியமையால் அவர் கூற்றை ஆதாரமாகக்கொண்டு சேக்கிழாரும் நாயன்மார் அறுபத்துமூவர் என உரைத்தனர். ''நாரையூரினில் ஆதிசைவமறையோன் பால் வையம் எல்லாம் ஈடேறச் சைவம்வாழ மாமணிபோல் ஒரு சிறுவன் தோன்ற'' என உமாபதியார் திருமுறை கண்ட புராணத்தில் கூறினாராதலின், நம்பியாண்

(14-ம் பக்கம் பார்க்க)

## வீரசைவத்தை ...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் அங்கே வீரபத்திர குருசுவாமி கோயிலை அமைத்தும், வீரசைவக் குருபீடத்தை அமைத்தும் வீரசைவத்தை வளர்ப்பதைப் பாரறியும். வீரசைவத்தை அனுட்டிக்கும் குருகுல மக்களும் மற்றையோரும் அனாதி காலந்தொட்டு வீரபத்திர குருசுவாமியைத் தங்கள் குலதெய்வமாகவும் குருவாகவும் வணங்குகின்றனர் குருகுலமக்கள் அதிகமாக வசிக்கும் பருத்தித்துறை, மயிலிட்டி, குரக்கன்துறை, (காங்கேசன் துறை) இருபாலை, வல்வெட்டித்துறை, திருமலை, மட்டக்களப்பு முதலிய இலங்கையின் பல பாகங்களிலும் வீரபத்திர குருமூர்த்தியில்லாத இடமேயில்லை. குருகுலமக்கள் மட்டுமன்றி வேளாளர்களும் வீரபத்திர குருசுவாமியை குருமூர்த்தமாக வழிபடுகின்றனர் இதற்கு உதாரணமாக வியாபாரிமூலையில் உள்ள ஸ்ரீவீரபத்திரகுருசுவாமி கோயில் சான்றுபகரும். இங்குள்ள விக்கிரகத்தின் சிரசில் சிவலிங்கதாரணம் இருப்பதை நேரிற்காணலாம். குருகுலத்தவர்கள் மட்டுமல்லாது மற்றும் இனத்தவர்களும் வீரபத்திரராதி குருமூர்த்தங்களை குருலிங்க சங்கமமாக வழிபடுகின்றனர். வீரபத்திரகுருசுவாமியின் வழிபாட்டை மிகக்கீழ்ப்படிவாகக் கருதுவதன் காரணம் யாதோ? வீரசைவக்குருமார்கள் குருகுலத்தவர்களுக்கு மட்டும் குருவாக இருக்கிறார்கள் என்றமூர்த்திஅவர்களின் வாதம் அர்த்தமற்றதாகும்.

இலிங்காயதம் அல்லது வீரசைவம் என்றநூல் என்னால் எழுதப்படவில்லை என்பதை மூர்த்தி அவர்கள் அறிந்தும் அறியாதவர் போல நான் எழுதியதெனக் கூறுவது சரியல்ல, கலைப்புலவர் க. நவரத்தினம் செய்த பிரசங்கமே இந்நூலாகும். இந்நூலில் அணிந்துரையில் யான் வேத சிவாகமங்களை ஆதாரங் காட்டி ஓர்உரையை அளித்திருக்கிறேன், இந்நூலில் ஸ்ரீவசபருடைய கொள்கையைக் கலைப்புலவர் கூறியிருக்கிறார். வீரசைவமூலாசாரியர்களினதும் ஸ்ரீவசபருடைய வீரசைவக் கொள்கைக்கும் அடிப்படையில் மாற்றம் இல்லை. ஆனால் ஆரியரின் கொடுமையிலிருந்தும் சமணரின் தொல்லையிலிருந்தும் மக்களை மீட்பதற்காகவும் உலக க்ஷேமத்திற்காகவும் சில கொள்கைகளை அக்காலச் சூழ்நிலைக்கேற்ப மாற்றிஅமைத்தார். இப்படிப்பட்ட விடயங்களில் காலத்திற்கேற்பப்பெரியோர்கள் மூலக் கொள்கையில் மாற்றமின்றி சிலதிருத்தங்களைச் செய்வது உண்மையே. பிரமஸ்ரீபோட்டுக் கையெழுத்துப் போட்ட பிராமணர்கள் இன்றுசிவஸ்ரீ போட்டுக் கையெழுத்துப் போடுவதை மூர்த்தி அவர்கள் உணராரோ? இம்மாற்றத்துக்கு வேத சிவாகமங்களில் யாதேனும் விதிகள் உண்டா?

வீரசைவத்தைப் படிக்க விரும்புபவர்கள் முதல்வகுப்பாகிய வீரசாமான்யத்தில் பிரவேசித்து வீரவிஷேடரான பின் வீரநிராபாரத்தைச்சார்ந்த சரணஸ்தலத்தைத் தாண்டியபின் வீரசைவம் விளங்கும். அப்படி விளங்குபவருக்கே வீரசைவம் சிறிது விளக்கம் கொடுக்கலாம். ஆரிய பாஷையும தமிழ்ப் பாஷையும் கன்னடபாஷையும் நன்கு கற்றறிந்த ஒருவரே வீரசைவத்தைப்பற்றி நன்கு உணரமுடியும்.

## பேயாட்டமா...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

சூழலின் அறியாமையிலிருந்து அல்லது இவை போன்ற தப்பபிப்பிராயங்களால் ஏற்படுகின்றன. எமது கடந்து செல்லும்கால அனுபவங்கள் மூலம் சிறுவயதிலிருந்தே வளரும் பொழுது கூடவே எங்களைப் பற்றி பொய்யான கருத்துக்களும் வளர்வதனால் இவை நமது வாழ்வில் நடந்துவிடுகின்றன. பல தடவைகளில் நடைபெறும், இவ்விதநிலைகளில், நோய் உள்ள உடம்பாயினும் நோயற்றஉடம்பு போல வளர்ந்து விடுகிறது. ஒருபிரபல உளமருத்துவரின் (Psychiatrist) வார்த்தையில் சொல்வதானால் ''அந்தச் சந்தர்ப்பத்தில் உள்ள சூழலுக்கு ஏற்ப நடந்துகொள்ளவதில் வரும் தோல்வி' எனலாம். இதனை ஒரு நோய் என்று சொல்வதைவிட ஒருவித சுகாதாரம் போன்றது என்று விவரிக்கலாம். சூழலுக்கு ஏற்ப ஆக்குகின்ற சீராக்கத்தை(Creative Adjustment) ஏற்படுத்தும் நுண்ணறிவின் பயன்; தன்னைப் பற்றிய தவறான எண்ணங்களினால் ஏற்பட்ட தோல்வி அல்லது தனக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களிலிருந்து நீங்குவதற்குரிய வழி எது அல்லது தான் ஈடுபட்டிருக்கும் பிரச்னைகளை எவ்வாறு தீர்ப்பது என்பதில் ஏற்படும் தோல்விகள் இதனைத்தர

## வானொலிக்கு வயது 75

வானொலி கண்டு பிடிக்கப்பட்டதன் 75-வதுஆண்டு நிறைவினை 1970 மேமாதம் குறிக்கிறது. மாபெரும் ருஷ்ய விஞ்ஞானியான அலெக்ஸாண்டர் பெஸ்போவ் ஆற்றிய அரிய பணியின் விளைவாக முக்கால் நூற்றாண்டுக்கு முன்னர் புதியதகவல் தொடர்பு சாதனமாகிய வானொலி பூமியில் பிறந்தது. லெனின் அதைக் 'காகிதமில்லாத ஒரு புதினப் பத்திரிகை' என வருணித்தார். தற்சமயம் சோவியத் மத்திய, உள்ளூர், அயல்நாட்டு ஒலிபரப்புச் சேவைகளின் மொத்த ஒலிபரப்பு நேரம்நாளுக்கு1,400 மணிகளாகும். சோவியத் ஒலிபரப்பு நிலையங்களிலிருந்து 63 சோவியத் மொழிகளில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. நாள்தோறும் சோவியத் வானொலிச் சேவையின் குரல் 70 உலக மொழிகளில் உலகின் எட்டுத் திக்குகளிலும் ஒலிக்கிறது. சோவியத் பிரஜைகளிடமுள்ள வானொலிப் பெட்டிகளின் தொகை 830 லட்சத்திற்கும் அதிகமானதாகும். சோவியத் யூனியனில் 120 பிரதான தொலைக்காட்சிக் கேந்திரங்களும், 1000 அஞ்சல் நிலையங்களும் இயங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தத்தைச் சிவன்...

(13ம் பக்கத் தொடர்ச்சி)
டார் நம்பி ஆதிசைவர்
எனத் துணியப்படும் நம்பி
யாண்டார் தம்குலத்தினரா
கிய சுந்தரரை தனியடியா
ருள் சிறந்தோர் எனவும்
சடையனுரையும் இசைஞா
னியாரையும் சுந்தரரைப்
பெற்றமையால் அடியார்
எனவும் சிறப்பித்தனர்
போலும். திருத்தொண்டர்
திருவந்தாதியில் திருஞான
சம்பந்தரை இரண்டுசெய்யு
ளாலும் திருநாவுக்கரசரை
இரண்டு செய்யுளாலும்
சுந்தரரைத்தவிர்ந்த ஏனைய
தொண்டரை ஒவ்வொரு
செய்யுளாலும் பாடிய நம்பி
யார் சுந்தரரை அந்தாதி
யில் இடையிடையே சுட்டிப்
பத்துச் செய்யுளால் பாடி
யிருத்தலே நோக்குக. சுந்த
ரரை அடியாருட் சிறந்தவ
ரெனக்கொண்ட நம்பியார்
சுந்தரருடைய தாய் தந்தை
யரை அடியாரெனப்பாராட்
டுதல் விநோதமன்று. சேக்
கிழார் நம்பியாண்டார்நம்பி
யைப் பின்பற்றிச் சுந்தர
ரைத்திருத்தொண்டர் காவி
யத்துக்குத் தலைவனுக வைத்
தனர். சேக்கிழார் தடுத்தாட்
கொண்ட புராணத்தை
முதலிற் கூறிச்சுந்தரர் வர
லாற்றை இடையிடையே
தொடர்ந்து கூறி முடிவில்
சுந்தரர் கைலாயம் அடைந்
ததை வெள்ளானைச் சருக்
கத்தில் கூறிப்போந்தனர்.

இனித் திருத்தொண்டர்
புராணத்தை இயம்பிய வர
லாற்றைச் சிறிது ஆராய்
வாம்

அநபாய குலோத்துங்கச்
சோழன் (கி.பி. 12 நூற்
ருண்டு முற்பகுதி) சீவக சிந்
தாமணியைச் சிறந்த நூலெ
னச் சொன்னுன. மன்ன
னுடைய அமைச்சனுகிய
மொழித்தேவர் என்னும்
சேக்கிழார் அது பொய்
எனவும் சிவகதையே இம்
மைக்கும் மறுமைக்கும்
உறுதியெனவும்விளம்பினர்.
மன்னன் சிவகதையைக்
கேட்டு அது சீவகன் கதை
யிலும் சிறந்ததெனத் துணி
ந்து சிவகதையைப் புராண
மாகப் பாடும்படி வேண்டி
னன். இவ்வரலாறு உமாபதி
சிவத்தால் திருத்தொண்டர்
புராண வரலாற்றில் கூறப்
படுதலைக் காண்க.

வளவனுங்குண் டமண்
புரட்டுத் திருட்டுச்
சிந்தா
மணிக்கதையை மெய்
யென்று வரிசை கூற
உளமகிழ்ந்து பலபடப்பா
ராட்டிக் கேட்க
உபயகுல மணிவிளக்காஞ்
சேக்கிழார் கண்டு
இளவரசன் தனைநோக்கிச்
சமணர் பொய்ந்நூல்
இதுமறுமைக் காகாதிம்
மைக்கு மற்றே
வளமருவு கின்றசிவ
கதைஇம் மைக்கும்
மறுமைக்கும் உறுதியான
வளவன் கேட்டு.
அவகதையாய்ப் பயனற்ற
கதையீ தாகில்
அம்மையும் இம்மையும்
உறுதி பயக்கத்தக்க
சிவகதைஏ, ததுகற்ற.
திறமைப்பேரார்,
சீவகசிந்
தாமணிபோல்
இடையில் வந்த
நவகதையோதவம்பண்ணிப்
பேறுபெற்ற
தனிக்கதையோ
அடைவுபடச்
சாற்றுமென்ருன்.

சேக்கிழார் தில்லைசென்று
திருத்தொண்டர் புராண
த்தை இயற்றினர்.
சோழமன்னன் திருத்தொண்
டர் புராணத்தைச் செப்
பேட்டில் எழுதுவித்து
அதைப் பொற்கலத்தில்
இட்டு யானைமீது ஏற்றித்
தில்லையை வலம்வந்தான்.
நூலியம்பிய தொண்டர்
சீர்பரவுவார் எனப் போற்
றப்படும் அருண்மொழித்
தேவரையும் சோழமன்னன்
அவ்வியானைமீது ஏறச்
செய்து தானும்ஏறி இணைக்
கவரி துணைக்கரத்தால் வீசி,
'இதுவன்றோ யான்செய்த
தவப்பயன்' என்ருன். அப்
பொழுது தில்லைமூவாயிரவர்
முதலியோர் சேக்கிழாரைப்
பின்வருமாறு பாராட்டிப்
புகழ்ந்தனர்.

மதுரஇ ராமா
யணகதை உரைசெய்த
வான்மிகி பகவனும்
ஒப்பல்ல
விதிவழி பாரதம் உரை
செய்து கரைசெய்த
வேதவி யாதனும்
ஒப்பல்ல
சிதைவற ஆயிர
நாவுடன் அறிவுள
சேட விசேடனும்
ஒப்பல்ல்
பொதிய, மலைக்குறு
முனிவனும் ஒப்பல்ல
புழ் புனைக்குன்றை
முனிக் கென்பர்.

இவ்வண்ணம் திருத்
தொண்டர் புராணத்தை
அளவுகடந்து புகழ்ந்துஉரை
த்த அவையோரும் அரச
னும் அதைப் பன்னிரண்
டாம் திருமுறையாகுமெனக்
கொண்டாடினர். சேக்கி
ழார் சிறந்த புலவர் என்ப
தில் ஐயமில்லை. ஒருவன் தன்
கற்பனை வல்லமையால் நிலை
மாறுதலடையாத சத்திய
வுலகில் உள்ள உண்மையை
யும் இயற்கையிலுள்ளவனப்
புகளையும் ஒழுக்கவுலகி
லுள்ள ஒழுக்கச் சிறப்பினை
யும் கண்டு செஞ்சொல்
லால் இசைக்க வல்லவனு
யின் பெரும்புலவன் எனப்
பாராட்டப்படுவான்.
புலமை மிக்கோர் தாம்
காணும் உண்மை அழகு
நன்மைஎன்பவற்றைப் பிறர்
சுவைக்கத்தக்கவையாகச்
செய்யுள்இயற்ற வல்லவரா
வர். புலமையாற்சிறந்தோர்
சுவைபடச் சொல்பவற்றை
இரசிகர் சுவைத்து இன்புறு
வர். இத்தகைய கற்பனை
வல்லமையும் புலமையும்
சேக்கிழார் காவியத்தில் நனி
துலங்குகின்றன. சேக்கி
ழார் சிறந்த புலவர் என்
பதை ஒருவரும் மறுக்கார்.
எனினும் சேக்கிழாருக்கு
அகத்தியர் ஒப்பல்ல என்
பது உணர்ச்சிக்கடலில் அமி
ழ்ந்திச் சமயத் துறையில்
அளவிறந்து திளைப்போரின்
கூற்றென விடுக. சேக்கி
ழார் செய்யுட்கள் மணிவா
சகருடைய செய்யுட்கள்
போல் நெஞ்சை யள்ளும்
தன்மையுள்ளன எனச்
சொல்லவியலாது. திருத்
தொண்டர் புராணம் கம்பர்
இராமாயணத்திலும் காவி
யச்சுவை குறைந்ததென்
பது யாவர்க்கும் ஒப்பமுடிந்
தது.

திருத்தொண்டருடைய
சிவபக்தியை மெச்சிய சுந்
தரர் பக்தி மிகுந்தோருட்
சிறந்தோரைத் தெரிந்து
தனியடியார் எனப் பதிகத்
தில் பாராட்டினர். சுந்த
ரர் பக்தியின் பெருமையை
அளந்தறிய வல்லவர் என
நம்பியாண்டார்நம்பி நம்பி
யிருந்தனர், நம்பியாண்
டார் தேவாரங்களை ஏழு
திருமுறையாக வகுத்துத்
திருத்தொண்டர் திருவந்
தாதியை இயற்றினர் என்ப
தும் திருவந்தாதியை விரித்
துக் காவிய முறையாகச்
சேக்கிழார் புராணத்தை
இயம்பினர் என்பதும் உமா
பதியாருடைய கருத்துக்
கள். பழைய புராணங்களை
ஆராய்ந்தும் சிவசின்னங்க
ளின் மகிமையை விளக்கக்
கூடிய முறையில் சிலகதை
களைப் படைத்தும் சேக்கி
ழார்தம்புலமையில் திருத்
தொண்டர் புராணத்தைப்
பாடினர். திருத்தொண்டர்
சிலருடைய வல்வினைகள்
சமயவெறியைத்தூண்டுவன
என இக்காலத்துப்பெரியோ
ரால் கண்டிக்கப்படுதல்
கூடும். சமயக் கொள்கைக
ளுக்காகப் பிறவுயிர்களை
வதைக்கக்கூடாது என்பது
இக்காலத்தவர் கொள்கை.
சத்தி நாயனுர் சைவ சம
யத்தை இகழ்வோரின்
நாவை அரிதல் செருத்துணை
நாயனுர் நிலத்தில் விழுந்து
கிடந்த பூவை எடுத்து
மோந்த பல்லவன் தேவி
யைக் கூந்தலால்பற்றி இழு
த்து விழுத்தி மூக்கரிதல்
போன்றவை இக்காலத்தில்
கண்டிக்கப்படும். பலாத்
காரமுறையால் சமயக்
கொள்கைகளை நாட்ட முய
லுதல் தவறு. இதுநிற்க,

திருத்தொண்டர் காவி
யத்தை இயம்புதற்குப்
பேராசைகொண்டு சமய
வுணர்ச்சியின் வசமாகிப் பல
நாள் சேக்கிழார் சிந்தனை
யில் ஆழ்ந்திருந்தனர். சேக்
கிழாருடைய உள்ளத்தின்
கண் மறைதொழிலாக நிக
ழ்ந்த சிந்தனை முயற்சியால்
'உலகெலாம் உணர்ந்து ஓது
தற்கரியவன்' என வாழ்த்
துக்கூறத் தொடங்குதல்
பொருத்தமெனச் சேக்கி
ழார் மனதில் பட்டது. இந்
நிகழ்ச்சியைப் பண்டை
யோர் சிறப்பித்து அசரீரி
வாக்கென விளம்பினர்,

திருநாவுக்கரசர் செய்த
தொண்டிலும் திருஞானசம்
பந்தர் செய்ததொண்டு சிற
ந்ததெனச் சேக்கிழார் எண்
ணினர் போலும். சமய
சேவையில் புதியவுணர்ச்சி
தோன்றிய காலத்தில் பிரா
மணர்களே வேதாகமங்க
ளைப் போற்றுதலில் பெரிய
பங்கு எடுத்தனர். பிராம
ணர் தம்குலத்தினராகிய
திருஞானசம்பந்தரை மிகப்
பாராட்டினர். ஆகையால்
திருஞானசம்பந்தருக்கு முத்
துச்சிவிகை முத்துக்
குடை முதலியவை
அளிக்கப்பட்டன. சிவிகை
யூர்ந்து தலயாத்திரை செய்
வதற்குப் பக்தி மார்க்கத்தி
னர் நன்கொடைகள் அளித்
தனர் போலும். இந்நன்
கொடையைக் கொண்டே
சிவபாதவிருதயர் பெரிய
யாகம் நடத்தினர், சம
ணரை வாதில் வென்ற
நிகழ்ச்சி மக்கள்
மனசை நனிகவர்ந்ததாக
திருநாவுக்கரசர் செய்த
தியாகத்தின் பெருமை
போதியவளவு பாராட்டுப்
படவில்லை. தேவாரம் பாடு
தலில் ஒப்பாருமிக்காரு
மின்றித் திகழ்ந்தமையால்
அன்றே மருணீக்கியார்
நாவுக்கரசர் எனப் பாராட்
டப்பட்டனர். தத்துவ
நூலின் பேருண்மைகளை
விளக்குதலில் திருநாவுக்க
ரசர் திருஞானசம்பந்தரைப்
போல் சிறந்தவர் என்பதில்
ஐயமில்லை, திருநாவுக்கர
சர் திருஞானசம்பந்தருக்கு
சமயவாராய்ச்சியிலும் சமய
சேவையிலும் ஒப்பாவார்
என ஒத்துணர்க. சமயகுர
வர்களைச் சம்பந்தர், அப்பர்,
சுந்தரர், மாணிக்கவாசகர்
என்ற முறையில் சொல்
லும் வழக்கம் குரவர்கள்
முத்தியடைந்த காலத்தைக்
கொண்டு எழுந்ததென்
பதை அறிவோம். சமய
வாராய்ச்சித் துறையில்
செய்தசேவையை நுணுகி
ஆராயின் திருமூலநாய
னுரை ஐந்தாம் குரவராகக்
கொள்ளுதற்கு இடமுண்டு.


REGAL JAFFNA
Daily
4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre-poya 4 Shows
Burt Raynolds.
Nicoletta Machiaveli
in
NAVAJO JOE
(adults only)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
சிவாஜி-சௌகார்ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம்.ஜி.ஆர்-சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா, பிரி போயா
4 காட்சிகள்
ஜீவனும்சம் லக்ஷ்மி-ராஜ்குமார்
நடித்த
கோவாவில்
சி. ஐ. டி. 999
(தமிழ்)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
5வது வாரம்
சிவாஜி, கே ஆர் விஜயா
நடித்த
திருடன்

வின்ஸர் 5வது வாரம் தினசரி 4 காட்சிகள்
யாழ்ப்பாணம் சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த
தங்கச் சுரங்கம்
(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

மகத்தான 91-வது தினம்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்





சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
மற்றும் பலர் நடித்த
தில்லானா மோகனாம்பாள்

வெற்றிகரமான 3வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்
இன்னும் பலர் நடித்த
பி. நாகிரெட்டி அளிக்கும்
நம் நாடு
(ஈஸ்ட்மென் கலர்

ராஜா - யாழ்நகர்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 10 மணிக்கும் போயா தினங்களி
லும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் 10-30 மெற்னி காண்பிக்கப்படும்.
1968-ம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட
சிறந்த ஹிந்திச் சித்திரம்
ஷம்மி கபூர், ராஜ்ஸ்ரீ, பிரான் ஜூனியர் மெஹ்மூட்
மற்றும் பலர் திறம்பட நடித்த
பிரமச்சாரி
(ஹிந்தி - ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குக்கல் எனப்படும் கக்குவான் வியாதி

— டாக்டர் கே கே. ஜெயரத்தினம் டி. ஏ. எம். (முதற்பிரிவு) —

குடலிறக்கம், இழுப்பு, மயக்கம், பக்கவாதம், 'பிரோங்கைடிஸ்', சுவாசப்பை ஒடுங்குதல் முதலிய கேடுகள் குக்கல் வியாதியால் குழந்தைகளுக்கு ஏற்படலாம்.

குழந்தைப் பருவத்தில் ஏற்படும் தொற்றுநோய்களில் கக்குவான் இருமலும் ஒன்ருகும். இந்நோய் 'ஹெமேபிலிஸ்பேர்ட்டுசிஸ்' எனப்படும் ஒருவகைக் கிருமியும், அத்துடன் ஒருவகை 'வைரஸ்' கிருமியும் சேர்ந்து நோயை உண்டாக்குகிறது என ஐரோப்பிய வைத்தியர்கள் கருதுகின்றனர். இந்திய வைத்தியத்தில் வாத - கப தோஷங்கள் கோளாறடைவதால் இந்நோய் உண்டாகிறது என்று கூறப்படுகிறது. இந்நோய் அநேகமாக ஏழு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு வருவதில்லை. சுமார் இரண்டுவயதிற்குட்பட்ட குழந்தைகளிடம்தான் அதிகம் இந்நோயைக் காணலாம். பெண் குழந்தைகள் ஆண் குழந்தைகளைவிட எளிதில் இந்த இருமலால் பீடிக்கப்பட்டுவிடுகின்றனர். ஒரு குழந்தையிடமிருந்து இன்னெரு குழந்தைக்கு எளிதில் தொற்றிக்கொண்டு பரவும் கக்குவான் இருமலை குக்கல் என்றும் மக்கள் அழைப்பார்கள். இதை மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம்.

முதல்நிலை:- சளியும், காய்ச்சலுமாக நோய் முதலில் ஆரம்பிக்கும். அத்துடன் இலேசாக 'கர், கர்' என்ற சப்தத்துடன் குழந்தை மூச்சு விடும். அது நெஞ்சில் கபம் தேங்கியிருப்பதன் அறிகுறியாகும். இரவு வேளைகளில் குழந்தை வாய் ஓயாது இருமத் தொடங்கும். இருமல் 'கொல், கொல்'லென்று முடிவின்றிச் சில விநாடிநேரம் நீடித்து இருக்கும். இதுநோய் ஆரம்பமாகிவிட்டதை உணர்த்தும் அறிகுறியாகும். இந்நிலை சுமார் ஏழு தினங்கள்வரை நீடித்திருக்கும்.

இரண்டாவது நிலை:- ஏழு தினங்களுக்குப் பிறகு காய்ச்சல் தானுகவே தணிந்துவிடும். ஆனல் இருமல் அதற்குப்பதிலாக விடாது மிகவும் கடுமையாக இருக்கும். மூச்சு விடக்கூடமுடியாது குழந்தை அடிக்கடி இருமும். படுத்திருந்த குழந்தை திடீரென்று எழுந்து உட்கார்ந்துகொண்டு கண்களில் நீர்வழிந்தோட, மூச்சுத்தடுமாற வாய் ஓயாது இருமும். அல்லது விளையாடிக்கொண்டிருந்த குழந்தை திடீரென்று பயத்துடன் தாயை ஓடிவந்து கட்டிக்கொண்டு முகம்சிவக்க, மூச்சுத் தடுமாற, கண்களில் நீர் கசிய இருமத் தொடங்கும். இந்தநிலையில் சில சமயம் இருமல் சுமார் இரண்டு நிமிஷநேரம்கூட நீடிக்கும். சிலசமயம் குழந்தை மூச்சுத்திணறி இருமலின்நடுவே மூர்ச்சையடைந்து விடுவதுமுண்டு. சில குழந்தைகளுக்கு வலிப்பையும் உண்டாக்கிவிடும். நாளொன்றுக்கு இந்த இருமல் இருபது முப்பது தடவை ஏற்படும். பகலைவிட இரவு வேளைகளில் இருமல் மிகவும் அதிகமாக இருக்கும். ஒவ்வொருமுறையும் இருமிய பின்பு சிலசமயம் குழந்தை சாப்பிட்ட உணவை வாந்தி எடுத்துவிடும் இதே நிலை சுமார் மூன்றிலிருந்து பத்து வாரகாலம்வரைகூட நீடித்து இருக்கலாம்.

மூன்ருவதுநிலை: இதுநோய் குணமாகும்நிலை. நோய்ஏற்பட்டு ஏழுமுதல் எட்டு வாரங்களுக்குப்பிறகு நோய் படிப்படியாகக் குணமடைய ஆரம்பிக்கும். இருமல் அடிக்கடி வருவதும் குறையும். வந்தாலும் மிகவும் கடுமையாக இருக்காது. நாளடைவில் ஓய்ந்து சிலதினங்கள் நெஞ்சில் கபம் மட்டும்தான் இருக்கும் அதுவும்நாளடைவில் தானே குறைந்துநோய் பூரணமாக மறைந்துவிடும்.

**நோயினுல் ஏற்படும் தீமைகள்**

நோயுற்ற குழந்தை சாப்பிட்ட உணவை அடிக்கடி வாந்தியெடுத்து வெளியேற்றிவிடுவதனுல். உடல் நாளடைவில் இளைத்து விடுகின்றது. அதிகமாக இருமினுல் சிலசமயம்மூக்கில்இரத்தம் வடியத்துவங்கும். ஒருவாரம் சளியும் சுரமும்அடிக்கும் இருமல் அதிகமாகி இரண்டு அல்லது மூன்றுநிமிடங்கள் ஓயாமல் வாயைத் திறந்து நாக்கை நீட்டி இருமி, முகம்கறுத்து உடம்புசோர்ந்து கண்கள் பிதுங்க ஒருவிதமானநீண்ட சப்தத்துடன் மூச்சு உள்ளே இழுக்கப்படும். இந்தமாதிரி அரை மணித்தியாலத்துக்கு ஒருதரம் இருமலும் இழுப்பும் சங்கிலித் தொடர்போல வந்துகொண்டிருக்கும். வயிற்றுத்தசைகள் ஓயாத இருமலால் பலவீனப்பட்டுவிடுவதால்தொப்புள்வழியே 'கேர்னியா' எனும் குடல் இறக்கம் ஏற்படலாம். சில குழந்தைகளுக்கு ஆசனவாய் தளர்ந்து ஆசனம் வெளியே தொங்கிவிடுவதுண்டு இழுப்பு, மயக்கம், பக்கவாதம் கூடவரலாம். 'பிரோங்கைடீஸ்' 'பிராங்கோ நியூமோனியா' சுவாசப்பை ஒடுங்கிவிடுதல் முதலிய கோளாறுகள் ஏற்படலாம். காதிலுள்ள செவிப்பறை சில வேளைகளில் உடைந்துபோகலாம். கண்இமைக்குள் இருந்து இரத்தம் வரலாம். மலமூத்திரம் தன்னையறியாமல் வெளியாவது சகஜம்.

**சிகிச்சை**

இந்நோய் வந்துள்ள குழந்தைகள் இருக்கும் வீட்டிற்குத் தன் குழந்தையைத் [illegible] போகக்கூடாது. நோயுள்ள குழந்தையுடன் கூடி விளையாட அனுமதிக்கக் கூடாது. குழந்தையை விளையாடவிடும் இடம் கூடியவரை காற்றோட்டமானதாக இருக்க வேண்டும். ஆகாரத்தை வயிறுநிறையக் குழந்தைக்கு ஊட்டாது சிறிது சிறிதாகக் கொடுக்க வேண்டும். இருமல் வந்து ஒருமுறை ஓய்ந்தபின்பே ஆகாரமளிப்பது நலம். கக்குவானைத் தாயார் தானே சிகிச்சை செய்யமுயற்சிப்பதை விட்டு வைத்தியரிடம் காட்டிச் சிகிச்சை செய்வது நலம். முதல் நிலையிலேயே கக்குவானுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள 'வக்சின்' எனப்படும் மருந்தை ஊசிபோட்டு வியாதியின் கடுமையை ஓரளவு குறைக்கலாம். கபத்தை வெட்டக்கூடிய துளசி, தூதுவளை, அதிமதுரம், கண்டங்கத்தரி, சிற்றரத்தை, கற்பூரவள்ளி, வட்டுக்கத்தரி, திற்பலி ஆகியவற்றைக் கஷாயமிட்டுக் குடிக்கக் கொடுக்கலாம்.

ஔஷதங்களாக கஸ்தூரி மாத்திரை, மகாஏலாதி, தங்க ஏலாதி, இரத்தின பூபதி, மிருதசஞ்சீவி, பிராணசஞ்சீவி ஆகியவற்றைக் கொடுத்து நிச்சயம் நிவாரணம் அளிக்கலாம். இருமல் வந்து நின்றவுடன் சாப்பாடு இலேசாய்க் கொடுப்பது நலம். பால்மட்டும் இளஞ்சூடாகப் பாவித்தால் மிகவும் நன்மைபயக்கும். உடுக்கும் உடையும் இலேசானதாக இருக்கவேண்டும். இதற்கு புங்கங்காய்த்தோல், புலித்தோல் முதலியவற்றைக் குழந்தையின் கழுத்தில் கட்டிவைப்பது சம்பிரதாயமாயிருந்துவருகிறது. இதற்குச் சிகிச்சைகள் அனந்தமுண்டு. சிகிச்சை செய்யும்போது குறைந்துவரும். வியாதி குணமடையும்வரை பெற்றேர் பொறுத்திருத்தல் வேண்டும்.

# உங்கள் இராசி பலன்

ஜோதிஷமணி மேல்கரவை
காவ. சிவப்பிரகாசன்

*(13—5—70— —19—5—70)*

**மேடம்:** முன்னேற்றப் பாதை உண்டு. கருமத்தில் வெற்றி காண்பீர், சிநேகிதரிடை அபிப்பிராயபேதமும் புதிய தொழில்வகையில் ஈடுபாடும் படிப்பில் நாட்டக் குறைவுமுண்டு. பணவிஷயத்தில் சிக்கல் நிலையேற்படும்,பொதுச்சொத்தையே நாடவேண்டிவரும், கடற்பயணம் தீது, விபத்து நிகழலாம்.

**இடபம்:** பெண்கள் பாதிப்புறுவீர்,விறுவிறுப்பாக கருமமாற்றுவீர், சதிவேலைகளில் ஈடுபாடு, உடல் நிலை பாதிப்பு, கழிப்பிற்கிடமில்லை, கலை ஈடுபாடு குன்றும், தொழிலாளர் நிலை சீரடையும்.

**மிதுனம்:** அரசியல்வகையில் ஈடுபாடு தீமைபயக்கும், புத்திரவிருத்தி காண்பீர், தூரதேசப் பிரயாணம் தடைப்படும், சமயவகையில் ஈடுபாடு காண்பீர், தீய சக்திகளால் பாதிப்பு காண்பர், குடும்பத்தில் அமைதியின்மை, செலவினமதிகரிக்கும்.

**கடகம்:** பணநிலை மோசமடையலாம். வியாபாரிகள் கூடுதலான கொள்வனவு செய்தல் தீது, முதலாளிவர்க்கத்திற்கு ஓர் எக்களிப்பான காலம். மனநிம்மதி ஓரளவு உண்டு, பிரயாணம் உண்டு. தொழிலாளரிடை வாக்குவாதம், பிணக்கு உண்டு.

**சிங்கம்:** உங்களுக்கு எதிராகச் சதி உருவாகலாம், சிநேகிதருடன் சேரல் தீது. வரவிற்கு மிஞ்சிய பணவிரயம் காண்பீர், குடும்பத்தில் பிணக்குண்டு, தொழில் பேறு, பிதாவழி சொத்து சேரும் திடீர் விபத்து நிகழலாம்.

**கன்னி**

எண்ணிய எண்ணியாங்கு நடைபெறுவதில்லை, பெண்களை நம்பி ஏமாற்றமடைவீர், குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டாகும், கைத்தொழில் விருத்தியுண்டு. இல்லாளோடு யாத்திரை போகும் அமைவுண்டு சந்தோஷசமாச்சாரம் கிட்டும்.

**துலாம்**

துன்பங்கள் குறைவுபடாது, உடல்நிலை பாதிக்கப்படலாம், தேவையற்றுச் சிக்கலில் மாட்டிக் கொள்வீர், குடும்பப் பிணக்கு சிறு பிரிவையும் கொடுத்துவிடலாம், இறைவழிபாடு தேவை.

**விருச்சிகம்**

பணமுடை தோன்றலாம், கலை, கலாச்சாரம் சம்பந்தமாக நாட்டம் ஏற்படும், அவ்வழி மேன்மையும் உண்டாகும், சோதரர் பிரிவு நிகழலாம், புத்திரர் நோய் வாய்ப்பட ஏது உண்டு, வாகன நட்டம் காண்பீர்.

**தனு**

தனதானிய விருத்தி, சோதரர் சிறப்புண்டு. புதிரர்வகை செலவினமதிகரிக்கும், தேவையற்று எதிராளிகளுடன் மாட்டிக் கொள்வீர், குடும்பத்தில் சிறு வாக்குவாதம் ஏற்படும். மனக்கட்டுப்பாடு தேவை.

**மகரம்**

சினிமா, நாடகத்துறை ஈடுபாடு காணலாம், வாகன சுபமுண்டு, புத்திரரிடை விஷநீர்ப்பீடையேற்படும், காதல் ஈடுபாடு குன்றும், தனிவழிப் பிரயாணம் தீது, சிநேகிதரால் ஏமாற்றமடைவீர்.

**கும்பம்**

தொழில் ஈடுபாடு அதிகரிக்கும், வியாபாரத்தால் பணப்பெருக்கு உண்டு, பெண்களால் உதவியுண்டு, காதல் கேளிக்கைக்கு கந்த காலம். குடும்பத்தில் விசேஷ நிகழ்ச்சியுண்டு, வயது முதிர்ந்தார் சிலரின் மறைவும் உண்டாம்.

**மீனம்**

இல்வேந்தன் அட்டமம் கரைந்துறைகின்ருர், ஆயுள் கெடுதலே சம்பவிக்கலாம், பிரயாணத்தால் கஷ்டநிலை தோன்றலாம், குடும்பப் பிணக்குண்டு, மனதில் அமைதி குன்றும், பெற்ருர் வழி நாட்டக்குறைவுண்டு, கல்வி சம்பந்தமாக ஈடுபாடும், நற்பலனுமுண்டாம்.

## திருத்தம்

11-5-70-ந் திகதி பிரசுரமான வான் சாரதி- மாநகரசபை யாழ்ப்பாணம் பதவிக்கு வேண்டிய தகைமைகளில் ஒரு திருத்தம்.

1. 1-6-1970 ந்திகதி 40 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டுமென்பதற்குப் பதிலாக 40வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டுமெனக் கொள்க.

2267

## சப்பாத்தை உலர்த்த...

மழையிலோ, ஈரத்திலோ நடந்து வரும்போது சப்பாத்துக்கள் நனைந்து போகலாம். சப்பாத்துக்கள் கெட்டுப்போகாமல் அவற்றைக் காய வைப்பது எப்படி என்று கவலைப்படாதீர்கள். இதோ ஒரு யோசனை.

ஈரமான சப்பாத்துக்களை ஒரு செய்தித்தாளினுல் சுற்றி காற்றோட்டமான இடத்தில் சிறிது நேரம் வையுங்கள். ஈரத்தையெல்லாம் அந்தக் காகிதம் உறிஞ்சி விடும். இதை விட்டு விட்டு நெருப்புக்கருகில் வைத்தால் அதன் உரு கெட்டுவிடும்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நவீன வசதியுள்ள காணியுடன் கூடிய வீடும், கடையும் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். N. இராசதுரை, முஸ்லிம் கல்லூரி றேட்,கற்குளலேன், யாழ்ப்பாணம். 2219

கடைச்சல் பட்டடைகள் 6அடி, 8அடி, 10 அடி நீளம் கொண்டவை பழையதும், புதியதும் விற்பனைக்குண்டு. வேலைநாட்களில் எப்பொழுதும் வந்து பார்வையிடலாம். நெல்லியடி இன்டஸ்றியல் வேர்க்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 2070

காணி

பீச்றேட்டில், பருத்தித்துறை தபாற்கந்தோருக்கு அருகாமையில் உள்ள 28பரப்பு தென்னம்தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கொடர்புகொள்ளவும். க. சிறிசிவலிங்கம், முதலாம் கட்டை, பருத்தித்துறை. 2208

வீடு:

சீனியர் ஒழுங்கை வண்ணார்பண்ணையில் 1-ம் நம்பர் வீடு சகல வசதிகளோடு விற்பனைக்குண்டு. பரப்பு 1 1/2. ப. அ. மனேன்மணி, வட்டுக்கோட்டை கிழக்கு. 2211

### தேவை

பெற்றேல் நிரப்பும் நிலையங்களுக்குப் பம்பர்கள் உடனே தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் பிணைப் பணம் கட்டக்கூடியவர் மட்டும் விண்ணப்பிக்கவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர், யாழ்ப்பாணம். 2218

யாழ். நகரில் பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றுக்கு கடைக் கணக்கு எழுதுவதில் 5 வருடத்திற்கு குறையாத அனுபவமுள்ளவரும், வியாபார அனுபவமும் ஆங்கிலத்தில் கடிதத் தொடர்பு செய்யக் கூடியவருமான நடுத்தர வயதுடைய ஒருவர் தேவை. கடைசியாக பெற்ற நற்சாட்சிப் பத்திரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் 17-5-70-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 2224 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2224

### இலவசம்

'யோகக்கலை' என்னும் அரியநூல் தேவையானவர்கள்10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பிபெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 2118


### வகுப்புக்கள்

நவீன விஞ்ஞான ரீதியில் அனுபவம் நிறைந்த ஆசிரியையால் 1-6-70 முதல் தையல் வகுப்புக்கள் கொக்குவிலில் ஆரம்பமாகிறது. விபரங்களுக்கு: கொக்குவில் மாதர் சங்கத் தலைவியுடன் தொடர்பு கொள்ளவும். 2207

### கல்வி

ஆசிரிய கலாசாலைப்பிரவேசம் சுருக்கெழுத்து,தட்டச்சு ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யூனிட்டெட் இன்ஸ்டிறியூட், நெல்லியடி, கரவெட்டி. 2222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிமொழிகள்!

தேர்தலில் தோற்றுலும் பாதகமில்லை. கொள்கையைத் தியாகம் செய்துவிடமாட்டேன் என்ற மன உறுதியுடன் நடப்பதே தேர்தல்களிலெல்லாம் வெற்றியடைவதற்குரிய மார்க்கமாகும்.

0 0 0

உறுதியோ, நடத்தை முறையோ இல்லாத ஒருவர் திசை திருப்பி இல்லாத ஒரு கப்பலைப் போன்றவர்.

0 0 0

நம் கடமைகளைச் சரிவரச் செய்தால் உரிமைகளைத் தேடிச்செல்லவேண்டியிருக்காது.

0 0 0

வெறுப்பிலிருந்து விடுபட்டவருக்கு வாள் தேவையில்லை.

—மகாத்மாகாந்தி—


மில்க் வைற் சோப் விற்பனையாளர்களுக்கு!

ஓர் அன்பான

வேண்டுகோள்!

மில்க்வைற் சோப் 72 கட்டிகள் பார்சல் செய்யும் 25 ரூபர் தாள் சேர்த்துக் கொடுத்து ஓர் அழகான பத்திரப்பையை, (Documents Bag) அல்லது ஓர் அழகான துவாயை. எமது விற்பனை வான்களில் பெற்றுக் கொள்ளுங்கள் அல்லது 50 ரூப்பர் தாள் கொடுத்து ஓர் அழகான பிறேம் போட்ட சுவாமி படம் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்,


# "சிங்கள கட்சிகள் எதுவும் தமிழரசு கட்சியை ஏற்காது"

### அளவெட்டியில் ஜி.ஜி.

(நமதுமாவிட்டபுரம்நிருபர்)

"சிங்களக் கட்சிகள் எதுவும் இம்முறை தமிழரசுக் கட்சியை ஏற்கமாட்டாது. இந்நிலையில் தமிழரசார் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி எப்படித் தமிழினத்திற்குள் சம அந்தஸ்தை ஏற்படுத்துவர். இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி வெற்றிபெறவே இப்படியான கருத்தை மக்கள் முன் சமர்ப்பிக்கின்றனர்."



இவ்வாறு அளவெட்டியில் காங்கேசன்துறை தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் திரு. ரி. திருநாவுக்கரசுவை ஆதரித்து நடந்த மாபெரும் பிரசாரக் கூட்டத்தில் கலந்துரையாற்றுகையில் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

வழக்கறிஞர் திரு. எஸ். இளையதம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்: "யு. என். பி. யில் நான் அங்கம் வகிக்கும்போது தமிழின விரோதி என என்னை வசைபாடிய தமிழரசார் அதே யு. என். பி.யுடன் ஒப்பந்தம்செய்து பின் கதவால் சென்று மந்திரிப் பதவி பெற்றனர்.

1948ம் ஆண்டு நான் கூறிய கொள்கைகளை இன்று ஏற்றுள்ளனர் தமிழரசார். இதையிட்டு அவர்கள் அரசியலிலிருந்து விலகவேண்டும் என்ருர்.

வழக்கறிஞர் திரு. மோதிலால் நேரு பேசுகையில்: "காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலையில் வேலை பார்த்ததற்காக ஊழியர்களில் 240 பேரை நிரந்தரமாக்கியதாகக் கூறி, தந்தை செல்வா வாக்கு வேட்டையாடுகிருர். இது இவர் செய்தது என்று கூறுவது முழுப் பொய்யாகும்" என்ருர்.

வேட்பாளர் திரு ரி. திருநாவுக்கரசு உட்படப் பலர் உரையாற்றினர்.

## 'ஒப்பந்தம் செய்வதால் உரிமைகளை பெறமுடியாது

### அளவெட்டியில் 'சுந்தரர்'

(நமது மாவிட்டபுரம் நிருபர்)

'தமிழ் மக்கள் சுதந்திரதாகம் உள்ளவர்கள் என்பதை சிங்களவர் அறியச் செய்யவும், தமது விடுதலைக்காக போராட தமிழா தயாராகவுள்ளனர் என்பதை உலகறியச் செய்யவும் ஆட்சிமன்றமே சிறந்த சாதனமாகும். இச்சாதனத்தை தக்கமுறையில் பயன்படுத்தி தமிழினம் தலைநிமிர்ந்து வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தவே நான் இம்முறை தேர்தலில் ஈடுபட்டுள்ளேன்.'

இவ்வாறு காங்கேசன்துறை தொகுதியில் ஈழத் தமிழ் இன சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடும் திரு. ஸி. சுந்தரலிங்கம் தம்மை ஆதரித்து அளவெட்டியில் நடந்த பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றியபோது கூறினார்.

திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்:

ஒற்றையாட்சியோ, சமஷ்டியோ எம் இனத்துக்கு பலனளிக்காது ஈழத்தமிழரசு-தனியரசே தன்மானத்துடன் நாம் வாழ வழிவகுக்கும்.

ஈழத்தமிழ்த் தலைவர்கள் தமிழரை தக்கமுறையில் வழிநடத்த தவறிவிட்டனர் என்று ஈழச்சரித்திரம் குறை கூறக்கூடாதே என்பதும் நான் தேர்தலில் போட்டியிடுவதற்கு காரணமாகும்.

தற்போது மக்கள் மத்தியில் ஓர் அரசியல் திருப்பம் ஏற்பட்டிருப்பது கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். ஆனல் பிறிதொரு இனத்துக்கு எம்மினம் அடிமைப்பட்டிருப்பதுதான் கவலைக்குரியது. அடிமைப்படாமல் சுயமரியாதையுடன் வாழ ஒரே வழி தனியரசே.

இன்று ஒரே கட்சியுடனும் நாளை இன்னுமொரு கட்சியுடனும் ஒப்பந்தம் செய்வதாலோ உறுதிமொழி பெறுவதாலோ பேரம் பேசுவதாலோ இழந்த உரிமைகளைப் பெறமுடியாது: இதற்கு சான்று எமது அரசியல் தலைவர்கள் அடைந்துள்ள ஏமாற்ற நிலையே என்ருர்

## 'இன ஒற்றுமையே நாட்டின் அபிவிருத்திக்கு அவசியம்'

—டொறிக்டீசூசா

பருத்தித்துறை, புதன்

"தேசிய இன ஒற்றுமையென்பது உயர்மத்திய வர்க்கத் தலைவர் பேரம்பேசி அமைச்சர் பதவிகளைத் தம்முட் பங்கிடுவதனுல் ஏற்படுவதில்லை. நாட்டுத் தொழிலாளி-விவசாயிகளும், சாதாரண பொது மக்களும் பொது இலட்சியங்களின் கீழ் ஒன்றுதிரள்வதன் மூலமே தேசிய இன ஒற்றுமை உருவாக முடியும். தேசீய இன ஒற்றுமை இருந்தால்மட்டுமே சோஷலிச பொருளாதார விருத்தி ஏற்பட இடமுண்டு" என்று இலங்கை சமசமாசப் பிரமுகர் திரு. டோறிக் டீசூசா நேற்று மாலை வதிரி சமசமாஜ வாலிபர் முன்னணிக் கூட்டத்திற் பேசுகையிற் குறிப்பிட்டார்.

டாக்டர் ஒஸ்மண்ட் ஜயரத்ன பேசுகையில் கூட்டு முன்னணியினரின் கொள்கைத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள மக்கள் சபைகள் இந்நாட்டு மக்களுக்குப் புதியதொன்றல்லவென்றும், 1965- வரவு செலவுத் திட்ட விவாதத்தில் நிதியமைச்சர் வன்னிநாயக்காவே இவ்வித மக்கள் சபைகள் நிறுவவேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளாரென்றும் கூறினர். பொருளாதார முன்னேற்றத்தின்மூலம் இன ஒற்றுமைக்கும் இதர பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியுமென்றும் டாக்டர் ஜயரத்ன கூறினர். டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி தலைமைவகித்தார்.

## திருமண அழைப்பு

### மகான் — லலிதா

நீராவியடி கா. விசயரெத்தினம் தம்பதிகளின் மகன் மகாலிங்கம் அவர்களுக்கும் (பிலிட நேசிங் ஹோம்), வி. நடராசா தம்பதிகளின் மகள் லலிதாதேவிக்கும் வைகாசி3-ந்திகதி(17-5-70) மாலை 6 மணிக்கும் 8மணிக்குமிடையிலுள்ள நல்வேளையில் திருமணம் நடைபெறும். சுற்றத்தவர்களையும், நண்பர்களையும் அழைக்கின்றேம். திருமதி ச. விசயரத்தினம், 40, கல்லூரிவீதி, யாழ்ப்பாணம். 2225


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மே மாதம் 13-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.


"சிறுபான்மை தமிழருக்கு

## வீடமைப்பு திட்டத்தை உருவாக்கியதுஎமதுகட்சியே"

— வி.தர்மலிங்கம்

நல்லூர், திங்கள்

சிறுபான்மைத் தமிழர்களின் இன்னல்களை நீக்க முதன் முதல் அவர்களுக்கென அச்சுவேலியில் ஒரு வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கிய சாதனை தமிழரக்கட்சியையே சேரும் சிறுபான்மைத் தமிழருக்கென ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான காணியை எடுத்துக்கொடுத்து வீட்டையும் கட்டுவிக்க வேண்டிய ஒழுங்குகளைச் செய்ததும் தமிழரசுக்கட்சியே'



கோப்பாய் தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளையை ஆதரித்து புன்னலைக்கட்டுவனில்நடந்தபிரசாரக்கூட்டத்தில் முன்னுள் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

வழக்கறிஞர் மு இளையதம்பி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், பருத்தித்துறை முன்னுள் எம். பி, திரு. கே. துரைரத்தினம் பேசும்போது கூறியதாவது:

வட மாகாணத்திலுள்ள விவசாயிகளின நன்மைக்காக வெண்காய உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் நல்லவிதை வெங்காயத்தை இறக்குமதி செய்து உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றினேம்.

திரு சி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:-

1945-ல் தமிழ்க்காங்கிரஸ் செய்ததைத்தான் தமிழரசுக்கட்சி 65-ல் செய்ததென்று மாற்றுக் கட்சியினர் அறிவு கெட்டதனமாக பொய்ப்பிரசாரம் செய்கின்றூர்களே, அன்று நடந்ததென்ன இன்று நடந்ததென்ன? 1945-ல் சோல்பரி கமிஷர் முன் சாட்சியம் அளித்துள்ளோம், 1948-ம் ஆண்டில் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவை எதிர்த்துச் செய்த பிரசாரத்தின் மூலம் காங்கிரசார் ஆட்சிமன்றம் சென்றபோத பிரதமரையும், பிரதமர் கட்சியையும் எதிர்த்து இனிமேல் பயனில்லை என்று கண்டு ஒன்றரை மந்திரிப்பதவியைப் பெற்று தமிழினத்தின் உரிமையை விற்ருர்கள் அந்த மந்திரிப் பதவியைப் பெற்ற உபகாரத்திற்காக 10 லட்சம் மலையக மக்களின் உரிமைகளை விற்றனர், தமிழ்ப் பிரதேசத்தில் அரைவாசிப்பங்கை விற்க முற்பட்டார்'

திருவாளர்கள் வி. கிருஷ்ணசாமி க. நித்தியானந்தம், கே லோகேஸ்வரன் உடபடப் பலர் உரையாற்றினுர்கள்

## "பல்கலைக்கழகம் அமைக்க சளையாது முயற்சிப்போம்"

(நமது நிருபர்)

"யாழ்ப்பாணத்து தமிழ் மாணவர்களுக்கு இங்கு ஓர் பல்கலைக்கழகமின்றிக் கஷ்டப்படுகின்ருர்கள் இங்கு ஓர் தமிழ் பல்கலைக்கழகத்தை அமைக்க நாம் சகல முயற்சிகளையும் சளையாது செய்யவேண்டும் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் வரும்."

இவ்வாறு யாழ். மாநகர சபைமுதல்வர் திரு. ரி.எஸ். துரைராசாவுக்கும் பாரியாருக்கும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் அளித்த விருந்துபசாரத்தில் திரு. ரி. எஸ். துரைராசா மேற்கண்டவாறு கூறினுர்.

விருந்துபசாரம் 'குமாரசாமி' மண்டபத்தில் நடந்தது குமாரசாமி மண்டபத்தைமேலும் வசதிசெய்து சிறந்தமண்டபமாக அமைத்துத்தரும்படி இந்துக் கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் மாநகர சபைத் தலைவரிடம் வேண்டிக்கொண்டார்.

வழக்கறிஞர் திரு. எஸ். ஆர். கனகநாயகம், யாழ். மாநகரசபை உறுப்பினர் திருமதி அந்தோனியா சுவாமிநாதன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

(கு. வி. ம.)

## திரு. இராமசாமி கவுண்டர் மறைவு

சென்னை, மே 12

தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் திரு, இராமசாமிகவுண்டர் தமது 64வது வயதில் இன்று காலமானுர்.

இவர் சென்னை பல்கலைக்கழக உறுப்பினருமாவர் தமிழில் நூல்களையும் எழுதி உள்ளார்.

தமிழகக் கல்விஅமைச்சர் திரு. நெடுஞ்செழியன், திரு. இராமசாமிகவுண்டரின் மறைவு பேரிழப்பாகும் என்றுகுறிப்பிட்டுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org